யாழ்ப்பாண மாவட்ட கலாசார அதிகார சபையின்

# கலை மாருதம்

சமூக மாற்றத்திற்கான இலக்கியப் படைப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசனநூலகம்
14 MAY 2019
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்ட கலாசார அதிகார சபையின்

# கலை மாருதம்

-சமூக மாற்றத்திற்கான இலக்கியப் படைப்புக்கள்-

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாவட்ட கலாசார அதிகார சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
2018

92/18(P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கலை மாருதம் |
| மொழி | : | தமிழ் |
| ஆண்டு | : | 2018 |
| பக்கங்கள் | : | 96 |
| உரிமை | : | வெளியீட்டாளருக்கே! |
| வெளியீடு | : | யாழ்ப்பாண மாவட்ட கலாசார அதிகார சபை |
| பிரதிகள் | : | 500 |
| அச்சுப்பதிப்பு | : | அன்றா பிறிண்டேர்ஸ், 379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழினுள்ளே

1. அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி............ v

2. நூன்முகம் ............ vi

**ஓவியங்கள்**

3. இளைய தலைமுறையினரின் நல்ல சிந்தனையுடனான சமூக மாற்றத்தினை ஏற்படுத்துவதன் பங்கேற்பு

4. இளைஞர்களின் எதிர்கால சமூக மாற்றத்தினை நோக்கி

5. இளையவர்களும் சமுதாய மாற்றமும்

6. சமுதாய மாற்றமும் தொழில் முறையும்

7. இயற்கை நல வாழ்வு

8. முதியோரை மகிழச் செய்வோம்

**கட்டுரைகள்**

9. இன்றைய இளையோரை நல்வழிப்படுத்துவதில் சமூகத்தின் பங்கு............ 1

10. எதிர்கால சமூக மாற்றத்தினை தோற்றுவிக்க இன்றைய இளைஞர்களைத் தயார்ப்படுத்துவோம்..... 8

11. இளையோரும் இலங்கையும்............ 15

12. இன்றைய இளையோர்களின் நல்ல சிந்தனையுடனான சமூக மாற்றத்தினை நல்வழிப்படுத்துவதில் சமூகத்தின் பங்கேற்பு............ 24

13. நல்ல சிந்தனையுடனான இளையோர் சமூகம்............ 30

14. இன்றைய நற்சிந்தனையுடைய இளைஞனும் நாளைய சமுதாயமும் ............ 36

15. இளைஞர் கையில் எதிர்காலம் ............ 44

**கவிதைகள்**

16. விழித்தெழுவோம் விழிப்பாயிருப்போம்............ 51

17. படைப்போம் புதிய சமூகம் ............ 53

18. உண்மையுடன் உழைப்போம்............ 55

**பாடலாக்கங்கள்**

19. உலகின் தலைவர்கள் நீங்களே ............ 59

20. உயர்வான வழியொன்று நீர் காணுவீர் ............ 61

21. மண் வாசம்............ 63

**சிறுகதைகள்**

22. சமூகம் விதைத்த தீ............ 67

23. மாறும் காலங்கள்............ 75

24. நேரசூசி............ 81



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்.

## வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண மாவட்டக் கலாசார அதிகாரசபை மாவட்ட கலை இலக்கிய விழாவில் வெளியீடு செய்யும் "கலை மாருதம்" என்னும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாண மாவட்டக் கலாசார அதிகாரசபை மாவட்ட கலை இலக்கிய விழாவினை முதன் முதலில் நடத்துவது மிகவும் சிறப்புக்குரியது. இன்றைய இளையோர்களின் நல்ல சிந்தனையுடனான ஆக்கமுயற்சி எதிர்காலத்தில் சமூக மாற்றத்தினை நோக்கிய ஆக்க இலக்கியங்களாக அமையும். இதனால் கலைகள் வளர்த்தெடுக்கப்படும். இதனடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட யாழ். மாவட்ட இலக்கிய மற்றும் ஒவியப் போட்டித் தொடரில் கட்டுரை, சிறுகதை, கவிதையாக்கம், பாடலாக்கம் மற்றும் ஓவியம் ஆகிய போட்டிகளில் முதன் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டவர்களை கௌரவிக்கும் நோக்கோடு அவர்களின் ஆக்கங்களை "கலை மாருதம்" என்ற தலைப்பில் நூல் வடிவமாக வெளிக்கொணர்வது இலக்கிய கர்த்தாக்களை உருவாக்கும் கன்னி முயற்சி எனக் குறிப்பிடமுடியும். இவ்வாறான முயற்சி தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும். இதனை யாழ்ப்பாண மாவட்டக் கலாசார அதிகாரசபை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் என்னும் நம்பிக்கையோடு மலரும் "கலை மாருதம்" என்னும் இதழ் வெளிவர உழைத்த யாழ்ப்பாண மாவட்ட கலாசார அதிகாரசபையினரை பாராட்டி "கலை மாருதம்" நல்ல சமுதாய மாற்றத்தினை உருவாக்க நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

நன்றி

**நா. வேதநாயகன்**

அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூன்முகம்

யாழ்ப்பாண மாவட்டக் கலாசார அதிகாரசபை அமைதியான, ஒழுக்கமான, ஆரோக்கியமான சமுதாயத்தை முன்னிலைப்படுத்தும் பேரெண்ணத்தோடு, "இன்றைய இளையோர்களின் நல்ல சிந்தனையுடனான எதிர்காலத்திற்கான சமூக மாற்றத்தினை நோக்கிய பங்களிப்பில் இலக்கியம் மற்றும் ஓவியக் கலை" என்ற தொனிப்பொருளில், மாவட்ட மட்டத்தில் கட்டுரை, சிறுகதை, கவிதையாக்கம், பாடலாக்கம், ஓவியம் ஆகிய ஐந்து துறைகளில், பாடசாலை மாணவர்களுக்கும் கலைஞர்களுக்குமிடையே போட்டிகளை நடாத்தும் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

15 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கிடையேயும், 18 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்களுக்கிடையேயும் மேற்படி போட்டிகளை நடாத்தி, அவற்றின் மூலம் சமுதாய மறுமலர்ச்சியைத் துரிதப்படுத்தி, எதிர்கால உலகின் மன்னர்களான இளையோரை இலக்கிய சிந்தனைகளோடும், ஒழுக்கமான வாழ்வியலோடும் ஒன்றியிருக்கச் செய்வதே எமது பிரதான நோக்காகும்.

எந்த ஒரு பண்பாடோ, சமயமோ, நிறுவனமோ, நிலைத்து நிற்க வேண்டுமானால், காலத்திற்குக் காலம் தோன்றுகின்ற மாறுதல்களுக்கு முகங்கொடுத்தாக வேண்டும். அந்தவகையில், நல்ல மாற்றங்கள் நல்ல பயனைப் பெற்றுத்தரும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. ஆனால், எமது சமுதாயத்தில் எமது வாழ்வியலுக்கும் எமது பண்பாட்டு விழுமியங்களுக்கும் பொருத்தமில்லாத சமுதாய மாற்றங்கள் ஏற்பட்டு, எதிர்கால இளைஞர்களின் நல்லாக்க முயற்சிகள் நலிவடைந்துவிடுமோ? என சமூக ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுவரும் நிலையில், எமது யாழ்ப்பாணத்து பாரம்பரியங்களையும் இலக்கியச் சிறப்புக்களையும் பேணிப்பாதுகாக்கும் ஒரு சிறு முயற்சியே "கலை மாருதம்" என்ற இந்த நூலின் பிரசவமகும்.

மாவட்ட மட்டப் போட்டிகளில், முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்ட ஆக்கங்களை, நூலில் உள்ளடக்குவது என்ற மாவட்டக் கலாசார அதிகாரசபையின் தீர்மானத்திற்கு அமைவாக இந்நூலில், 7 கட்டுரைகளும், 6 ஓவியங்களும், 3 கவிதைகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 பாடலாக்கங்களும், 3 சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன. இவ் ஆக்கங்களை வாசிக்கும் மாணவர்கள் மற்றும் இளங்கலைஞர்கள் எதிர்காலங்களில் பயனுள்ள, பெறுமதியான இலக்கிய முயற்சியில் ஈடுபடவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

மிகவும் குறுகிய காலத்தில் நூலாக்கப்பட்டுள்ள இந்தக் "கலை மாருதம்" தொடர்ச்சியாக சமுதாய மாற்றத்திற்கான குரலாக ஓங்கி ஒலிக்க வேண்டும் எனப்பிரார்த்தித்துக்கொண்டு, இந்தப் பயன்தரும் முயற்சியில் அர்ப்பணிப்போடு பணியாற்றிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மிகவும் குறுகிய காலத்தில் இந்நூலினை வடிவமைத்து வழங்கியதோடு அனுசரணை வழங்கி உதவிய 'அன்றா' நிறுவனத்தினருக்கும், ஏனைய அனுசரணையாளர்களான 'அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்', 'US Hotel' நிறுவனம், 'சிவா நறுமணப் பூங்கா' ஆகியோருக்கும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நிறைவாக, போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கும் இந் நூலாக்க முயற்சியிலில் ஒத்துழைத்தோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நூலுருவாக்கம் தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துக்களையும் மேலான ஆலோசனைகளையும் எமக்கு வழங்கி உதவுவீர்கள் என எதிர்பார்த்து, உலகத் தமிழர்களின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் இலக்கியப் பெருமைகளை முன்னிலைப்படுத்த அனைவரையும் எம்மோடு கரம்கோர்த்துச் செயற்படும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

**"கலை இலக்கிய, பண்பாட்டு விழுமியங்களை நேசிக்கும் அறிவாலுயர்ந்த சமதாயத்தை முன்னிலைப்படுத்துவோம்"**

**திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம்,**
யாழ்ப்பாண மாவட்டக் கலாசார அதிகாரசபைத் தலைவரும்,
மேலதிக மாவட்டச் செயலளரும்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



# திறந்த பிரிவு-முதலாமிடம்

செல்வி. சர்மிளா சந்திரதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திறந்த பிரிவு-இரண்டாமிடம்

செல்வன். யோகரட்ணம் பானுசியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திறந்த பிரிவு-மூன்றாமிடம்: செல்வி. ஆர்த்திகா கேதீஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட்டுப்படுத்தப்பட்ட பிரிவு-முதலாமிடம்

செல்வன். ரதிகரன் ராகவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டுப்படுத்தப்பட்ட பிரிவு-இரண்டாமிடம்: செல்வன். அற்றியன் ஈஸ்வரதாஸ் பமிஸ்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட்டுப்படுத்தப்பட்ட பிரிவு-மூன்றாமிடம்: செல்வி. பவித்ரா குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கட்டுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்த பிரிவு

# இன்றைய இளையோரை நல்வழிப்படுத்துவதில் சமூகத்தின் பங்கு

திரு. ஆனந்தமயில் முல்லைத்திவ்வியன்
கொற்றன்தறை, பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

முதலாமிடம்

இன்றைய உலகம் அதீத வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்றால் அதில் இளைஞர்களின் பங்கு மிக முக்கியமானதொன்றாகும். காரணம் எதையும் செய்து முடிக்க வேண்டும், எதையும் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பும் ஒரு இளைஞனிடம் இருப்பதுதான். எனவே ஒரு சமூகத்தை வளர்ச்சிப் பாதையில் இழுத்துச் செல்லவேண்டு மென்றால் அது அந்தச் சமூகத்தின் இளைஞர்கள் கையில் தான் இருக்கின்றது. அப்படிப்பட்ட இளைஞர்களை உருவாக்குவது இந்த சமூகத்தின் கடமையாகும். இளைய சமுதாயம் தான் நாட்டின் முதுகெலும்பு என்பதற்கேற்ப இன்றைய இளைஞர்கள் தங்களது சக்தியை நல்வழிப்படுத்தி வருதலில் சமூகத்தின் கரிசனை முக்கியமானதொன்றாகும். குழந்தைப் பருவத்திலே அவர்களை நல்வழிப்படுத்தி வருதலில் பெற்றோர்களின் பங்கு அதிகம் உள்ளது. இன்றைய இளைஞர்களிடம் சமூக அக்கறை இல்லை. அவர்களது வாழ்க்கையே முகநூல், இணையம் என்றாகிவிட்டது. பல இளைஞர்கள் போதைவஸ்து, குழு மோதல் போன்றவற்றுக்கு அடிமையாகி விடுகின்றார்கள். இதனால் அவர்களுடைய குடும்பம் பாதிப்படைவதோடு சமூகமும் பாதிப்படைகிறது. ஆகவே இளைஞர்களின் தவறான பாதையை தடுத்து நிறுத்தி நல்வழிப்படுத்தக்கூடிய சக்தியாக சமூகம் திகழவேண்டும்.

இன்றைய இளைஞர்கள் மிகத் திறமைசாலிகள். இலகுவாக புரிந்துகொள்ளும் திறமை படைத்தவர்கள். புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளும் ஆர்வம் கொண்டவர்கள். புரியாததை புரியவில்லை என்று தயங்காமல் சொல்லக் கூடியவர்கள். கல்வியில் முன்னேறியுள்ளார்கள். கணினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பத்தில் வேலைமயமாக்கல் நிகழ்வதால் இளைஞர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் பணி செய்கின்றார்கள். அவர்களின் ஆற்றல் அளப்பரியது. அதீத திறமைகளுடன் கடின உழைப்பினை வழங்கத் தயாராக உள்ளார்கள். ஆண்களும், பெண்களும் இவற்றில் சரி சமமாக உள்ளனர். இவையெல்லாம் நமது இளவல்களை பற்றிய நல்ல செய்திகள். இதேபோல இன்றைய இளைஞர்களின் தவறான செயற்பாடுகளும், செய்திகளும் நிறையவே இருக்கின்றன. புகைப்பழக்கம், போதைப்பழக்கம் உள்ளவர்கள் அதிகரிக்கும் அபாயம் தெரிகிறது. குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் கஞ்சா, மாவா, சாராயம், சிகரெட் போன்றவற்றின் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. களவு, கொலை, கற்பழிப்பு போன்றவற்றைச் செய்ய துணிந்தவர்களாக இவர்கள் மாறி விடுகின்றார்கள். ஆகவே, இவற்றைத் தடுத்து இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டிய கடமை சமூகத்துக்கு இருக்கிறது. குறிப்பாக போதைப்பொருள் பாவனை சுற்றுச்சூழலில் புழங்குவதை தடை செய்வதற்கான நடவடிக்கையை சமூகம் எடுக்க வேண்டும். போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டு இளைஞர்கள் தவறான பாதைக்கு செல்வதைத் தடுக்க வேண்டியது அவசியமாகும்.

இன்றைய இளைஞர்களிடம் 'செல்போன்' மோகம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் இவர்கள் இளம் வயதிலே காதல் வயப்பட்டு கல்வி, விளையாட்டுத் துறைகளில் சாதிக்கத் தவறி விடுகின்றார்கள். பாடசாலைக் கல்வியைக் கூட நிறைவு செய்ய முடியாத நிலைக்கு தங்கள் கல்வித் தடத்தை தொலைத்து விடுகிறார்கள். இளைஞர்கள் கலாசார சீரழிவுகளில் ஈடுபடுவதற்கு முக்கியமான காரணி தொலைபேசி மோகம் தான். இவர்கள் இணையப் பாவனையில் மூழ்கி தவறான வழியில் செல்ல இதுவும் ஒரு காரணமாகும். ஆகவே சமூக ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் வழங்கி இளைஞர்களை நல்வழிப்படுத்தலாம்.

குறிப்பாக இன்றைய இளைஞர்கள் விளையாட்டில் ஆர்வம் குறைந்தவர்களாக காணப்படுகின்றார்கள். விளையாட்டுக் குழுக்கள் இல்லை, விளையாட்டுக் கழகங்கள் இல்லை சுயநலமே பெருகிவிட்டது. இதனால் இளைஞர்களின் மன உறுதி, உடல் ஆரோக்கியம் என்பன சிதைக்கப்படுகின்றது. ஆகவே, கிராமப்புறங்களில் விளையாட்டுக்கழகங்கள் தொடர்ந்து இயங்கு நிலையில் இருக்க வேண்டும். அப்போதுதான் இளைஞர்கள் விளையாட்டுத்துறையில் அக்கறை கொண்டவர்களாக மாறுவார்கள். இவற்றை விட சில இளைஞர்கள் குடும்பத்தில் ஏழ்மை நிலையில் இருப்பார்கள். அவர்கள் விளையாட்டுத்துறையிலோ கல்வித் துறையிலோ சாதிக்க வேண்டும் என்ற இலட்சியம் இருக்கும். ஆனால், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான பண வசதியோ, வாய்ப்புக்களோ அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதனால் இளைஞர்கள் மனமுடைந்தவர்களாக கனவுகளையும், இலட்சியங்களையும் தொலைத்து விட்டு கூலி வேலைகளுக்குச் செல்கிறார்கள். போதைப் பாவனைக்கு அடிமையாகிறார்கள். ஆகவே, ஏழ்மையான இளையோர்கள் கல்வித்துறையில், விளையாட்டுத்துறையில் சாதிப்பதற்கான வாய்ப்புக்களையும், நிதி உதவிகளையும் சமூகம் வழங்கி உதவி செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது தான் பல இளையோர்கள் சாதனைகளை நிகழ்த்தக்கூடிய விளையாட்டு வீரர்களாக, கல்விமான்களாக உருவாகுவார்கள். ஆகவே தான் ஒவ்வொரு இளைஞனையும் கவனிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் சமூகத்திற்கு இருக்கிறது. இதனைவிட இந்திய குடியரசின் முன்னாள் ஜனாதிபதியான அப்துல்கலாம், சுவாமி விவேகானந்தர் முதலானோரின் சிந்தனைகளை இளையோர்கள் மத்தியில் விதைக்க வேண்டும்,

குறிப்பாக அப்துல்கலாம் அவர்களின் சிந்தனைகளில் ஒன்றினைக் குறிப்பிடலாம்

'வாழ்க்கை என்பது
ஒரு சந்தர்ப்பம் - நழுவவிடாதீர்கள்
ஒரு கடமை - நிறைவேற்றுங்கள்
ஒரு இலட்சம் - சாதியுங்கள்
ஒரு சோகம் - தாங்கிக் கொள்ளுங்கள்
ஒரு போராட்டம் - வென்று காட்டுங்கள்
ஒரு பயணம் - நடத்தி முடியுங்கள்...."

இவை போன்ற சிந்தனைகளை இளையோர் கழகங்கள், விளையாட்டுக்கழகங்கள், இலக்கிய மன்றங்கள் போன்றவற்றின் ஊடாக விதைக்க வேண்டும். அப்போதுதான் இளையோர்களிடம் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுடைய மனங்களில் குடிகொள்ளும், இவை அவர்களை நல்வழியில் பயணிப்பதற்கு உறுதுணையாக இருக்கும்.

குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் இளையோர்கள் இணையத்தள பாவனையில் மூழ்கியிருக்கிறார்கள். இதனால் அவர்கள் கிராமப்புறங்களிலோ நகர்ப்புறங்களிலோ இருக்கின்ற நூலகங்களுக்கு செல்வதைக் குறைத்துவிட்டார்கள். இதனால் இளையோர்களிடம் புத்தகங்களை வாசிக்கின்ற பழக்கம் குறைந்து விட்டது. வாசிப்பு பழக்கம் குறையுமாக இருந்தால் அவர்கள் பரந்துபட்ட அறிவை நுகருகின்ற வாய்ப்புக் குறைந்துவிடுகின்றது. ஆகவே, இளையோர்களிடம் வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துகின்ற நடவடிக்கைகளை சமூகம் செய்ய வேண்டும். நடமாடும் நூலக வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். குறிப்பாக அப்துல்கலாமின் வாழ்க்கை வரலாறு, மகாத்மாகாந்தியின் சத்தியசோதனை, சுவாமி விவேகானந்தரின் சரிதம் போன்ற நூல்களை வாசிக்கின்ற பழக்கத்தை அவர்கள் கைக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இளையோர்கள் வாசிப்பின் மீது காதல் கொள்வார்கள். பூரண வாசிப்பின் ஊடாக அவர்கள் தீய பழக்கங்களுக்கு அடிமையாகாதிருப்பார்கள்.

'பூரண வாசிப்பின் ஊடாக மனிதன் முழுமை அடைகின்றான்" என்ற சிந்தனையை இளைய சமூகத்தின் மீது விதைத்தால் சமூகம் மறுமலர்ச்சி காணும். ஆகவேதான் அவர்களுக்கான வாசிப்புப் பழக்கத்தை சமூகம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதனூடாக இளைஞர்களின் இணையத்தளப் பாவனை குறைந்துவிடும். இவற்றை எல்லாம் விட இளையோர்கள் மத்தியில் பல போட்டிகளை நடாத்தி அவர்களை ஊக்குவிப்பதன் ஊடாக அவர்களுடைய திறமைகளை இனங்கண்டு கொள்ளமுடியும். அவர்களுடைய திறமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பதற்கான வாய்ப்புக்களாக இப்போட்டிகள் அமையும். இளையோர்கள் மேல் சமூகம் கரிசனை கொண்டு செயற்படுமாக இருந்தால் அவர்கள் எவ்விதமான தீய பழக்கத்துக்கும் அடிமையாகாமல் நல்வழியில் பயணிப்பார்கள். அவர்களுடைய சிந்தனைகள் நல்ல சிந்தனைகளாக இருக்க வேண்டும் என்றால் சமூகம் அவர்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் எமது பிரதேசம் வெப்பத்தால் பாதிக்கப்படுகின்றது. இளைஞர்களை நல்வழிப்படுத்தி மர நடுகையை ஊக்குவிக்கின்ற செயற்றிட்டங்களை சமூகம் முன்னெடுக்குமாக இருந்தால் இதில் இளையோர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கும். இளையோர்கள் இந்த மர நடுகையில் ஈடுபடுவதன் ஊடாக இந்த தேசத்தை பசுமைப்புரட்சிக்கு இட்டுச் செல்லலாம். சமூகமானது கிராமப் புறங்களில் பசுமைப்புரட்சிக்கு இட்டுச் செல்லலாம். சமூகமானது கிராமப்புறங்களில் மரச் செய்கைகளை ஊக்குவித்து இளைஞர்களுக்கு மர நடுகையை செயற்படுத்த இடமளிக்க வேண்டும். குறிப்பாக கிராமப் புறங்களில் இந்த மரநடுகை தொடர்பான விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை சமூகம் முன்னெடுக்க வேண்டும். மரநடுகை மூலம் நோபல் பரிசு பெற்ற ' வங்காரி மாத்தாயின்" சிந்தனைகளை துண்டுப்பிரசுரங்களாக இளையோர்கள் மத்தியில் கொண்டு செல்வதன் ஊடாக அவர்களுடைய சிந்தனைகள், செயற்பாடுகள் நல்லவையாக மாற்றம் பெறும். ஆகவே இளையோர்களின் சிந்தனைகள் நல்லவையாக இருக்குமானால் அவர்கள் வாழுகின்ற கிராமப்புறங்கள் எழுச்சி காணும். இந்த எழுச்சியை ஏற்படுத்த வேண்டிய நல்வழியினை இந்தச் சமூகம் இளைஞர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தற்போதைய சூழலில் பல இளைஞர்கள் எதிர்காலத்தில் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் வேலையற்று, தொழில்வாய்ப்பு இன்றி இருக்கிறார்கள். இத்தகைய இளைஞர்கள் இனங்கண்டு அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க சமூகம் முன்வரவேண்டும். இளையோர்கள் வேலைவாய்ப்பு இன்றி மனச்சோர்வு அடைந்து விரக்தியடைந்து இருக்கிறார்கள். ஆகவே இந்த இளையோர்களுக்கான தொழில் பயிற்சிகளை உளவள ஆலோசனைகளை சமூகம் வழங்குமாக இருந்தால் இந்த இளையோர்கள் எதிர்காலத்தில் தங்களுடைய சொந்த வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் நல்லதொரு உயர் மட்டத்தை அடைவார்கள். இதனூடாக நல்லதொரு சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதற்கு சமூகத்தின் பங்களிப்பு அவசியமானதாகும்.

உலக மயமாக்கலுக்கு ஏற்ப நகரப் புறங்கள் வளர்ச்சியடைகின்ற அதேவேளை கிராமப் புறங்களில் சில இடங்களில் வறுமை நிலை காணப்படுகின்றது. இத்தகைய வறுமை ஒழிப்புத் திட்டத்தை மேற்கொள்ள இளைஞர்களை வழிப்படுத்த வேண்டும். குறிப்பாக சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், இளைஞர் கழகங்களினூடாக சமூக சேவையில் ஈடுபடுத்த வேண்டும். இதனூடாக இளையோர்களின் மத்தியில் பலருக்கு உதவுகின்ற மனப்பான்மை வளரும், அத்தோடு சமூகம் மீதான பற்றும், தானம் செய்கின்ற மனப்பான்மையும் வளரும். இத்தகைய சூழ்நிலையில் இளையோர்கள் ஒன்றாகச் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய செயற்பாட்டை மேற்கொள்ளுகின்றபொழுது அவர்களுக்கிடையே சாதி, மத, இன ரீதியான பாகுபாடுகள் அற்ற நிலையில் ஏற்படும். இதனூடாக சகோதரத்துவம், பிற உயிர்கள் மீதான இரக்கம் போன்ற நல்ல பண்புகள் வளர வாய்ப்புண்டு. இதற்கு சமூகத்தின் பங்களிப்பு அவசியமானதாகும்.

சமூகத்தில் என்ன நடக்கிறது நாம் எப்படி வாழ்கிறோம் என்பதை இளையோருக்கு தெளிவுபடுத்த வேண்டிய தேவை சமூகத்துக்கு இருக்கிறது. ஆகவே இத்தகைய ஆலோசனைகளை அவர்களுக்கு வழங்கி அவர்களை அவர்களே சுய பரிசோதனை செய்கின்ற நிலையை தோற்றுவிக்கின்ற பொறுப்பு சமூகத்துக்கு இருக்கிறது. இதனைவிட தங்களுடைய மொழி, பண்பாடு, கலாசாரம் போன்றவற்றைப் பாதுகாக்க வேண்டிய தேவைப்பாடு இளையோருக்கு இருக்கிறது என்பதை சமூகம் இளையோருக்கு சுட்டிக்காட்ட வேண்டும். மொழியின் பயன்பாடு, பாரம்பரிய நடை உடை பாவனை முறைகள் எங்களுடைய பண்பாட்டுக் கூறுகள், விழுமியங்கள் போன்றவற்றைக் பறைசாற்றுகின்ற கலை கலாசார நிகழ்வுகளை நடாத்துவதன் ஊடாக இளையோர்களின் நல்ல சிந்தனை வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பாற்ற முடியும். இதனூடாக இளையோர்கள் எதிர்காலத்தில் தங்களுடைய பண்பாடு, கலாசார விழுமியங்களை இது வாய்ப்பாக அமையும் . அதேபோல இன்றைய இளையோர்கள் அதிகளவு சாதிக்கத் துடிக்கும் எண்ணமுடையவர்கள் விஞ்ஞானம், அறிவியல், கலை, விளையாட்டு, சினிமா போன்ற பல துறைகளிலும் பயணிக்க விரும்புவார்கள். அவர்கள் தேசிய, சர்வதேச ரீதியில் சாதிப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சாதி, இன, மத பிரிவுகளைக் காரணம் காட்டி எந்தவொரு இளைஞனுடைய அல்லது யுவதியினுடைய திறமைகளை மழுங்கடிக்க இடமளியாது திறமைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அப்துல் கலாம் கூறியது போல,'இளைஞர்களே கனவு காணுங்கள்" 'உனது பிறப்பு சம்பவமாக இருக்கலாம் ஆனால் இறப்பு சரித்திரமாக இருக்க வேண்டும்" என்ற நல்ல சிந்தனைகளை, முன் மாதிரிகளை சாதிக்கத் துடிக்கும் இளையோர்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு சமூகத்துக்கு இருக்கிறது. இதனூடாக சாதிக்கத் துடிக்கும் இளையோர்களை நல்ல மனநிலையில் வைத்திருக்க முடியும். அவர்கள் பல வெற்றிகளைப் பெறுவதற்கு இத்தகைய சிந்தனைகள், பொன்மொழிகள் அவர்களுக்கு பெரும் உந்து சக்தியை ஏற்படுத்தும். ஆகவே இத்தகைய செயற்பாடுகளில் சமூகமானது முன்னின்று செயற்பட வேண்டும். இளையோர்கள் தேசிய, சர்வதேச போட்டிகளில் கலந்து வெற்றி பெறுகின்றபோது கௌரவிப்பதும், தோல்வியடைகின்றபோது தோல்விக்கான காரணிகளை கண்டறிந்து அவற்றுக்கான வழிமுறைகளை கண்டறிந்து செயற்படுத்துவதிலும் சமூகம் முன்னின்று செயற்பட வேண்டும். இதனைவிட தோல்வி அடையும்போது இளையோரை தட்டிக்கொடுத்து அவர்கள் மனம் தளர்வடையாமல் பாதுகாக்க வேண்டும். ஆகவே இளையோர்கள் நல்வழி நடப்பதற்கு , நல்லனவற்றைச் சிந்திப்பதற்கு சமூகமானது பின்புலமாக இருக்க வேண்டும். அப்போது தான் இளையோரும் எந்தவொரு செயலை முன்னின்று செய்தாலும் தமக்கு பின்புலமாக சமூகம் இருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற துணிவும் செய்கின்ற செயலில் பற்றுறுதியும் வரும். இன்றைய இளையோர்கள் தான் நாளைய தேசத்தின் தூண்கள். ஆகவே, அவர்களை நல்ல பண்புள்ளவர்களாக, சிந்தனையுள்ளவர்களாக, கல்வியாளர்களாக, சமூகப் பற்றுள்ளவர்களாக, மண்பற்று, மொழிப்பற்றுள்ளவர்களாக மாற்றுவதில் சமூகமானது முன்னின்று செயற்பட வேண்டும். குறிப்பாக இன்றைய காலகட்டத்தில் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை வீதி விபத்துக்களால் சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் எனப் பலர் நாளுக்கு நாள் உயிரிழக்கின்றார்கள். ஆகவே இளையோர்கள் மத்தியில் வீதி விபத்து தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்களை, மேற்கொள்ள வேண்டும். இதனூடாக வீதி விபத்துக்களால் வைத்தியசாலைகளில் பெரும் குருதித் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. ஆகவே இளையோர்கள் மத்தியில் இரத்ததானம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சுவரொட்டிகள் மூலமாகவோ அல்லது துண்டுப்பிரசுரங்கள், தெரு நாடகங்கள் மூலமாகவோ இளையோருக்கு இரத்ததானம் மீதான ஆர்வத்தை ஈடுபாட்டை ஏற்படுத்த வேண்டும். எனவே தான் வருங்கால இளைய சந்ததியும் தற்கால இளையோரின் நல்ல பண்புகளைப் பின்பற்றுபவர்களாக விளங்குவார்கள்.

இதனைவிட தற்கால இளையோர்களை ஆன்மீகத்தின் பால் ஈடுபடுத்த வேண்டிய கடமை சமூகத்துக்கு இருக்கிறது. தற்போதைய இளையோர்கள் கோவில்களுக்கோ, பள்ளிவாசல்களுக்கோ, வேதாலயங்களுக்கோ செல்வதைக் குறைத்து விட்டார்கள். ஆகவே அவர்களுக்கு வழிபாடுகள் மீதான ஆர்வத்தை, சமயப் போதனைகளைச் செய்ய வேண்டிய பொறுப்பு சமூகத்துக்கு இருக்கிறது. சமய போதனைகள் மூலம் மன ஒருமைப்பாட்டையும், அமைதியையும் ஏற்படுத்த முடியும் என்ற நல்ல சிந்தனைகளை இளையோர்கள் மத்தியில் விதைக்க வேண்டும். ஆகவே, சமூகம் தான் இளையோரின் வளர்ச்சியில் சாதகமான பங்கை இளையோருக்கு வழங்க முடியும். அத்தகைய ஏற்பாடுகளை சமூகம் இளையோருக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஆகவே, தமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் இளையோர்கள் முன்மாதிரியாக செயற்பட அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். குறிப்பாக சுற்றுச்சூழல் மாசடைதலைத் தடுப்பதற்கான வழிமுறைகளை இளைஞர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். அப்போது தான் இளையோர்கள் சமூகத்தை, சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் விழிப்புணர்வுடன் செயற்படுவார்கள்.

தொகுத்து நோக்குவோமானால் இன்றைய இளையோரின் வாழ்க்கைப் பயணத்தில் சமூகமானது அவர்களை நல்வழியில் பயணிக்க உறுதுணையாக இருக்க வேண்டும். அவர்களுடைய கனவுகளையும் இலட்சியங்களையும் அடைவதற்கான வாய்ப்புக்களை, உதவிகளைச் செய்வதில் சமூகம் இயலுமான பங்களிப்பை வழங்க வேண்டும்.

ஓடுகின்ற வாழ்க்கைச் சக்கரத்தில் இளையோரின் வாழ்க்கைப் பயணத்தை தரிசித்து அவர்களுடைய பிரச்சனைகள், அவர்களுடைய தவறுகள் போன்றவற்றை இனங்கண்டு நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு சமூகத்துக்கு இருக்கிறது. இன்றைய இளையோர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறான பாதையை தடுத்து அவர்களை நல்வழியில் பயணிப்பதற்கான தூரநோக்கு நடவடிக்கைகளை சமூகம் செய்யுமாக இருந்தால் அவர்கள் எதிர்காலத்தில் நல்லதொரு நிலையை அடைவார்கள். இதனூடாக அவர்களுடைய குடும்பம் வளர்ச்சியடைவதோடு சமுதாயம் மறுமலர்ச்சி காணும். ஆகவே இளையோரின் பழக்கவழக்கங்களும், பண்புகளும் நல்லவையாக இருக்க சமூகம் முன்னின்று செயற்படுவதன் ஊடாக அவர்களிடத்தே நல்ல பண்புகளையும் நல்ல பழக்கவழக்கங்களையம் உருவாக்க முடியும். இதனூடாக வளமான சுபீட்சமான சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். இவற்றைச் செய்யக்கூடிய முழுத் தகுதியும் சமூகத்துக்கு இருக்கிறது. இவற்றை செயல்படுத்தினால் தான் இளையோர் நல்வழியில் பயணிப்பார்கள்.

மாறி வருகின்ற பூகோள மயமாதலுக்கு ஏற்ப இளையோரும் நவீன மோகத்துக்கு அடிமையாகி விடுகிறார்கள். எமது மொழி, பண்பாடு, கலாசார விழுமியங்களைத் தொலைத்துவிட்டு அந்நிய நாட்டு மொழிக்கும் கலாசாரத்துக்கும் அடிமையாகி விடுகிறார்கள். ஆகவே, எமது மொழி, எமது பண்பாடு போன்றவற்றை சிதைவுறா வண்ணம் இருக்க இளையோரை நல்வழிப்படுத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது. எமது தாய்மொழியின் பெருமைகளை விளக்குகின்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். பண்பாட்டுப் பெரு விழாக்களில் கலாசார நிகழ்வுகளில் இளையோரை பங்கெடுக்க செய்வதன் ஊடாக நவீன மோகம் எங்கள் இளையோரை பாதிப்பதைத் தடுத்துக் கொள்ளலாம். இதற்கு சமூகம் முன்னின்று செயற்பட வேண்டும்.

தொகுத்து நோக்குவோமாக இருந்தால் இன்றைய இளையோரின் நிலைகளை அறிந்து அவர்களுடைய குறைபாடுகளை, தேவைகளை நிவர்த்தி செய்ய சமூகத்தால் தான் முடியும். இந்தக் கட்டுரையில் கூறிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்தினால் நல்லதொரு சமுதாயத்தை இளையோரால் உருவாக்க முடியும். இதனூடாக நாடு தன்னிறைவு காணும். இளையோரால் தேசம் மலர்ச்சி கொள்ளும். வருங்கால சந்ததிகள் நல்வழி வந்த பூக்களாக வாழ்க்கைப் பூந்தோட்டத்தில் மலர்வார்கள். இன்றைய இளையோரை நல்வழிப்படுத்துவதில் சமூகத்தின் பங்கு இன்றியமையாதது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்கால சமூக மாற்றத்தினை தோற்றுவிக்க இன்றைய இளைஞர்களைத் தயார்ப்படுத்துவோம்

திரு. இராயப்பு திருத்துவராஜா
"றோஸ் பவனம்"
அல்வாய் வடமேற்கு,
அல்வாய்.

**இரண்டாமிடம்**

நாடு தழுவிய சமூக மாற்றம் ஒன்றினை உருவாக்குவதென்பது பாரிய பொறுப்பு வாய்ந்த விடயமாகும். மாற்றத்திற்கான உழைப்பு என்பது சிறிய வட்டத்திற்குட்பட்டதாக அமைந்துவிடமுடியாது. சமூக மாற்றம் என்பது முதியவர்களின் வாழ்வியல் அடிநாதமாகக் கொண்ட அனுபவங்களால் பெறப்படுகின்ற நல்ல சிந்தனை வடிவங்களே இன்றைய இளைஞர்களுக்கு பாடங்களாக வழங்கப்படுகின்ற நல்ல சிந்தனையின் காத்திரமான கருத்துக்களே ஆரோக்கியமான சமூக மாற்றம் ஒன்றினை ஏற்படுத்த முடியும்.

சமூக மாற்றத்திற்கான பங்களிப்பு கலை, கலாசாரம், பண்பாட்டு இலக்கியம் சார்ந்தோரின் தன்னலமற்ற மேலெலுகைக்கான கிராம இளைஞர் யுவதிகளை ஒன்றிணைத்து வாசிப்பதற்கு நல்ல நூல்களை தேடி வழங்குவதன் மூலமே புதிய மாறுதல்கள் தோன்ற முடியும்.

முற்றிப் பழுத்த மாங்கனியின் சுவையோன்று எவனொருவன் வாசிப்பினூடாக பக்குவம் பெறுகின்றானோ அவனது அகவையும் ஆளுமையும் சம்பவம் ஒன்றிற்கு திட்டவட்டமான தீர்ப்பினை கோடிட்டு வழங்குவதற்கு தயார்படுத்தி விடுகிறது.

படிமுறைக் கல்வியுடன் அரச பணியாற்றுகின்ற புத்திஜீவி ஒருவரால் எடுத்துக்கொள்ளப்படுகின்ற தீர்மானம் போன்று சிறந்த வாசகனாய் வாழுகின்ற விவசாயி ஒருவனாலும் நல்ல முடிவுகளைக் கூறமுடியும் என்பதற்கு சான்றாக பல அறிஞர்கள் காடுகள் தோறும் தோன்றி மறைந்திருப்பது அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழுங்காலப் பொழுதுகள் பல மணிநேரங்களை நூலகங்களில் செலவு செய்ததாக பதிவுகள் கூறுகின்றன.

“வாசிப்பதன் மூலம் மனிதன் பூரணமடைகின்றான்” என்பது நிதர்சனமே. சமகால இளைஞர்களை வாசிப்பினூடாக நல்ல வாசகர்களாக நிமிர வைப்பது என்பதில் இருக்கக்கூடிய உண்மையை உணர வேண்டும். கைப்பேசி, தொலைக்காட்சி மற்றும் உந்துருளி என்பவற்றின் அதீத மோகம் மற்றும் உடையலங்காரம் என்பன வாசிப்புத்திறனும் அதனடியொற்றிய இலக்கிய ஆர்வமும் குறையக் காரணமாகின்றன.

1960 களில் இருந்திருக்கக்கூடிய கற்றல் முறைமையும் பின்னர் 1980- 2000 ம் ஆண்டுகளின் பின்னரான காலப்பகுதியில் அரச பாடசாலைகளின் கல்வியுடன் தனியார் கல்வி நிறுவனங்களும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டடிப்படையில் ஓர் போட்டி நிலை உருவாகி பலம் வாய்ந்த நிறுவனங்களாக இன்று பேசப்படுவதும் கல்வியினால் சமூக மாற்றம் ஒன்றினைக் காணமுடியும் என்கின்ற அடிநிலை உணர்வு இருந்த போதிலும் மாணவர்களின் மாணவப்பருவ சீர்மியமான நேர்கோடு அழிக்கப்பட்டு பெரும்பாலான மாணவர்கள் கல்விசார் சீரழிவுதனை சந்தித்து வாழ்க்கையை பாழாக்கி சந்தியில் நிற்கின்றமை, கனமான எதிர்பார்ப்பு நிறைந்த பெற்றோர் தலைகுனிந்து நிற்கின்றமை வேதனைக்குரியதாகும்.

நாய் ஒன்றினைப் பார்த்து வீட்டினையும் நூலகத்தையும் பார்த்து கிராமத்தினையும் அளவிடும் நோக்கில் வீடு, கிராமம் என்பன எவ்வகை முன்மாதிரியை கொண்டிருக்கின்றன என்பதையும் அறிய முடியும் என்பது முதியோர் மொழிதலாகும்.

அந்தவகையினில் 50-60 குடும்பங்களைக் கொண்டிருக்கின்ற ஓர் கிராமத்தினை எடுத்துக் கொண்டால் அரை நூற்றாண்டிற்கு மேலாக அமைந்திருக்கக் கூடிய வாசிகசாலை சிறு கொட்டில் நிலையில் சமூக ஐக்கியத்தின் ஊடாக சமூக மேம்பாடு தொடர்பான சிந்தனை வெளிப்பாடாகவே நூலகங்கள் தோற்றம் பெற்றன. அவ்வகையிலான நூலகங்கள் இன்று மாடிக்கட்டடங்களாக புலம்பெயர் நாட்டின் பொருளாதார வீச்சினைப் பெற்று பணப்புழக்கத்தின் பேசு பொருளாக இருந்து வருகின்ற வேளையில் கல்வி சார் நடவடிக்கை உயர்வடைந்தபோதும் இளைஞர்களின் பொழுது விரயமாக்கப்படுகின்றமை சமூக மேம்பாட்டின் பலவீனமாகவே கருதமுடியும்.

நல்ல சிந்தனையாளர்களாக இளையோர்களை வளர்த்தெடுக்க குடும்பம் சார்ந்த பெற்றோரும் கிராமம் சார்ந்த சனசமூகநிலையமும், அந் நிலைய நிர்வாகிகளும் முன்னெடுக்கப்படுகின்ற பாலர் விளையாட்டுப்போட்டி, வாணிவிழா, வருடாந்த ஸ்தாபித நிகழ்வு முதியோர் கௌரவிப்பு மற்றும் இலக்கியம் சார்ந்த போட்டிகளின் பரிசில் வழங்கும் வைபவம் என்பன சமூக மாற்றம் ஒன்றினை உருவாக்கும் தூண்டுகோலாகும். வணங்கவோ, ஒலியெழுப்பவோ இரக்கமும் இணையவேண்டும் ஒரு கரம் உயரமறுத்தால் இருநிலைக் குறிக்கோளும் தவறிப்போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மனிதனிடமும் ஓர் அரிய துறை சார் சிறப்பு மன இருப்பினில் ஒட்டிக்கொள்ளும். விவசாயி, அரசபணி, இறைபணி இவர்களோடு இலக்கியகர்த்தாக்கள் எனப்பலப்பல துறை சார்ந்தவர்களின் அனுபவங்கள் மாறுபட்டவையாகக் காணலாம். ஆனால் அவை அனைத்தும் ஆரோக்கியமான கருத்துக்களால் இளையோரின் மனங்களை தொட்டுச்செல்கின்ற சமூக மாற்றத்திற்கான முன்மொழிவுகளாகவே அமையும்.

கிராமம் சார்ந்த முதியவர்களாலும் முற்போக்கு சிந்தனையுடையவர்களாலும் சமகால இளைஞர்களை ஒன்றிணைக்கின்ற விரிவார்ந்த நடவடிக்கைகள் வருடந்தோறும் சனசமூக நிலையத்தினுாடாக விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலைவிழாக்கள் நடத்துவதும் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்குவதும் கல்வி சார்ந்த மாணவர்கள் கௌரவிக்கப்படுவதும் கால நகர்வின் பின்னர் அயல் கிராமம் சார்ந்த நடவடிக்கைகள் விரிவாக்கம் செய்யப்பட்டு நடந்தேறுகின்ற நிகழ்வின் பதிவுகள் இறந்தகால நடவடிக்கைகளின் செயற்பாடு சமகாலத்தை தெளிவோடு சீர்மியமாக்குவதன் மூலமே இளையோர்களையும் செயற்றிறன் மிக்கோராக்கி எதிர்கால வித்தகர்களாக்குவதே சமூகத்தின் பெரும் பங்காகும். இவ்வகையிலான கிராமமட்டத்திலான நூலகம் சார்ந்த சிறந்த நடவடிக்கைகள் கிராம அலுவலகர் ஊடாக பிரதேசசெயலகத்தின் கவனிப்பிற்குரியதாக அமையும் போது ஒன்றிணைந்த இளைஞர்களின் எழுச்சிதனை மேலோங்க வைக்கின்ற மேலதிக பணிகளை பிரதேச செயலகமும் தமது ஆலோசனையையும் நிதியுதவியையும் தமது செயலகம் சார்ந்து பணியாற்ற கிராமம் சார்ந்த பொது அமைப்புகளுடாக மேற்கொள்ள வேண்டும்.

இளைஞர் யுவதிகளுக்கு வாசிப்புத் திறனை உருவாக்கும் நடவடிக்கையானது " பால் மாட்டினை தடவிக்கொடுத்து பாலினை கறக்க வேண்டும்" என்பது கிராமிய பழமொழி போன்றது. ஏனெனில் இலத்திரனியல் பாவனை இல்லாதோரை காணமுடியாததொரு நிலை கவனிக்கத்தக்க விடயமாகி விட்டதால் அவர்களை அனுசரிக்கின்ற விதத்திலே வழிப்படுத்தி வாசிப்பு என்கின்ற பெருவிருட்சத்தின் முதல் வித்தினை மனங்களில் துண்ட முடியும்.

கலை இலக்கியம் சார்ந்த படைப்பாளிகள் எத்துறை சார்ந்தவராயினும் வாசிப்பினூடாகவே கோழிக்குஞ்சு முட்டையை சொண்டினால் உடைத்துக்கொண்டு வெளியுலகத்தினை பார்ப்பதுபோல் படைப்பாளி பேனாவை கையில் எடுக்கும் போது பல்துறை நூல்களை அவனால் வாசித்தறியப்பட்டிருக்க வேண்டும் "பாடைஏறினும் நூலது கைவிடேல்" என்பது போல் வாசிப்பின் தேவை இளைஞர்களுக்குப் புரியவைக்க வேண்டும்.

ஒருவரிடம் இரவலாக பெற்றுக்கொண்ட நூலினை வாசித்து முடித்து உறங்கிப்போன வேளையில் பெற்றிருந்த கனமழையின் தாக்கத்தினால் ஓட்டைக்குடிசையினால் சிந்திய மழைநீரினால் தாழ்கள் நனைந்து புத்தகம் சிதைந்துபோயிருந்த காரணத்தால் நூலின் சொந்தக்காரரான பெரியவரின் வீட்டு வேலை செய்து நூலுக்குரிய பணத்தினை செலுத்தியிருந்தவர் அமெரிக்காவின் பதினாறாவது ஜனாதிபதியாக பதவிவகித்த செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகன் தான் ஆபிரகாம்லிங்கன் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பிள்ளைகளும் தாய், தந்தையர்க்கு அன்பாகவும் பாசமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். அதுவே பெற்றோர் பிள்ளைகளெனும் பாசப்பிணைப்பின் உச்சநிலையாகும். இருப்பினும் பிள்ளைகள் ஆரம்பக் கல்வியுடன் மாணவர்கள் இளைஞர்களாக தோற்றம் பெறும் போது பதின்நான்கு வயதினை எட்டிய நிலையினில் கால சூழற்சி காரணமாக உடலியல் மாற்றமும் உணர்வலைகளின் தன்மையும் ஆண் பெண் இருபாலாரில் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் ஒரு பக்குவப்பட்டவர்களாகவே சமுதாயத்தில் ஓர் அங்கமாகவே அவர்கள் பார்க்கப்படுவார்கள்.

இல்லங்களில் பெற்றோரின் முன்னே நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்கின்ற சராசரிக்கு மேலானவர்கள் வெளியே அவர்களின் நடவடிக்கைகளை பெற்றோர் அறிந்து கொள்வதில்லை. குறிப்பாக பதின்நான்கு வயதினை தாண்டிய மாணவர்கள் புகைத்தல், மதுபான பாவனைக்கு உட்பட்டவர்களாக காணமுடிகிறது. இந்நிலையில் பிறர் பிள்ளைகளின் குறைகளைக் கூறிவிட்டால் நம்பகத்தன்மையற்றவர்களாகவே இருப்பதும் பத்திரிகையை புரட்டிப்பார்த்தால் மாணவர்கள் தொடர்பான சீர்கேடுகளையும் அவர்களின் நண்பர் குழாம் எவ்வகையானவர்கள் என்பதனையும் அறிந்து கொள்ளமுடியும் "உன்னைப்பற்றி கூறவேண்டுமானால் உனது நண்பர்களைக் கூறு" எனும் பழமொழி இன்றும் பொருந்தியிருப்பது நிதர்சனமே.

ஒவ்வொரு பிள்ளைகளின் நடவடிக்கைகளையும் பெரியோர்கள் உன்னிப்பாக கவனம் செலுத்த வேண்டும். அதீதமான செலவு செய்கின்ற பிள்ளைகளுக்கு எப்படி எவ்வளவு பணம் கையில் கிடைக்கிறதென்பதனை பாராமுகமாக இருந்துவிட்டால் கல்வி வளம் குறுகிப்போகும் நிலை காணப்படும்.

வாழ்வியல் பொறுமை, பொறுப்பான செயற்பாடு, சிக்கனம் என்பவை அறிந்திராத இளைஞர்களின் சிந்தனை உலக ஆடம்பர நடவடிக்கைகளில் ஒன்றித்து காணப்படுகின்ற பிள்ளைகளை சமூகமாகிய பெற்றோர் மற்றும் முதியோர் மிகவும் கண்காணிப்பாக, குதிரையின் கடிவாளம் போன்று காற்றின் திசையறிந்து மாலுமி சுக்கானை அளுத்திப் பிடிப்பது போன்று சீரில்லாத பாதையில் கால் பதிக்கின்ற இளையோரை நல்வழிப்படுத்த விழிப்பாக இருக்க வேண்டும்.

கைப்பேசி தயாரிக்கின்ற நாடுகளில் இருக்கக்கூடிய பாவனை எண்ணிக்கையிலும் பன்மடங்கு அதிகமாக எமது பிரதேசங்களில் இளைஞர் யுவதிகளின் கரங்களில் கையகப்படுத்துவதனை காண்கின்றோம். கைபேசி பாவனை பிழையானதன்று. ஆனால், அப்பொருளினை பாவிக்கின்ற தருணம், நேரம், தொடர்பாடல் எவ்வகையிலானது என்பவற்றின் காத்திரத்தன்மையினால் மட்டுமே கைப்பேசி உரையாடல் அவசியம் சார்ந்தே அதனுடைய சாதக பாதகங்கள் தெரிந்து கொள்ள முடியும். பல இளைஞர்கள் மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். அவருடைய அகவை, அவன் தொழில் என்பவற்றிற்கு தொடர்பு அற்றதாகவே அமைந்திருக்கும். அதனுடைய செலவு, எங்கே இருந்து பணம் வருகிறது என்பதனை பெற்றோர் கவனிக்கத் தவறும் நிலையினில் வெம்பிப் பழுத்த மாங்கனி போன்று அவனுடைய எதிர்காலம் சீர்மியமான நலமான நீரோட்டத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகி வேகக்கட்டுப்பாட்டினை இழந்த வாகனமாக அவனுடைய சமகால வாழ்வும் முடங்கிப் போகின்ற நிலைமைக்கு பெற்றோரும் காரணமாக இருக்கக் கூடிய நிலையும் பெரியோரின் பெருங்குறைக்கும் ஆளாக நேரிடும். வெள்ளம் வரும்முன் அணைகட்ட வேண்டும் என்கின்ற பழமொழி இவ்விடத்தில் குறிப்பிடுதல் மிகப் பொருத்தம் எனப் பதிவு செய்யலாம்.

கடந்த இருபத்தைந்து ஆண்டின் முன்பு இருந்திருக்கக்கூடியதான பிள்ளைகளின் கல்வி நிலை சார்ந்த பெற்றோர்களின் ஈடுபாடு இன்றைய சமகாலத்தில் பன்மடங்காக வளர்ந்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற இருக்கின்ற இருபால் மாணவர்களுக்கும் அன்னையரால் திணிக்கப்படுகின்ற கல்வி சார் முன்னோக்கி நகர்ந்தெழுகின்ற பெற்றோரின் சிந்தனைச் சக்கரத்தின் சூழற்சி பிள்ளைகளை கல்வியில் உயர்ந்தோராக்க வேண்டும் என்கின்ற இலட்சியப் புள்ளியை நோக்கியே ஓடுகின்ற நிலைதனை பார்க்க முடிகிறது.

பெற்றோரின் நல்நோக்கு சிந்தனை தவறான பாதை என்பதன் பொருளல்ல ஆனால் பிள்ளைகளிற்கு நான்காம் ஆண்டிலிருந்தே கல்வித்திணிப்பு ஆரம்பமாகின்ற நிலை ஐந்தாம் ஆண்டு ஆவணி மாதத்திலே முடிவடையும் பரீட்சையின் பெறுபேகள் கிடைக்கின்ற காலத்தில் எத்தனையோ பெற்றோர் மனமுடைந்து போனமையும், யாவரும் அறிந்ததே. ஆகையால் அரசினுடைய தீர்மானத்திற்கமைவாக சித்தியெய்யாத மாணவர்களும் கோடிட்ட புள்ளிகளை பெற்றிருந்ததால் அவர்களும் தராதரம் மிக்க மாணவர்களாகவே கணிக்கப்படுவர்.

பெற்றோர் பிள்ளைகளை கோயிலுக்கு போ என்று கூறக்கூடாதென்றும் மாறாக கோயிலுக்கு வாருங்கள் என்றே கூறவேண்டுமென்றும் கூறுவர். இவ்விடயத்தின் காத்திரத்தன்மை என்னவென்றால் கோயிலுக்கு வா என்று கூறும் போது குடும்பமாகவே ஆலய வழிபாட்டில் கலந்து கொள்கின்ற நிலை ஒன்றிற்கான அத்திபாரம் இடப்படுகின்றமை துலாம்பரமாக தெரிகின்றது.

ஆலய வழிபாடு என்பது மாணவர்களையோ துறை சார்ந்த பணியாளர்களையோ நெறிபிறழாத நல்லதோர் மனிதனாக்கும் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமேயில்லை இறைவழிபாடும் கற்றல் முறைமையும் எதுகையும் மோனையும் போன்று இணைந்தே இருக்க வேண்டும்.

கார்த்திகை மாதங்களில் நடந்தேறுகின்ற பாடசாலை சார்ந்த ஒளிவிழாக்களை எடுத்துக்கொண்டால்வெறுமனே விருந்தினர்களை அழைத்து மாலையணிவித்து சிறப்புரைகளுடன் சிற்றூண்டி வழங்குவதோடு நிறைவு பெறுவது மட்டுமன்றி "ஒளிவிழா" மனித சமூகத்திற்கு குறிப்பாக மாணவச்செல்வங்களிற்கு விழாவினூடாக படிப்பினைகளை வளர்க்க வேண்டும். ஒளிவிழாவின் தன்மையை பெற்றோரும் பெரியோரும் பிள்ளைகளிற்கு கூறுகின்ற கருத்தாடல் களம் ஒன்று அவரவர் தம் இல்லத்தில் நடந்தேறுவது எதிர்கால இளைஞர் சமூக மாற்றத்தினை ஏற்படுத்த முனைகின்ற உந்துதலை வளங்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடல் சார்ந்திராத எவ்வகையிலான செயற்பாடுகள் அனைத்தும் தொடக்கம், நடுப்பகுதி, முடிவு என்பன இடியப்பம் போன்ற பின்னலாகவே நிலை சீர்மியத்தன்மையை இழந்திருக்கும். இளையவர்களின் இளமைக்கால நிலையும் அதுவாகவே அமையும் வாழ்வியல் ஆளுமை மிக்கவர்களால் கிராமம் சார்ந்த பொதுநோக்கு நிலையங்களினூடாக இளைஞர்களை ஒரு குடையின் கீழ் கொண்டுவரவேண்டும்.

கிராமம் சார்ந்த இல்லங்கள் ஒவ்வொன்றும் (யேசுநாதர் கூறிய இல்லங்கள் குட்டித்திருச்சபையாக இருக்க வேண்டும் என்பது போல) குட்டி நூலகங்களாக மாற வேண்டும் குடும்பம் சார்ந்த ஆரோக்கியமான மாற்றங்களே கிராம மாற்றமாகி தேசம் தழுவிய மாற்றமாக அமையும். குடும்ப ரீதியாக ஏற்படுகின்ற உரையாடல்கள் முதியவர்களின் வாழ்வியல் கருத்துக்கள் இளையோரின் மனங்களில் பதிவாக வேண்டும். இவர்களின் அனுபவங்கள் அவைகளுக்கூடான காலப்பதிவுகள் சொல்லாடல்கள் சிறுவாய்க்கால்கள் நீராக அடுத்த பரம்பரைக்கு ஓர் வரலாறாக அமைய வேண்டும் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும். "பேசுவதைக் குறைத்துக் கொண்டால் தேய்ந்து போவது மொழி மட்டுமல்ல உறவும் தான்" என்பது ஓர் புதுமொழியாகும்.

சமுதாய மாற்றத்தினை ஏற்படுத்துவதில் கலை இலக்கியத்திற்கு வீரியம் மிக்க செழுமையான பங்குண்டு என்பது நிதர்சனமே. படைப்பாளியாக எவரும் பிறப்பதில்லை சமூகத்தில் ஒருவனே கவிஞனாக எழுத்தாளனாக பிரகாசிப்பதனை காண்கின்றோம். மூப்பெய்திய படைப்பாளிகள் பலரும் பாடசாலைக் கல்விக்காலத்திலே இலக்கியத்தினுடானான ஆரம்பகால ஈடுபாடு தொடங்கியதாக அவர் சார்ந்த வரலாறுகள் பதிவாகியிருக்கின்றன.

படைப்பாளியாக மிளிருகின்ற அனைவரும் இளமைக்காலத்தில் வாசகர்களாகவே வளர்ந்தவர்களாக அறியமுடிகிறது. குடும்பம் சார்ந்த வாசிப்பு இலக்கிய ஈடுபாட்டினை தன்னகப்படுத்தும் என்பதில் மாற்றமில்லை. உலகறியும் ஓவியர்களில் டாவின்சி குறிப்பிடத்தக்கவர் நாடகக்கலையின் சிகரம் தொட்டவர் ஷேக்ஸ்பியர். நாவலாசிரியர்கள் மாக்ஸிம்கார்க்கி, கால்மார்க்ஸ், என்போர்கள் வறுமைப்பிடியுடன் பல மணிநேரங்களை நூலகங்களில் செலவு செய்தே தம்மை உலகறிய வைத்தவர்கள். வடபுலத்தினை எடுத்துக் கொண்டால் மாதந்தோறும் பல்துறை சார்ந்த நூல்களின் வெளியீடும் பின்னராக குறிப்பிட்ட இலக்கிய மாற்றங்களில் அறிமுக நிகழ்வாகவும் நடந்தேறுவதனை பத்திரிகை வாயிலாக பார்த்தறிகின்றோம்.

பாடசாலைக் கல்வியின் உச்சநிலை ஈடுபாடு மாணவர்களும் பெற்றோரும் பொருள் தொகைப் பணத்தினை செலவு செய்கின்ற சமகாலத்தில் இருபாலாருக்கும் இருக்கக் கூடிய சிந்தனைப் பதிவாக கல்வி சார்ந்த தொழில் தேடலாக அரசபணி, உரையாடல் எழுந்து தணிந்து கொள்வதனைப் பார்க்கின்றோம். அரைநூற்றாண்டிற்கு முன்னதாக இன்று படைப்பாளியாக வாழ்ந்து வருபவர்கள் பாடசாலைக்காலத்தில் தாம் எழுதத்தொடங்கியதாக கூறியிருக்கின்ற செய்திகள் நம்பிக்கைக்குரியவையாக மனங் கொள்ளும் அதே வேளையில் சமகால மாணவர்களிடம் எழுத்திலக்கியம் சார்ந்த ஈடுபாடுகள் மிகவும் குறைந்தே

92118(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுவது. எதிர்காலத்தில் படைப்பிலக்கிய கர்த்தாக்களின் தோற்றம் என்பது விரல் விட்டு எண்ணக்கூடியதாக அமையும் என்னும் ஐயம் மனதில் தோன்றுவது வேதனைக்குரியதாகும்.

சமூக மாற்றத்திற்கான பங்களிப்பு சமகாலத்தவர்களால் இன்றே மேற்கொள்ளவேண்டிய பெரும் பணியாகும். இலக்கியம் சமூக மாற்றத்தின் ஓர் கருவி என்பது உண்மையானால் நூலகம் சார்ந்த கருத்தரங்கு, கவியரங்கு, பட்டிமன்றம், கல்வியாளர்களின் சொற்பொழிவு என்பன வருடம் நான்கு தடவையேனும் நடைபெறவேண்டும்.

தன்னலமற்ற சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்ய மனதிருத்திக் கொள்ளுகின்ற வர்கள், சாதி, சமூகம், சமயம் என்பவற்றிற்கும் ஒழுங்கு முறைக்கும் எதிராக குரல்கொடுக்க திடமோடு மனம் கொள்பவர்கள், ஆயிரம் பேரில் ஓரிருவர் மட்டும் சமூகத்தின் பால் கொண்டிருக்கின்ற சேவை மனப்பாங்கு சமூகப்பணியாக தம்மை முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்தவர்களின் பெயர்ப் பட்டியல்கள் கிராமம் சார்ந்து வரிசைப்படுத்துவோமாக அமைந்தால் அரை நூற்றாண்டு கால கணக்கினில் கிராம மட்டத்தில் எத்தனை சிலைகள் நிறுவப்பட்டுள்ளன என்பதனை பார்க்கும் போது ஒரு சில கதைகள் என்றே கூறலாம்.

குடும்பம் சார்ந்து பெற்றோர்கள் இறைபதம் எய்திவிட்டால் கண்ணாடியிட்ட போட்டோக்களை வைத்து மாலை அணிவித்து உற்றவர் நினைவு கூறுகின்ற முறைமையானது இல்லந்தோறும் காட்சிப்படுத்துகின்ற உணர்வு பூர்வமான செயற்பாடாகும். மாறாக சமூகத்திற்காக உழைத்தவர்கள் எத்தனை மாந்தர்கள் சிலை நிறுவப்பட்டுள்ளன எனப் பார்க்கும் போது சமூக சேவையாளர்களை இனங்காண முடியும்.

கிராமம் சார்ந்த ஆலயம் உள்ளிட்ட பொது நோக்கு மண்டபங்களில் நடைபெறக்கூடிய நிகழ்வுகளில் சமூக விழிப்புணர்வு கொண்டதான நிகழ்வுகளை நடாத்துவதன் வெளிப்பாடே இன்றைய இளையோர்களின் நல்ல சிந்தனையினூடான நல்லதோர் எதிர்கால சமூக மாற்றம் ஒன்றினை தோற்றுவிக்க சமூக முனைப்போடு செயற்படுத்துவதனாலேயே சமூக சிற்பிகள் பலர் தோன்றுவார்கள். சிலை ஒன்று வைக்க வேண்டும் என்பதற்காகவன்றி சமூகத்தில் வாழுகின்ற ஒவ்வொருவருக்கும் பிறந்தோம், வாழ்ந்தோம், மறைந்தோம் என்றில்லாது பிறப்பொன்று கிடைத்ததற்கான காலப்பதிவு ஒன்றினை வைத்துச் செல்ல "நூலைப்பிடித்து பட்டம் விடு நூலைப் படித்து பட்டம் எடு" எனும் மகுட வாசகம் கூறும் கருத்தினோடு ஒவ்வொருவரும் கற்றுயர்ந்து சமூகத்தில் ஒருவனாக சமூகம் சார்ந்த பொறுப்புக்களை கையில் எடுத்து சமகால இளைஞர்களை நல்ல சிந்தனையாளர்களாக உருவாக பட்டறிவுமிக்கோர் கரம் கோர்த்துக்கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோரும் இலங்கையும்

திரு. ஆ.பெ.சிறிகந்தநேசன்
இல.18, இலந்தைக்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

மூன்றாமிடம்

பதினைந்து வயதுக்கும் முப்பத்தொன்பது வயதுக்கும் இடைப்பட்டோர் இளையோர் ஆவர். எமது நாட்டில் இரண்டு கோடிக்கும் அதிகமான சனத்தொகையில் முப்பத்தேழு சதவீதம் இளையோர், கிட்டத்தட்ட நாட்டின் சனத்தொகையில் எழுபத்தைந்து இலட்சத்தினர், இளையோரின் ஆக்கபூர்வமான சிந்தனையைச் சரியாக நிகழ்கால சமூகம் பிரயோகித்தால், எதிர்காலத்தில் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கலாம். இளையோரின் சிந்தனையுடன், சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு நிகழ் கால சமூகம் அவர்களின் ஆளுமைகளைப் புரிந்து கொண்டு, அவர்கள் முகம் கொடுக்கும் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார ரீதியான பிரச்சனைகள் பற்றி கவனத்தைச் செலுத்தி, அவற்றைத் தீர்ப்பதற்கு விஞ்ஞான ரீதியான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்கு அதிக பங்களிப்பை நல்கக்கூடிய, பலம் பொருந்திய வளர்ச்சியடைந்த இளையோரின் சக்திகள் இன்று கவனிப்பார் அற்று வீண்விரயமாவதைக் காணலாம். எமது நாட்டுப் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு பிரவேசிக்கும் 360,000 இலட்சப் பிள்ளைகளில் உயர்தரத்தில் கல்வி கற்பதற்காக இணையும் தொகை 200,000 இலட்சமாகும். அத் தொகையில் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படுவோர் 30,000 ஆயிரமாகும். வருடமொன்றிற்குக் கல்வித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளிலிருந்து வெளியேறும் தொகை 330,000 இலட்சமாகும். இவ்வாறு வெளியேறுபவர்களை நாட்டின் பொருளாதாரத்தில் தொடர்புபடுத்துவதற்கு முறையான செயற்றிட்டமொன்று இல்லாததன் காரணமாக, குறிக்கோளின்றி எதிர்பார்ப்புக்கள் சிதைந்து வாழ்க்கையை நடத்திச் செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால், தற்போது அவர்களின் வேலையில்லாப் பிரச்சனை அதிகரித்துள்ளது.

சமூகத்தின் சரியான வழிநடத்தல் இன்மையால், இன்றைய இளையோர் போதைப்பொருளுக்கு அடிமையாதல், சமூக குற்றச் செயல்களில் ஈடுபடல், தொழில் தேடி வெளிநாடுகளுக்குச் செல்லுதல், பாதுகாப்பற்ற தொழிலில் ஈடுபடுதல், பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுதல், எதிர்கால சிந்தனை இன்மை, எதிர்கால சந்ததியினர் பற்றி சிந்திக்காமை, தன்னம்பிக்கை இன்மை, விரக்தி மன நிலையால் தற்கொலைக்கு முயற்சித்தல், கல்வியில் அக்கறை இன்மை, சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுதல், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுதல், மதவாதத்தில் ஈடுபடுதல், இனவாதத்தில் ஈடுபடுதல், சாதியத்தைக் கடைப்பிடித்தல், பெற்றோரை மதியாமை, முதியோரை கனம் பண்ணாமை, உடற்பயிற்சிகளில் ஈடுபடாமை, சூழல் பற்றி அக்கறை இன்மை, நேரத்தின் முக்கியத்துவத்தினை உணராமை, சமபாடிகளை மதிக்காமை, வயதுக்கு மீறிய ஆசைகள், குறுக்கு வழியில் முன்னேற முயற்சித்தல், பாலியல் பிறழ்வுகள், சமூக பிறழ்வுகள், பண்பாட்டுப் பிறழ்வுகள், கடமையும் கண்ணியமும் கட்டுப்பாடும் இன்றி வாழ்தல், போதிய ஓய்வு இன்மை. எந்நேரமும் கோபமான பதற்ற நிலை, நிலையாமையை உணராமை, வாழ்வதற்கான வாழ்க்கையை வாழாமை. பொழுதுபோக்கில் ஈடுபடாமை, இயந்திரமாக செயற்படுதல் முதலிய இன்னோரன்ன சிக்கல்களுக்கு உட்படுகின்றனர்.

சமூகத்தில் அரசு, குடும்பம் என்னும் இரண்டு அலகுகளுடன் இணைந்து தனி நபர்களும் இளையோர் வாழ்வில் செல்வாக்குச் செலுத்துகின்றனர், சமூக பொருளாதார முறையை வழிநடத்தல், ஆட்சி புரிதல், சம தர்ம சமத்துவத்தை நிலைநாட்டல் என்பவற்றைத் தீர்மானிப்பது அரசு ஆகும். அரச துறையின் மூலம் ஒட்டு மொத்த சமூகத்தின் இருப்பும் சகல சமூக உறவுகளின் தன்மையும் தீர்மானிக்கப்படுகின்றன. சமூகத்தில் மக்கள் ஒன்றாய் சேர்ந்திருக்கும் சிறிய அலகு குடும்பம் ஆகும். சிறு பராயத்திலிருந்து வாலிப பருவம் வரையிலான நபரொருவரை உருவாக்கும் போது தீர்மானகரமான பணியினை அவர் அல்லது அவள் இருக்கும் குடும்ப அலகால் ஆற்ற முடியும். ஒருவர் வசமுள்ள கருத்துக்கள், பழக்கவழக்கங்கள், கலாசார ரீதியான சுபாவ பழக்கம் முதலியவை குடும்பத்தில் சம்பவம் காரணமாக அமைகின்றது. தனி நபர்களின் ஆற்றல், தலையீடு, பங்களிப்பு இளையோரின் சிந்தனையில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இளையோரிடையே உக்கிரமான வேலையில்லாப் பிரச்சனை, நலிவடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையைப் பெறல் முக்கியமான பிரச்சனையாகும். தமது தகைமைக்கு ஏற்ப தொழில் இன்மையால், அவர்கள் பல பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். அரச தொழிலுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட இளம் பட்டதாரிகள் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் காலத்தை வீணாக்குவதையும் அவர்கள் கிராமங்களில் வாழ்வோருக்குப் பல வகையான பொருத்தமற்ற பணிகளைச் செய்து வருகின்றனர். உதாரணமாக, விவசாயம் பற்றிக் கற்காத இளையோர் கிராமங்களில் விவசாயப்பணிகளில் ஈடுபடல். சாதாரண தரம், உயர்தரம், பட்டப்படிப்பு டிப்ளோமா - கல்வியைக் கற்று நிறைவு செய்து வெளியேறும் இளையோருக்கு கற்ற கல்விக்கு ஏற்ப தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பது மிக அரிதாகவே உள்ளன. கலைத்துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒரு முகாமைத்துவ துறையில் நிபுணத்துவம் பெற்றவர் சுகாதாரத்துறையிலும் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதனால் இவர்களின் ஆளுமைகள் மழுங்கடிக்கப்படுகின்றன. தொழில் தேடி வெளிநாடுகளுக்குச் செல்லும் இளையோரும் பல துன்பங்களை அனுபவிக்கின்றனர். உதாரணமாக, இலங்கை இளையோர் கொரிய நாட்டில் தொழில் செய்வதாக கனவில் சஞ்சரித்து நீண்ட நாட்கள் காத்திருக்கும் ஆயிரக்கணக்கானோர் மத்தியில் சிறு தொகையினருக்கு மட்டுமே அந்த தொழில் கிடைக்கின்றது. அவ்வாறு சென்றவர்கள் தொழில் பாதுகாப்பு இன்மையால், பல்வேறு நோய்களுக்கு இரையாகின்றனர். தொழில் கிடைக்காதோர் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். அவர்களின் தகைமைகள், தகுதிகள் என்பவற்றுக்கு ஏற்ப தாம் பிறந்த நாட்டிற்காக உழைப்பைச் சிந்துவதற்குப் பொருளாதாரத்தில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல், முறையான பயிற்சிகளுடன், பாடநெறியைக் கற்பித்ததன் பின்னர் ஏதாவது ஒரு தொழிலுக்காக வெளிநாடு செல்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல், அரசினதும் சமூகத்தினதும் கடப்பாடாகும்.

கல்வி, விஞ்ஞானம், கலை, மற்றும் தொழில்நுட்பமும் விசேட திறமைகளும் தனித்துவ ஆற்றல்களும் மிக்க இளம் சமுதாயம் (இளைஞர், யுவதிகள்) குறைபாடுகள் மத்தியிலும், இலவசக் கல்வியினுள் பொருளாதார நெருக்கடியின் மத்தியிலான குடும்பங்களின் பிள்ளைகளுக்குப் படித்த பிரசையாக மாறக்கூடிய சந்தர்ப்பம் கிட்டியது. தற்போதைய நிலையில் இலவசக் கல்வியை இல்லாமலாக்கி, பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளக்கூடிய தனியார் நிறுவனங்களுக்கு அரசு அனுமதி வழங்கும் நிலை தோன்றியுள்ளது. தொடர்ச்சியாக வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்படும் உண்மையான நிதியானது நூற்றுக்கு 2 வீதம் கொண்டுள்ள நிலையில் அரச பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் படிக்கும் பிள்ளைகளுக்கு மேலதிகமான பணத்தைச் செலவழிக்க நேரிட்டிருப்பதால், பாரிய கஷ்டங்களுக்குப் பிள்ளைகளும், பெற்றோர்களும் தள்ளப்பட்டுள்ளனர். இதனால், இளம் சமுதாயம் தமது கல்வித் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள பல சமூக பிறழ்வுகளில் ஈடுபடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன உலகத்திற்கு ஏற்ப இலங்கையில் கல்வி கற்று வெளியேறுபவர்களுக்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம், புதிய ஔடதம், புதிய கிரகித்தல், புதிய எழுத்தாற்றல், புதிய ஆக்கங்கள் தொடர்பான அறிவு குறைவாக உள்ளது. இந்த சிக்கலை தவிர்ப்பதற்கு சகல இளையோருக்கும் கல்வி பெறும் உரிமையானது அடிப்படை மனித உரிமையாக ஏற்றுக்கொண்டு, வசிக்கும் பிரதேசம், இனம், சாதி, மதம், வர்க்கம் முதலிய பேதங்களின்றி சகலருக்கும் சமமாக கல்வியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கல்வித்துறையை முழுமையாக அரசவுடைமையாக மாற்றுவதும் இளையோருக்கு அந்த அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கும் சமூகத்தில் நிலவும் விஞ்ஞான ரீதியற்ற போலி கருத்தியலை இல்லாமலாக்குவது இலங்கை அரசினதும் நிபுணத்துவம் பெற்ற புத்தி ஜீவிகளினதும் தலையாய கடமையாகும்.

இளையோர் ஒற்றுமையாக செயற்படுவதன் மூலம் இனவாதத்தை எதிர்த்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியும். உள்நாட்டு யுத்தத்தினால், பெருந்தொகையான இளையோரும் ஏனையோரும் இறந்தும் காயமுற்றும் இருப்பிடங்களை இழந்தும் உள்ளனர். முப்பத்தி மூன்று வருடங்களாக நடைபெற்ற இந்த யுத்தம் 2009 களில் நிறைவுற்றும் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் திசையை நோக்கி நாட்டைக் கொண்டு செல்ல முடியாமையானது கவலைக்கிடமான விடயமாகும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே செயற்படும் இனவாதத்தைப் போல இனவாத கருத்தியல் விதைக்கப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்தி, இனங்களுக்கிடையே சகோதரத்துவத்தைப் போல் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கும், உள்நாட்டு யுத்தத்தினால், பின்னடைவுக்கு உள்ளான சமூக, கலாசார விழுமியங்களை மீள நிலைநாட்டிக் கொள்ளவும், அரசும் ஒட்டுமொத்த சமூகமும் முன் நின்று உழைத்தால், இளையோரின் தீர்க்கமான சிந்தனையுடன், வருங்காலத்தில் நல்லதொரு சமூகம் உருவாகும். சகல மக்களுக்கும் ஜனநாயகம் மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் தமது உரிமைகளை அளிக்கக்கூடிய அரசியல், பொருளாதார முறைகளை நிறுவுதல் வேண்டும். இன, மத அடிப்படையில் பாடசாலைகள் நடத்துவதை நிறுத்தி, பாடசாலைகள் அனைத்தும் சகல இனங்களுக்கும் மதங்களுக்கும் உரிய மாணவர்களை உள்வாங்க வேண்டும். எல்லா சந்தர்ப்பத்திலும் தேசிய கீதத்தை சிங்கள, தமிழ்மொழிகளில் பாடுவதைக் கட்டாயமாக்குதல். இவ்வாறான செயற்பாடுகளை இளம் சமூகத்தின் மத்தியில் அமுலாக்குவதன் மூலம் ஆரம்பத்திலேயே இனவாதத்தை இல்லாமலாக்க முடியும். கலை, கலாசாரம், இரசனை, பொழுதுபோக்கு, உடற்பயிற்சி முதலியவற்றை இளம் சமூகத்தின் மத்தியில் வளர்ப்பதன் மூலம், சகபாடிகளை மதித்து நடக்கும் பண்பையும் எதிர்கால சமூகத்தை வழி நடத்தும் ஆளுமையையும் கட்டியெழுப்புவதோடு, அறிவுள்ள ஆக்கத்திறனுடைய நுண்ணறிவு மிக்க மனிதனையும் உருவாக்க முடியும். இன்று இளம் சமூகத்தின் மத்தியில் கலையும் இரசனையும் அருகிச் செல்வதைக் காணலாம், இளம் சமூகத்தின் சகல பிரிவினரதும் கலாசார, தேசிய, மத ரீதியான பிரதேச பண்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக ஊடகங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் சமூகத்தினரை வெளிப்படுத்தி அவர்களை உற்சாகப்படுத்தி மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர்தல் வேண்டும்.

திறமையான இளம் சமூகம் இன்று பொழுதுபோக்கிற்காக மதுபானங்களைப் பாவித்து, அதற்கு அடிமையாக வரையறுக்கப்பட்ட சிந்தனை வட்டத்துக்குள் உள்ளது. சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு பொழுதுபோக்கைப் பெறும் வழிகள் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே குறைந்த பட்சம் இவர்களின் பொழுதுபோக்கிற்காக திரையரங்கங்கள், நாடக மண்டபங்கள், உடற்பயிற்சி நிலையங்கள், விளையாட்டுத்திடல்கள், நூல் நிலையங்கள், சனசமூக நிலையங்கள் சமூக முன்னேற்ற சங்கங்கள் முதலியவற்றை நிகழ்கால சமூகம் அமைப்பதன் மூலம், நேரிய சிந்தனை கொண்ட இளம் சமூகத்தைப் போதைப்பொருளுக்கு அடிமையாவதிலிருந்து தவிர்க்க முடியும், இளம் சமூகத்தினரிடையே தொடர்ச்சியாக கலாசார விழுமியங்களை உயர்வாகவும், முன்னேறிய பழக்க வழக்கங்கள் ஆழமாக பதியும் விதமாக, அநுபவங்களைப் பெறுவதற்காக தேவையான கொள்கையை உரிய துறையில் அறிமுகப்படுத்துவதற்கு நிகழ்கால சமூகம் முன்னுதாரணமாக திகழ வேண்டும். பண்பாட்டுக்கு விரோதமான, அவலட்சணமான வர்த்தக விளம்பரங்கள் மற்றும் ஊடக நிகழ்ச்சிகளை நிறுத்துவதற்கு தேவையான சட்டங்களை வகுத்து துரிதமாக நடைமுறைப்படுத்தல் வேண்டும். இதன் மூலம் இளம் சமூகம் திசை மாறி போவதைத் தடுக்க முடியும். 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' - கலித்தொகையின் வரிக்கு ஏற்ப அவர்கள் வாழ்வில் வெற்றி பெறுவது உறுதி.

இளம் சமூகம், புலனற்றோராதல், HIV நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகுதல், விசப் போதைப்பொருளுக்கு அடிமையாதல், ஒழுங்கற்ற பாலுறவில் ஈடுபடுதல் இவ்வாறு சுகாதார ஒழுக்க சீர்கேடுகள் ஏற்படுவதால், அழிவை எதிர்கொள்கின்றது. உலக நாடுகளுடன் இலங்கையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 1950கள், 1970கள் காலப்பகுதிகளில் மிக உயர் மட்ட சுகாதார வசதிகள் எமது நாட்டில் காணப்பட்டன. அவை இலவச சேவையாகவும் மக்களுக்கு நெருங்கிய வகையில் செயற்பட்டதாலும் சுகாதார வளமிக்க நாடாக, சர்வதேச மட்டத்தில் செல்வாக்கும் சிறப்பும் பெற்றிருந்தது. ஆனால், அவை 1970களின் பின்னரான காலகட்டத்தில் ஏனைய துறைகளைப் போல சுகாதார துறையும் படிப்படியாக தனியார் மயப்படுத்தப்பட்டமையால், இலாபத்தினை நோக்கமாகக் கொண்டு தனியார் துறை வைத்தியசாலைகள் உருவாகும் நிலை ஏற்பட்டது. எமது நாட்டில் சுகாதாரத்துறையின் முழுச் செலவில் அரசு ஒதுக்கும் நிதி 39 சதவீதமாகும். மிகுதி 61 சதவீதம் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. இளம் சமூகத்தினர் பாலுறவு தேவைகளைப் பூர்த்தி செய்து, கொள்வதற்குப் பாதுகாப்பற்ற முறைகளைப் பின்பற்றுவதால், HIV முதலிய தொற்று நோய்களுக்கு இரையாவது அதிகரித்து வருகின்றது. பல துறைகளில் அறிவு வளர்ச்சி பெற்ற இளம் சமூகத்தினரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுறவு தொடர்பாக குறைந்த அறிவு காணப்படுவதால், பயங்கரமான விளைவுகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது. ஆளுமை மிக்க இளம் சமூகத்தினர் இலக்கு, குறிக்கோள் இன்றி பயணிப்பதால், விசப் போதைப்பொருளுக்கு அடிமையாகி இளமையை அழித்து வருகின்றனர். இலங்கையில் 50 குடும்பங்களில் ஒரு குடும்ப அங்கத்தவர் ஹெரோயின் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ளார். இது எதிர்கால இளம் சமூகத்தை படு குழியில் தள்ளிவிடும்.

இவ்வாறான நிலையை இல்லாது ஒழிக்க சுகாதாரத்துறை இலாபத்தின் அடிப்படையில் செயற்படும் நிலை மாறி, மொத்த தேசிய வருமானத்திலிருந்து நான்கு சதவீதத்தை ஒதுக்கி, முற்றாக இலவச சேவையாக வழங்குவதோடு, அதன் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். பாலுறவு கல்வியைப் பாடசாலைகளிலும் ஏனைய சமூக நிறுவனங்களிலும் இளம் சமூகத்தினருக்கு கற்பிக்க வேண்டும். போதைப்பொருளுக்கு அடிமையாகி புனர்வாழ்வு பெற்ற, பாதிக்கப்பட்ட இளம் சமூகத்தினர் தக்க மருத்துவ வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுள்ளதோடு, அவர்கள் பாடசாலை செல்லவும் தொழில் பயிற்சியைப் பெறவும் தொழில் செய்யும் உரிமையும் உண்டு. சிறுவர், சிறுமியர் பற்றிய அறிவை இளம் சமூகத்திற்கு ஏற்படுத்தல் சமூகத்தின் தலையாய பணியாகும்.

'CYBER SPACE ... IS A CLOSE FRIEND' என்று அழைக்கப்படும் சைபர் அவகாசம் - நெருங்கிய நண்பனாக இருப்பவன் என்பது தற்போது எமது நாட்டில் பெருந் தொகையானவர்கள் இணையத்தளங்களைப் பயன்படுத்துவதுடன், பல்வேறு அன்றாட விடயங்களுக்கான தகவல்கள், அறிவு, தொடர்பாடல் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளவும் பெற்றுக்கொடுக்கவும் பிரதான வடிவங்களாக மாறியுள்ளன. அவ்வாறே தமது தனிப்பட்ட விடயங்களைத் தெரிவிப்பதற்குச் சுதந்திரமான சூழல் காணப்படுவதுடன், இளம் சமூகத்தினர் சைபர் இடப்பரப்பை தம் வசப்படுத்த முற்படுவதைக் காணலாம். எவ்வாறாயினும் எமது நாட்டில் குறிப்பிட்டளவு இளம் சமூகம் சைபர் இடப்பரப்பில் செயற்பட தெரியாதவர்களாகவும் போதிய அறிவில்லாதவர்களாகவும் உள்ளனர். எனவே, அவர்கள் மானசீகமாக சிரமத்துக்கும் வெட்கத்திற்கும் ஆளானவர்களாக உள்ளனர் சைபர் இடப்பரப்பின் கொள்கையைப் பற்றி சமூகத்தினர் தப்பான கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். நேரத்தை வீணாக்குதல், சமூக குற்றச்செயல்களை தூண்டுதல், ஏமாற்று வித்தை, பாலியல் இச்சையைத் தூண்டுதல் முதலிய சந்தர்ப்பங்கள் தப்பான கண்ணோட்டத்திற்குக் காரணம்.

சைபர் இடப்பரப்பானது இளம் சமூகத்தின் நெருங்கிய நண்பன், ஆத்மார்த்தமான அறிவியலாளன் என்பதால், அதை கல்விக்கும், தொழிலுக்கும், பொழுதுபோக்கிற்கும், சமூக உதவிகளுக்கும், சமூக தேவைகளுக்கும், சமூக ஆக்கத்திற்கும் பயன்படுத்தும் விதம் பற்றி இளம் சமூகத்தினரிடையே மேன்மேலும் தெளிவுறுத்தி, சைபர் இடப்பரப்பின் மூலம் ஏற்படும் பக்க விளைவுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்வதுடன், அது பற்றி சமூகத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவுறுத்த வேண்டும். சமூகத்தால் இந்த இடத்தில் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான பணி சைபர் அவகாசத்தின் பயன்பாட்டை இளம் சந்ததியினருக்கும் பெற்றோருக்கும் ஒன்றாக இணைத்து தெளிவுபடுத்த வேண்டும். இளம் சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை, கடமைகளை நிறைவேற்றிக்கொள்ள நிகழ்கால சமூகமானது sports, media, friends, jobs, telleverything, education, law, heaith, entertainments, join communication முதலியவற்றை உள்ளடக்கிய YOUTH APP பை அறிமுகப்படுத்த வேண்டும். இதன் மூலமாக இளையோர் சிந்தனையைச் சீர்ப்படுத்த முடியும் .

நாட்டின் தலைமைத்துவத்தை நடத்திச் செல்வதும் சமூக, அரசியல், நிர்வாக சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இளம் சமூகத்தின் பொறுப்பாகவும் உரிமையாகவும் உள்ளன. இன்றைய காலகட்டத்தில் சிவில் சட்டத்தைப் பற்றி இளம் சமூகத்திடையே நிலவும் குறைவான புரிதல் காரணத்தால், பொலிசாரின் முறையற்ற கைதுகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் நிதமும் அவர்கள் உள்ளாவதைக் காணலாம். பணபலம், அரசியல் பலம் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களே, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். சாதாரண குடும்பப் பின்னணியைக் கொண்டவர்கள் இதிலிருந்து விலகியிருக்கின்றனர். இந்த நிலைமைகள் மாற்றம் அடைவதற்கு அரசியல், பொருளாதார, செல்வாக்கு காரணிகளால், இளம் சமூகத்தினர் தலைவர்களாக வருவதற்கு உள்ள சந்தர்ப்பங்களை நீக்கி, உண்மையாகவும் பொது நலத்துடன் சமூகத்திற்குத் தலைமை தாங்க விருப்பமுள்ள இளம் சமூகத்தினருக்குக் சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அத்துடன், இன்று நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்கள் பற்றிய அறிவை பாடசாலை மட்டத்திலிருந்து பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

தற்போது பாரிய பிரச்சனையாக இருப்பது இளைஞர், யுவதிகள் பொதுவான சமூக செயற்பாடுகளில் பங்குபற்றாமையாகும். தலைமைத்துவ ஆளுமையுடன் செயற்படுவோர் குறைவாக இருப்பதாலும், கிராமங்களில் செயற்பாட்டு சங்கங்களில் கூட ஆண், பெண் சம மட்டத்திலான பரஸ்பர புரிந்துணர்வு செயற்பாடுகள் இல்லாததன் காரணமாகவும் மேற்கண்ட பிரச்சனைகள் நிலவுகின்றன. இனம் பலத்தை அடையும் போது நெருக்கமாக பழகுதல், சந்தேகம், குழு மனநிலை இல்லாத மனநிலை, இளம் சமூகத்தினரிடையே காணப்படுகின்றது. அதை தடுப்பதற்குப் பாடசாலைகளில் வருடாந்தம் சிறுவர் முன்னோடிகள் முகாம் (pioneer camps) நடத்துவதற்கும் பிரதேச மட்டத்தில் சிறுவர் முன்னோடி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் நிகழ்கால சமூகமும் அரசும் முன்வர வேண்டும்.

வாழ்க்கையின் பெறுமதியை இளம் சமூகத்திற்கு உணர்த்தி, தற்கொலை, விபத்து, கலவரம், வீட்டிலிருந்து வெளியேறுதல் என்பன தொடர்பான அறிவை ஊட்டுதல் சமூகத்தின் பொறுப்பாகும். தற்கொலை செய்து கொள்ளும் மதிப்பீட்டில் எமது நாடு உலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் இடத்தில் உள்ளது. நாளொன்றுக்கு 14 பேர் தற்கொலை செய்து கொள்வதுடன், 20க்கு மேற்பட்டோர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். இதில் பெரும்பாலானவர்கள் இளையோராவர். எதிர்காலம் சிதைந்து போயுள்ளதன் காரணமாக நம்பிக்கையிழப்பிற்கு உட்படுகின்றனர். அவ்வாறே இளம் தற்கொலையில் எமது நாடு இரண்டு தசாப்தங்களாக உலகத்தில் ஐந்து நாடுகளுக்குள் அடங்குகின்றது. பெண்கள் 10 - 29 வயதுக்கு இடைப்பட்டவர்கள் தற்கொலை செய்து கொள்வதில் உலக அரங்கில் எமது நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. எமது நாட்டில் 2015 ஆம் ஆண்டில் அவசர விபத்துக்கள் 2,771 இடம் பெற்றுள்ளதுடன், அதில் 5,200 பேர் இறந்துள்ளனர். அந்த மரணங்களில் சிலவற்றைத் தவிர மற்றைய அனைத்தும் வீதி விபத்துக் காரணமாக ஏற்பட்டவைகளாகும். இவ்வாறு இறந்தவர்களில் அதிகமானோர் இளம் சமூகத்தினர் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டிய இவர்கள் இவ்வாறு தற்கொலையாலும் விபத்தாலும் மரணத்தைத் தழுவுவது வேதனைக்கும் கவலைக்கும் உரிய விடயமாகும்.

இவற்றைத் தடுப்பதற்குச் சமூகப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இளம் சந்ததியினருக்கும் நேரடித் தொடர்பினை ஏற்படுத்தி, ஆட்சி முறைக்கு சேர்த்துக் கொள்வதற்காக செயற்றிட்டம் ஒன்றை சமூகமும் அரசாங்கமும் சேர்ந்து வகுக்க வேண்டும். விபத்துக்களைக் குறைப்பதற்கும் விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் செயற்றிட்டங்களையும் நடத்த வேண்டும்.

சூழலையும் புவியையும் பாதுகாப்பது அனைத்து சமூகத்தினதும் கடமையாகும். மனித வாழ்வுடன் நேரடித் தொடர்பு கொண்ட சூழல் இலாபத்தை தமது ஒரே குறிக்கோளாகக் கொண்ட பொருளாதார முறை காரணமாக அழித்தொழிக்கப்பட்டுள்ளது. மிருகங்கள், பறவைகள், காடுகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சுற்றாடல் தொகுதியையும் அழித்தொழித்ததின் காரணமாக காலநிலை மாற்றம், இயற்கை அனர்த்தம், நோய்கள் முதலியன சமூகத்தைப் பாதித்துள்ளன. எதிர்கால தலைமுறையினருக்குச் சுற்றாடலை பாதுகாப்பாக கையளிக்க வேண்டும். சூழல் பற்றி அன்பும், பரிவும், பிடிப்பும் ஏற்படும் விதமாக தயாரிக்கப்பட்ட விடய நெறிகளைப் பாடசாலை கல்வியிலும் உயர்க்கல்வியிலும் பாடமாகக் கற்பிப்பதன் மூலம் இளம் சமூகத்திற்கு விழிப்புணர்வை உண்டு பண்ண முடியும்.

வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, ஆண் - பெண் சமத்துவத்தை இளம் சமூகத்திற்குத் தெளிவுபடுத்தல் முக்கியமான விடயமாகும். பொருளாதாரம், அரசியல் அதிகாரங்கள் காரணமாக, உயர்வான சலுகைகளைச் சிறிய குழுவினரே பெறுகின்றனர். எமது சமூகத்தில் பெரும்பான்மையினர் பெண்கள் என்னதால், பலவும் இல்லாமலாக்கப்பட்டுள்ளன. தொழில் செய்யும் போது சமவுரிமை இன்மை, அதிகாரம் இன்மை, அங்கீகாரம் இன்மை, ஒடுக்குமுறை, சமூகத்தில் நிலவும் பிழையான கருத்தியல், திருமணத்தின் போது எதிர் கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவால்கள் முதலிய சிக்கல்களில் இருந்து ஓரளவு பெண்கள் விடுபட்டபோதும் முழுமையாக விடுபடவில்லை. அதிகாரம் தந்தையிடமோ, கணவனிடமோ உருவான நிலையில் இளம் பெண்கள் அரசியல் பாத்திரங்களாக இருந்த போதிலும், சாதாரண பெண்களுக்கு அரசியலில் பிரவேசிப்பதற்கான சந்தர்ப்பம் குறைவாகவே உள்ளது. இவற்றுக்கு உடனடித் தீர்வாக சமூகத்தில் நிலவும் பின்தங்கிய எண்ணங்களை உடனடியாக மாற்ற வேண்டும், தனியார் துறையில் வேதனத்தை சமமாக வழங்குதல், அனைத்து தேர்தல்களிலும் 25 சதவீதம் பெண்கள் பிரதிநிதித்துவம் வழங்குதல், சாரதி அனுமதிப்பத்திர கட்டணப் பணத்தை 50 சதவீதத்தால் குறைத்தல் முதலியவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மேலும் இளம் பெண்களின் செயற்பாட்டைக் கூட்டலாம்.

தொகுத்து நோக்கும் போது இன்றைய இளையோர் நல்ல சிந்தனைகளுடன், திகழ்ந்தாலும் சில சட்டவிரோத செயல்கள் அவர்களைத் திசை திருப்புகின்றன. எவ்வாறாயினும் அவர்களிடம் காணப்படும் நல்ல சிந்தனைகளை இன்றைய சமூகம் கட்டியெழுப்பி பாதுகாத்து எதிர்கால சமூக வளர்ச்சி, இளையோரின் சிந்தனையுடனும் நிகழ்கால சமூகத்தின் பங்கேற்பும் பரஸ்பர தொடர்பு கொண்டுள்ளது. அந்த தொடர்பை வலுப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் சமூக மாற்றத்தினை ஏற்படுத்தி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும். இலங்கையில் 1990 களில் உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களில் 21 சதவீதத்தினர் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்பட்ட போதிலும் தற்போது 17 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. 2020 களில் குறைந்தபட்சம் உள்வாங்கப்படும் தொகை சித்தியடைந்த தொகையில் 2/3 ஆக அதிகரிப்பதன் மூலமும் தொழில்வாய்ப்பையும் தொழிற்சாலைகளையும் பெருக்குவதன் மூலமும் இளம் சமூகத்தின் சிக்கல்களைக் குறைக்கக் கூடிய நிலை தோன்றும். நவீன இளம் சமூகத்தினர் சமவுரிமை, சுற்றாடல் நேசிப்பு, நச்சுப்போதை எதிர்ப்பு, பெண்ணை மதித்தல், தாயகத்தை நேசித்தல், ஊடகங்களைச் சரியாகப் பயன்படுத்தல் முதலிய பண்புகளை உள்வாங்கி செயற்பட்டால், எதிர்காலத்தில் இளையோரின் நல்ல சிந்தையுடன், நல்ல சமூகத்தை நிகழ் கால சமூகத்தின் ஆதரவுடன், கட்டியெழுப்ப முடியும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளையோர்களின் நல்ல சிந்தனையுடனான சமூக மாற்றத்தினை ஏற்படுத்துவதில் சமூகத்தின் பங்கேற்பு

செல்வி த.சங்கவி

புது வீதி, குரும்பசிட்டி கிழக்கு,

தெல்லிப்பழை.

**மூன்றாமிடம்**

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்ற கருத்திற்கு சமூகத்தின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாக உள்ளது. எந்தவொரு இளைஞர்களும் ஏதோவொரு வகையில் சமூகத்திற்குள்ளே பிறந்து, சமூகத்திழற்குள்ளே வளர்ந்து, சமூகத்திற்குள்ளே மடிந்து வீடகின்ற நிலை காணப்படுகின்றது. எனவெ அவர்கிளன் வளர்ச்சியில் சமூகத்தின் பங்களிப்பு அத்தியவசியமானதா அமைகின்றது. நிச்சயமாக ஒவ்வொருவரும் தமது சமூதாயத்தை நல்ல வழியில் கட்டியெழுப்ப தம் பங்களிப்பை வழங்க வேண்டும்.

அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என ஔவையார் கூறியுள்ளார். அது முற்றிலும் உண்மைதான். மனிதப்பிறவி என்பது பிறப்புக்களில் சிறந்தது என்றும் ஈடு இணை அற்றது என்றும் கூறுவர். நல்லவை, தீயவை எது என்பதை அறிந்து செயல் ஆற்றக் கூடிய உயர்ந்த பகுத்தறிவு மனிதனுக்கு உரியது. அவை யாவற்றிலிருந்தும் மனிதப் பிறவி அதன் உயர் தன்மையை நன்கு தெளிவாக்கின்றது. இத்தகைய சிறப்பு மிக்க மனிதப் பிறவி எடுத்த நம் சிறார்கள் நாளைய சமூகத்தின் தலைவர்கள் ஆக உருவாக வழிநடத்த வேண்டிய கடமை நம் சமூகத்திற்கே உரியது.

ஒரு சிறந்த தலைவனுக்கு இன்றியமையாத பண்பாக அமைவது ஒழுக்கம் ஆகும். அதனை நாம் நம் இளைஞர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். தோன்றிற் புகழொடு தோன்றுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வாக்கிற்கு அமைய மாணவர்கள் மனிதப் பண்புடையவர்களாக இவ்வுலகில் வாழ்ந்து மறைய வேண்டும் கால மாற்றத்திற்கேற்ப பழக்கவழக்கங்கள் , வாழ்க்கை முறை என்பன மாறிக்கொண்டேயுள்ளது. எனினும் ஒழுக்கம் எக் காலமும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்றாக அமைகின்றது.

'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்" என்கின்றார் வள்ளுவர் ஒருவரின் வாழ்வில் உயர்வு, வெற்றி, தோல்வி என்பவற்றை ஒழுக்கமே நிர்ணயிக்கின்றது. அதாவது ஒருவரின் சீரிய வாழ்விற்கு சிகரமாக அமைவது ஒழுக்கமாகும். எனவே அதன் இன்றியமையாமையை நாம் நம் இளைய தலைமுறைகளிற்கு போதித்தல் மிக மிக அத்தியவசியமான ஒன்றாகவே உள்ளது. மாணவர்களிடம் எத்தகைய செல்வம் இருந்தாலும் ஒழுக்கம் மட்டும் இல்லை எனின் உயர்வும், சிறப்பும் இல்லாமலே போய்விடும் பல்வேறு திறமைகளை காட்டிலும் ஒழுக்கமேசிறந்து நிற்கின்றது. இறந்தும் வாழ்வதே நம் வாழ்வின் இலட்சியமாக அமைய வேண்டும். இதையே வள்ளுவரும் "ஒழுக்கத்தின் எய்துவார் மேன்மை" என குறிப்பிட்டுள்ளார். மாணவர்களுக்கு ஒழுக்கம் உயிரைப் போன்றது. எனவே அதன் இன்றியமையாமையை மாணவர்களுக்கு புகட்டி அவர்களை சிறந்த தலைவர்களாக உருவாக்கல் அச் சமுதாயத்தின் கடமையாக திகழ்கிறது.

மேலும் புத்தர், யேசு, காந்தி போன்றோரின் வரலாற்றை நாம் புரட்டிப் பார்ப்போமாயின் அவர்கள் ஒழுக்கத்தினால் உயர்ந்தவர்களாக இருப்பதை காணலாம். மகாத்மாகாந்தி அவர்கள் இளைஞர்கள் ஒழுக்கம் பயில வேண்டும் என வலியுறுத்தி உள்ளார். அவர் ஒழுக்கத்தை உயிரிலும் மேலாக மதித்துப் பேணிக் காப்பாற்றியதன் மூலமே உயர்ந்தோரால் "மகாத்மா" எனப் போற்றப்பட்டார். ஒவ்வொரு துறையிலும் உயர்ந்து விளங்கும் உத்தமர்களின் வாழ்வை பார்ப்போமாயின் அவர்கள் உயர்விற்கு ஒழுக்கம் அடிப்படையாக அமைவதை காணலாம். எனவே நாமும் நம் இளைஞர்களை ஒழுக்கத்தில் சிறந்து செயற்பட வைப்பதன் மூலம் நாளைய தலைவர்களாக உருவாக்க முடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்பதற்கமைய அவர்களிற்கு மொழி அறிவு அவசியம். பேச, எழுத, கருத்துப் பரிமாற மொழி அறிவு துணையாக உள்ளது. எமது தாய்மொழி அறிவுடன் சர்வதேச மொழியையும், நாட்டிலே பேசப்படும் சகோதர மொழி அறிவையும் ஒவ்வொரு இளைஞனும் அறிந்திருக்க வேண்டும். அதற்கு அச் சமூகம் அவனுக்கு இன்றியமையாததாக இருக்க வேண்டும்.

மேலும் இலங்கையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்றும் கல்வியின் ஊடாக மொழியாகவும், பேச்சு மொழியாகவும் விளங்குகின்றது. இதைவிட அராபி, மலே போன்ற மொழியும் வேறு சில மொழியும் மக்களால் பேசப்பட்டன. இங்கு வாழ்பவர்கள் குறைந்தது இரு மொழியாவது பேசக் கூடியவர்களாக இருக்கின்றனர் இவ்வாறு பல மொழிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திருப்பது பல நன்மைகளைத் தருகின்றது. எனவே இத்தகையை கல்வி முறையை நாம் நம் சிறார்களிற்கு புகட்டல் அத்தியவசியமானதாகும்.

இன்று இலங்கை பாடசாலைகளில் ஊடக மொழியை தவிர சர்வதேச மொழியும் இரண்டாம் மொழியான சிங்களத்தையும் தமிழ் மாணவர்களுக்கும் தமிழ் மொழியை சிங்கள மாணவர்களிற்கும் கற்பிக்க வேண்டும். மேலும் எம் சிறார்கள் மத்தியில் பன்மொழி அறிவை விருத்தி செய்ய பாடசாலையில் கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடைபெற வேண்டும் எமது முன்னோர்கள் பலர் ஏதோ இரண்டு மொழியில் மிக்க பாண்டித்தியம் பெற்றிருந்தனர். படித்த சமூகத்தால் நாட்டின் பல பிரச்சினைகள் வெளிக்கொணரப்பட்டு தீர்க்கப்பட்டுள்ளது என்றும் மக்களுக்கு பன்மொழி அறிவு பல தரப்பட்ட நன்மைகளை தரும் என்பது உறுதி. பன்மொழி அறிவை விருத்தி செய்ய வழி அமைத்தல் கட்டாயமானது.

இன்றைய இளைஞர்கள் செய்கின்ற ஒவ்வொரு செயற்பாடுகளும் வருங்கால சந்ததியின் எதிர்காலத்தையும் தீர்மானிப்பதாக அமைந்து விடுகின்றது. எனவே நாளைய சமூகத்தின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு நாம் இன்றைய தலைமுறையை வழிப்படுத்தல் வேண்டும். எனவே ஒரு தலைவர்கள் உருவாவதில் சமூகத்தின் பங்களிப்பு கட்டாயம் என்பதை எம்மால் உணர முடிகின்றது. இதனை எடுத்து நோக்குவோமாயின் ஒரு குழந்தை முதலில் தன் குடும்பத்துடனேயே சேர்ந்து தன் வாழ்வை ஆரம்பிக்கின்றது. அவ்வேளை அக் குழந்தையை ஒரு சீரிய வழியில் நடத்தும் முழுப்பொறுப்பையும் மேலும் அக் குழந்தை நற் பாதையில் வழி நடத்துவதற்கான முதற் திறவுகோளாக அமைவது அக் குடும்பமாகும்.

மேலும் ஒரு குடும்பம் எனும் போது அங்கு தாய் , தந்தை , சகோதரர்கள் போன்றோர் அக் குழந்தையை சீரிய முறையில் வழிப்படுத்தல் வேண்டும். சிறிது காலத்தின் பின் அக் குழந்தை தன் சமூகத்துடன் இணைந்து வாழ ஆரம்பிக்கின்றது. அவ்வேளை அதனை வழி நடத்தும் முக்கிய பங்கை சமூகமே ஏற்கிறது.

இன்றைய இளைய தலைமுறையினர் நவீன உலகின் வசதிகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் தம் பெற்றோர்களின் கருத்திற்கு மாறுபட்ட கருத்துடையவர்களாக இருக்கின்றனர். தற்போது இளைஞர்கள் சிலர் பெற்றோருக்கு தெரியாமல் நண்பர்களின் து/ண்டுதலால் பல நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் பல விபரீதங்கள் ஏற்படுகின்றன.

சமீப காலமாக மாணவர்கள் நண்பர்களின் தூண்டுதலால் புகைப்பிடித்தல், போதைப் பழங்க்கத்திற்கு அடிமையாதல், பள்ளிக்குச் செல்லாமல் நண்பருடன் இணைந்து கொட்டமடித்தல், திருடுதல் மற்றும் இணையத்தின் வாயிலாக பார்க்கக் கூடாத பக்கங்களை பார்த்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இதனால் ஏற்படும் விளைவுகளை மாணவர்கள் எண்ணிப்பார்ப்பது இல்லை. கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போல பாதிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் கலங்குவதில் பயன் எதுவும் இல்லை. எனவே நாம் மாணவர்களை சீரிய முறையில் வழிப்படுத்தல் மூலம் சில பாதக விளைவுகளை தவிர்க்க முடியும்.

இதனுடன் புகைப்பிடித்தல் மற்றும் போதைப் பழக்கத்திற்கு அடிமையாதல் என்பவற்றால் உடல் நலம் பாதிக்கப்படும் அவர்களை மட்டும் தண்டித்துக் கொள்ளாமல் சுற்றி இருப்பவரையும் தண்டிக்கின்றனர். புகைப்பிடிக்கும் போது வெளியேறும் விஷக்காற்றை சுவாசிப்பவர்களும் புகைப்பிடிக்காமலே பாதிக்கப்படுகின்றனர். அது மட்டுமன்றி புகைப்பிடிக்கவோ அல்லது போதைப்பொருள் உட்கொள்ளவோ ஆரம்பித்து விட்டால் அதிலிருந்து மீள்வது கடினம் எனவே ஒவ்வொரு சமூகமும் இளைஞர்களை தீயவழியில் செல்லவிடாது நற்பாதையில் வழிநடத்தல் அவசியமான ஒன்றாக அமைகின்றது.

சிலர் நண்பர்கள் சொல்வதைக்கேட்டு பள்ளிக்குச் செல்லாது இருப்பதால் அவர்களின் கல்விப் பயணம் பாதிக்கப்படுகின்றது. அது மட்டுமா? சில் நண்பர்களின் தாக்கத்தால் இணையம் மூலமாக பார்க்கக் கூடாத பக்கத்தைப் பார்க்கின்றனர். இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள் குடும்பத்துடன் அதிக நேரம் செலவிடுவதில்லை. இது போன்ற நடவடிக்கையால் மாணவர்கள் படிப்பில் அக்கறை செலுத்தாது மாணவர்களின் எதிர்காலமும் பாதிப்படைய நேரிடுகின்றது எனின் அவர்கள் எவ்வாறு நாளைய தலைவர்களாக உருவாக முடியும்?

மாணவர்கள் பெற்றோருக்குத் தெரியாமல் இது போன்ற பல நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்க பெற்றோர்கள் அவர்களுடன் அதிக நேரம் செலவழிக்க வேண்டும் சில நேரங்களில் மாணவர்கள் தீய வழியில் செல்வதற்கு பெற்றோர்கள் மற்றும் சமூகம் காரணமாக அமைகின்றது. எனவே பெற்றோர்கள் தம் வேலையில் மட்டும் கவனம் செலுத்தாது தம் பிள்ளைகளையும் கண்கானிக்க வேண்டும்.

மேலும் அன்றாட வேலை விட்டு வீடு திரும்பியதும் தம் பிள்ளைகளிடம் பள்ளியில் நடந்ததைப் பற்றிக் கேட்க வேண்டும் இவ்வாறு கேட்பது பிள்ளைகள் ெற்றோர்களிடம் தங்களது அன்றாட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வழிவகுக்கும். அது மட்டுமன்றி பெற்றோர்கள் தம் பிள்ளைகளுடன் கருத்து மிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்கலாம். உதாரணமாக 'தில் தில் மனதில்" குற்றக் கண்காணிப்புப் போன்ற நிகழ்வைப் பார்க்கலாம். இந்த நிகழ்வின் மூலம் கல்வியின் முக்கியத்துவம் அறிந்து விழிப்புடன் செயற்பட வழி ஏற்படும். அது மட்டுமன்றி பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நண்பர்களை தெரிந்து வைப்பது அவசியம் ஆகும். அப்போது தான் அவர்கள் தம் பிள்ளைகள் தீய நண்பர்களுடன் நட்பு வைப்பதை தடுக்க முடியும்.

"இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" ஆகையால் மாணவர்கள் பள்ளிப் பருவத்தில் கல்வியில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் எக்காரணத்தைக் கொண்டும் படிப்பில் கவனம் செலுத்துவதை விடக்கூடாது. நண்பர்களிடமிருந்து நல்லவற்றை மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக் கொள்ள வேண்டும். மாணவர்கள் தத்தம் இலட்சியத்தில் குறிப்பாக இருத்தல் அவசியம் ஆகும். இதனால் நண்பர்களின் தூண்டுதலுக்க பலியாக மாட்டார்கள். அவற்றை நாம் எமது சிறார்களிற்கு போதித்தல் மூலம் அவர்களை சிறந்த வழியில் கொண்டு செல்ல முடியும். எனவே ஒரு இளைஞனின் வாழ்வை இச் சமூகமே நிர்ணயிக்கிறது என்பது திட்டவட்டமான உண்மை ஆகும்.

ஒரு சமூகம் மாணவனுக்கு கல்வியின் இன்றியமையாமையினை உணர வைக்க வேண்டும் கல்வி வெள்ளத்தால் அழ்யாது, நெருப்பினால் அழியாது, கள்வரால் கவர்ந்து செல்ல முடியாது. கல்வி கொடுக்கக் கொடுக்க கூடுமே தவிர குறையாது. இதை ' வெள்ளத்தால் அழியாதது......" எனும் பாடல் அடி விளக்கி நிற்கின்றது. கல்வி அறிவினால் அறிவு வளரும் நாம் கல்வியை எந்தளவு கற்கிறோமோ அந்தளவு நம் அறிவு பெருகும். அறிவுடையவரே வாழ்வில் முன்னேற்றம் அடைவர். மணல் இடத்து கேணி தோண்டிய அளவு நீர் ஊறும் அது போல மாணவர்கள் கற்ற அளவு அறிவு வளரும். மேலும் கல்வி கற்றவன் தன் நாட்டிலோ, பிற நாட்டிலோ சிறப்படைவான். ஆனால் நாட்டை ஆளும் அரசனுக்கோ அவன் நாட்டில் மட்டும் தான் சிறப்பு உண்டாகும். இதை ஔவையார்

'மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையான்......" என்னும் அடிகள் மூலம் கூறியுள்ளார். மற்றும் கல்விச் செல்வம் ஈடு இணையில்லாச் செல்வம் என்பதை வள்ளுவர் "கேடில் விழுச் செல்வம் கல்வி" எனக் கூறுகிறார். கெடுதல் அல்லது அழிதல் இல்லாத செல்வம் கல்வி என்பதே இதன் பொருளாகும் எனவே இத்தகைய சிறப்பமிக்க கல்விளை நாம் எம் சிறார்களிற்கு போதித்து நாளைய தலைவர்களை உருவாக்கல் நம் கடமையாகும்.

கல்வி அறிவு, ஒழுக்கம் என்பன உடையவரே நல்லவர் கல்வி அறிவு நல்லவர்களையும் தீயவர்களையும் வேறுபடுத்தும். கண்ணுடையவர் என்று உயர்வாக கருதப்படுபவர் கற்றவரே என்றும் கல்லாதவர் முகத்தில் இரண்டு புண்கள் உடையவர் ஆவர் என்றும் வள்ளுவர் கூறியுள்ளார். அறிவு ஒன்றே நமக்கு அழிவு வராதபடி காக்கும் காவியம் ஆகும். அவ் அறிவினால் எல்லாவற்றையும் தேடி இன்ப வாழ்வு வாழ முடியும். எனவே சமூகம் ஒரு இளைஞனின் இன்ப வாழ்விற்கு அவனிற்கு கல்வியின் மகத்துவத்தை போதிக்க வேண்டும். என்பது இன்றியமையாதது ஒன்றாகும்.

மேலும் ஒரு இளைஞன் நற் பாதையில் செல்வதற்கு நூல்நிலையங்களும் உண்மையான உறைவிடமாகத் திகழ்கின்றது. இவ்வித நூல்கள் நமது வாழ்வின் உண்மைகளைப் பாதுகாத்து வைத்துள்ளது. அவை நமக்கு பரந்த அறிவையும் விரிந்த சிந்தனையையும் தருகின்றது. அறம் எது அறம் அல்லதாது எது எனப் பகுத்தறியும் தன்மை நூல்களை வாசித்தல் மூலம் விரித்தி அடைகிறது. மாணவர்களின் உள்ளமும் விரிவடைகின்றது. இத்தகைய நூல்களை வாசிக்கும் பழக்கத்தை இளஞ் சந்ததியினரின் மத்தியில் ஏற்படுத்தல் சமூகத்தின் தலையாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அறிவை வளர்ப்பதற்கு இளமையில் இருந்தே கற்றல் அவசியம் ஆகிறது. வள்ளுவர் இதனையே "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" எனக் கூறியுள்ளார். இவ்வகையில் நோக்குமிடத்து ஔவையார், திருவள்ளுவர், காரைக்கால் அமடமையார், கம்பர், மங்கையர்கரசியார் போன்றோர் கல்வியில் சிறந்தவர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனால் அவர்களின் பெயர்கள் இன்றும் நிலைபெற்று இருப்பது மறக்க முடியாத ஒன்றாகும். கல்வியைப் பெற நாம் மிகவும் முயன்று வருவதுடன் உயர்ந்த நூல்களை கற்று வரும் போதே அந்நூல்களிற் சொல்லப்பட்ட நல் ஒழுக்கத்தையும் பழகி வரல் வேண்டும். இதனை நம் இளைஞர்களிற்கு புகட்ட வேண்டும்.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் எனவே, அவர்கள் அனைத்திலும் சிறப்பு அடைந்திருக்க வேண்டும் மாதா, பிதா, குரு , தெய்வம் எனும் வரிசையில் தெய்வத்திற்கு முதற்படி குருவிற்கு வழங்கப்பட்டது. எனவே, மாணவர்கள் கல்வியின் முக்கியத்தை இதிலிருந்து உணர்தல் இன்றியமையாதது. எனவே, மாணவர்கள் கல்வியின் சிறப்பை அறிந்து "கற்க கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதங்குக் தக" எனும் வாக்கிற்கிணங்க பிச்சை புகினும் கல்வியை கற்று அறிவை விருத்தி செய்து எதிர்கால வாழ்வை வளம்படுத்தல் வேண்டும். இதற்கு அவனது சமூகம் அவனிற்கு உறுதுணையாக நிற்றல் கட்டாயமானதாகும்.

எனவே, இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்பதனால் நாம் அவர்களை சிறுவயதிலிருந்து சிறந்த நற் பண்பு உடையவர்களாகவும் கல்வியின் மகத்துவத்தை கூறி அவர்கள் சிறந்த கல்வி அறிவு மிக்கவர்களாகவும் , அனைத்து துறையிலும் தேர்ச்சி மிக்கவர்களாகவும் உருவாக்குவது சமூகத்தின் இன்றியமையாத கடமையாகக் திகழ்கின்றது. என்பது வெளிப்படை உண்மை ஆகும். ஒழுங்கமைந்த சமூகத்தில் வாழும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் சமூக செயற்பாட்டுடன் தொடர்புபடுகின்றனர். இவ்வாறு தொடர்புபட வேண்டியது அடிப்படை தேவையாகும். இத்தகைய தொடர்பை பேணும் சகலரும் தம் தொடர்புகள் ஊடாகவும் அதற்கு அப்பாற்பட்ட வழிமுறையூடாகவும் நாளைய தலைவர்களை உருவாக்குவதில் பங்களிப்பை வழங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல சிந்தனையுடனான இளையோர் சமூகம்

சிறாஜ் பாத்திமா ஷல்மா
இல. 153, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

முதலாமிடம்

இளமை என்பது மனித வாழ்வின் ஒரு பரிணாமம். மனிதத்தை முழுமையாய் என்ற வகையில் நிச்சயமான, நிலையான என்றும் இருக்கக்கூடிய பரிணாமம். ஆனால் மனித வாழ்வைப் பொறுத்த வரையில் இது மாறுகின்ற, நிலையில்லாத, கடந்து செல்லும் ஒரு பரிணாமம். சாதாரணமாக 15 வயது முதல் 24 வயது வந்தோரை இளையோர் என்போம். ஆனால் நாட்டிற்கு நாடு இவ்வயதெல்லை மாறுபடுகின்றது. நடப்பனவற்றை புதுமையால் அணுகும் குணம். அளவுகடந்த ஆற்றல், மனதில் நிரம்பி வழியும் துணிச்சல், புதிதாய் கற்றுக்கொள்ளத் தூண்டும் எண்ணம் இவை இளமைப்பருவத்தின் யதார்த்த உண்மைகளாகும்.

"மதி மயங்கிய நிலையில் வாழ்வதே இளமை, வளர்வதாலும் எல்லாம் இன்பமாய்த் தெரிவதாலும் இதையறிந்து கொள்ளவும் வாய்ப்பில்லை" என்கின்றார் அரிஸ்டோட்டில். சிலர் "இந்த இளைஞர்கள் சொல்லித் திருந்துவார்களாக இருந்தால் திருத்த முயற்சி செய்யலாம். ஆனால் இவர்கள் மோசமானவர்கள் திருந்தவே மாட்டார்கள்" என்று கூறிக் கொண்டே இருப்பார்கள். வயது போனவர்கள் சிலர் இளைஞர்களை தரக்குறைவாக கதைப்பதும் அவர்களுக்கு எதிராகச் செயல்படுவதும் நாம் அறிந்த ஒன்றே. ஒரு இளைஞன் நன்றாகச் செயற்பட்டால் சரியானதைச் செய்தால் பிறருக்கு அவன் எதிராக செயல்படுகிறான் என்று குறை கூறும் சிலரும் இல்லாமல் இல்லை. இருந்தாலும் இவை இள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தம். குறை கூறுவதைப் பொருட்படுத்தாது முன்னோக்கிச் செல்லும் தன்மை கொண்ட இளைஞர்களும் நம்மில் உண்டு. இளைஞர்கள் வாய்ப்பிற்காக காத்திருக்கின்றார்கள். கிடைக்கும் போது அதனை சரியாகப் பயன்படுத்துகின்றார்கள். துடிப்புடன் எதிர்பார்ப்பும் எல்லோருக்கும் உண்டு. ஆனால் அதை பாதுகாத்து உயிர் கொடுப்போர் இளையோர் மட்டுமே. ஒரு முறை ஒரு வழி என்றால் அடுத்தமுறை வேறு வழி என வாழ்வோர் இளையோர். புதிதாய் முயற்சிகள் எடுக்கும் போது தோல்விகள் வருவது இயல்பு. இவற்றை கற்றுக்கொள்ள வாய்ப்பு என நினைத்துக் கொள்ளும் போது புதுப்படைப்புக்கள் பல வளரும். கண்டுபிடிப்புக்களும் புது அறிவியல் உண்மைகளும் தோல்வியில் இருந்து பிறந்தவையேயாகும்.

"இளையோர் நாளைய உலகின் நம்பிக்கை மட்டுமல்ல இன்றைய உலகின் யதார்த்தங்கள்" என்று திருவிவிலியத்தில் கூறப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல ஒரு நாட்டினைப் பொறுத்தவரையிலும் இளையோர் நாட்டினுடைய முக்கிய வளமாகவும் காணப்படுகின்றனர். அந்த வகையில் இளையோர்களை "நாட்டினுடைய முதுகெலும்பு" என்றும் கூறுகின்றனர். இளையவர்களின் எதிர்காலத்தினை நல்ல முறையில் கொண்டு செல்வது ஒரு அரசாங்கத்தினுடைய கடமையாகும். அது மட்டுமல்லாமல் இளையோர்களின் வீரியமான சிந்தனைகளே எமது நாட்டின் எதிர்காலத்தை நல்ல வழியில் கொண்டு செல்லக்கூடிய ஆற்றலெனக் கொண்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

இன்றைய இளையோர்களுக்கான நல்ல சிந்தனைக்கான முதலாவது சூழல் குடும்பமாகும். ஒரு சாதாரண மானிடனை அறிவிலியாக்குவதும் குடும்பம் தான். அறிஞனாக்குவதும் குடும்பம் தான். குடும்பம் என்பது ஒரு மனித வாழ்க்கையில் முக்கியமான அம்சத்தை தோற்றுவிக்கின்றது. இதனை நாம் "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்ற சினிமாப் பாடலடியின் மூலம் உணரலாம். ஒரு மனிதனின் பிறப்பு குடும்பத்தில் ஆரம்பமாகின்றது. அம் மனிதனின் பருவங்களாக குழந்தைப்பருவம், பிள்ளைப்பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவம் என பாகுபடுத்தலாம். குழந்தைப் பருவமானது மனிதனுடைய அறியாமையை சுட்டி நிற்கின்றது. அவ் அறியாமையை நீக்குவது குடும்பமாகும். குடும்பத்தில் உள்ள பெற்றோர்கள், சகோதரர்கள், மூத்தவர்களின் அணுகுமுறையைப் பொறுத்தே குழந்தையின் மனநிலை தீர்மானிக்கப்படுவதுடன் ஏனைய பருவங்களுக்கும் அது அடித்தளம் ஆகின்றது. இதைத்தான் பழமொழியின் ஊடாக "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்று கூறுகின்றார்கள். எனவே இளையோர்களின் மத்தியில் நல்ல சிந்தனை ஏற்படுவதற்கு குடும்பம் ஒரு அடிப்படைக் காரணியாக அமைகின்றது.

இளைஞர்களை நல்ல வழியில் கொண்டு செல்வதில் இன்னொரு அங்கமாக விளங்குவது பாடசாலைச் சூழலாகும். பாடசாலை மாணவர்கள் புதுப்புது அனுபவங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். எவ்வாறான அனுபவங்கள் என்றால் பாடசாலையில் காணப்படும் இயற்கை, செயற்கைச் சூழல் புதுமையாக இருந்தாலும் சக மாணவர்களின் அணுகுமுறையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களின் அணுகுமுறையும் மாணவனுக்கு ஒரு புதுப்பாடத்தை கற்றுக்கொடுக்கின்றன. இப்பாடமானது அம்மாணவனின் உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதாகக் காணப்படுகின்றது. ஒரு மாணவன் பாடசாலையில் வெறுமனே புத்தகத்தை வாசிப்பதும், பரீட்சை எழுதுவதும், கற்றலில் ஈடுபடுவதும் மட்டுமன்றி அவனிடத்தில் ஆளிடைத் தொடர்புகளை அதிகரிக்கின்றது. சக மாணவர்களிடையில் ஏற்படும் நட்பு என்ற ஒரு உன்னதமான உறவைக் கூறலாம். இந்நட்பின் மூலம் ஆளிடைத் தொடர்புகள் அதிகரிப்பதுடன் பல்வேறான நற்பண்புகளும் தோன்றுகின்றன. அதாவது நம்பிக்கை, விட்டுக்கொடுப்பு, பொறுமை, சகிப்புத்தன்மை போன்றவற்றை கூறிக்கொண்டே போகலாம். "உன் நண்பனைப் பார்த்தால் உன்னைப் பற்றி அறிந்து கொள்ளலாம்" என்று கூறுவது இதற்கு சிறந்த உதாரணமாகும். எனவே இவ்வாளிடைத் தொடர்பானது மாணவப் பருவத்தில் மட்டும் நின்று விடாமல் அவனுடைய இளமைப் பருவத்தில் தாக்கத்தை செலுத்துகின்றது. இத்தாக்கமானது ஒவ்வொரு இளைஞனுக்கும் நல்ல சமூகத்தை உருவாக்கவும் தலைமை வகிப்பதற்கும் ஒரு ஊன்றுகோலாக அமைகின்றது. எனவே நல்ல சிந்தனைகளுக்கும் சமூக மாற்றத்திற்கும் இப்பாடசாலைச் சூழலானது ஒரு அங்கமாகக் காணப்படுகின்றது. அது மட்டுமன்றி பாடசாலையில் இடம்பெறும் ஆண்கள் சாரணர் இயக்கம், பெண்கள் சாரணர் இயக்கம், சுற்றாடல் படையணி எனப் பல்வேறு கழகங்கள் செயற்படுவதுடன் அக்கழகங்களே எதிர்காலத்தில் அவர்கள் நற்பிரஜைகளாக உருவாகவும் நல்ல சமூகத்தை உருவாக்கவும் நற்சிந்தனையை ஏற்படுத்தவும் தோற்றுவாயாக அமைகின்றது.

ஒவ்வொரு இளைஞர்களுடைய நல்ல சிந்தனைக்கும் சிறந்த உரமாக விளங்குவது சமயமாகும். மனிதன் கடவுளினால் படைக்கப்பட்டாலும் அவன் தனக்கென்று ஒரு கடவுளை தேர்ந்தெடுத்து மதத்திற்கான புதிய தோற்றுவாய்களை உருவாக்கி அதில் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். எமது நாட்டில் நான்கு வகையான சமயங்கள் காணப்படுகின்றன. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம். இச்சமயங்கள் வேறு வேறு கடவுளைக் கொண்டு காணப்பட்டாலும் மக்களுக்கு அறநெறிகளைப் புகட்டி நிற்கின்றன. இந்நெறிகளே தற்போது வளர்ந்து வரும் இளையோருக்கு ஒரு அஸ்திரமாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு மதத்தவர்களும் தம் மறை சார்ந்த கல்வியைப் பெற்றுக்கொள்கின்றனர். இதனூடாக இளையோர் தற்றுணிவுடன் நடக்கவும், அவர்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் நீதியானதும், நியாயமானதுமாக இருக்கவும் ஆன்மீக ரீதியான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சிகள் ஆனது இளையோர்களை நல்ல சிந்தனைக்கும் சமூக மாற்றத்திற்கும் துணைபுரிவதாக அமைகின்றது.

இன்றைய உலக இளைஞர்கள் அளப்பரிய ஆற்றல் படைத்தவர்கள். இளைஞர்களின் ஆற்றல்கள் அளவிட முடியாதது. இன்றைய இளைஞர்கள் எதையும் புரிந்து கொள்ளும் திறமை மிக்கவர்கள். புதிய புதிய விடயங்களைக் கற்றுக் கொள்வதிலும் மிக்க ஈடுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர்கள். விஞ்ஞானக் கல்வியறிவில் முன்னேற்றம் கொண்டவர்கள். தங்களுக்கான கல்வித்துறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் போட்டியாளர்களாக இருக்கின்றனர். கணினித் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்று விட்டாலும், உலகில் எந்தவொரு நாட்டிலும் தொழில் செய்யக்கூடிய திறமை படைத்த இளைஞர்கள் உலகம் முழுவதிலும் பல்லாயிரக் கணக்கானோர் உருவாகி வருகின்றனர். தமக்குரிய அந்தஸ்தும் அங்கீகாரமும் கிடைக்கப் பெறாத நிலையில் இளைஞர்கள் இன்றைய அரசியலோடும், சமயத்துடனும் நேர் எதிர்மறையான கருத்துக்களோடும் போட்டி போட முனைகின்றனர். சில நாட்டு அரசுகள் கூட இளைஞர்கள் வன்செயல்களிலும் தீவிரவாதத்திலும் ஈடுபடுகின்ற நிலைக்குத் தள்ளி விடுகின்றன.

உலக நடைமுறைகளிலுள்ள அரசியல் மற்றும் பொருளாதாரக் கட்டமைப்புக்கள் பெருமளவில் இளைஞர்களை தொழில்களில் உள்வாங்கக்கூடியவாறு உருவாக்கப்படவில்லை. பொறுமை, சகிப்புத்தன்மை என்பவற்றால் பயனில்லை என்று உணரும் போது இளைஞர்கள் பயங்கரவாதமே தமக்கான பாதை என்று தேர்ந்தெடுக்கின்றனர். அதே சமயம் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் இளைஞர்களை ஒடுக்குதல் செயற்பாடுகளும் பெரும்பாலான நாடுகளில் இடம்பெற்று வருகின்றது. இலங்கையில் வாழ்கின்ற மூவினத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்களின் பிரச்சனைகள் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது. 1971இல் ஸ்ரீமாவோ அரசினாலும், 1989இல் பிரேமதாச அரசினாலும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் அரசியல் ரீதியில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளானார்கள். ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

"இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்" என்று கூறுவார்கள். இளைஞர்கள் எதிர்காலத்திற்கும் அவர்களின் சமூக முன்னேற்றத்திற்கும் சமூகத்தில் காணப்படும் இளைஞர்கள் சார்பான அபிவிருத்தி நடவடிக்கைகளும் காணப்படுகின்றன. இவ் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முக்கியமானவையாக இளைஞர் சேவை மன்றம் இளைஞர் முன்னோடிக் கழகம், இளைஞர் பாராளுமன்றம் போன்ற பல்வேறு மன்றங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் இளைஞர் கழக சம்மேளனமானது 1983 மே மாதம் 23ஆம் திகதி அதிமேதகு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்களது கட்டளையின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டது. இளைஞர் கழக உறுதியுரையாக "இளைஞர் கழக அங்கத்தவராகிய நான் ஒற்றுமை, நட்பு, ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி ஆகிய நான்கு வித உறுதிப்பாட்டுக்கு அமைய செயலாற்றுவேன்" என்பதாகும்.

அதுமட்டுமன்றி இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தின் மூலம் செய்யப்படுகின்ற செயற்பாடுகளாக இளைஞர் யுவதிகளது தலைமைத்துவ திறன்களை விருத்தி செய்தல், கலைத்திறன்களை விருத்தி செய்தல், தேசிய மற்றும் சமய நல்லிணக்கத்தையும், சகவாழ்வையும் ஏற்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்தல், சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலனோம்பல் நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல், நாட்டிலுள்ள இளைஞர்களது பிரச்சனைகளுக்கு முன்னின்று செயற்படல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் இளைஞர்கள் பல்வேறு வகையான நன்மைகளை பெற்றுக்கொள்கின்றார்கள். அவற்றில் சிலவற்றை நோக்கினால் தலைமைத்துவப் பயிற்சி, ஆளுமை விருத்தி, அறிவிப்பாளர் குழாமில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம், தொழிற்பயிற்சிக்கான வழிகாட்டல்கள், தேசிய இளைஞர் விளையாட்டு விழா மூலம் தமது திறமைகளை வெளிக்கொணர சந்தர்ப்பம் ஏற்படுதல். இவ்வாறான அவர்களின் சிந்தனைகள், ஆற்றல்களைத் தூண்டும் வகையில் செயற்பாடுகள் மேற்கொள்வதால் இன்றைய இளையோர்களின் நல்ல சிந்தனையுடனான எதிர்காலத்திற்கான சமூக மாற்றத்தைக் கொண்டு செல்லக்கூடியதாக உள்ளது. எனவே இளைஞர்களின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் முன்னேற்றத்திற்கும் சமூகத்தில் காணப்படும் இவ் இளைஞர் அமைப்பு ஆதாரமாக இருக்கின்றது.

இன்றைய இளைஞர்கள் சமுதாய அக்கறையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். உயிர்க்காப்பு பணிகளில் அதிகம் ஈடுபடுகின்றனர். விபத்துக் காலங்களில் இளைஞர்கள் இரத்ததானம் செய்கின்றனர். அதுமட்டுமன்றி உடல் உறுப்பு தானங்களில் இளைஞர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். பெரும் விபத்து நடந்து உயிர் இழந்த இளைஞரின் உடற்பாகங்கள் மற்றவர்களுக்கு பொருத்தப்பட்டுள்ளதாக செய்திகளில் அடிக்கடி பார்க்கின்றோம். கல்லூரிகளில் சமூக நற்பணி மன்றங்கள் அமைத்து மக்களுக்கு சமூகத் தொண்டாற்றி வருகின்றனர். இவ்வாறாக இன்றைய இளையோர்கள் நல்ல சிந்தனையுடனான எதிர்காலத்திற்கான சமூக மாற்றத்தை நோக்கிச் செல்வதை நம் கண்களினூடாகவே பார்க்கின்றோம்.

எதிர்காலத் தலைமுறையின் தூண்களாகக் கருதப்படும் இளைஞர் சமூகம் மக்கள், நாடு ஆகியவற்றின் மீது அக்கறையுடனும் ஈடுபாட்டுடனும் செயற்பட்டால் சமூகச் சீர்கேடுகள் குறைவடைந்து நல்லதொரு சமூகச் சூழல் உருவாகும். இளைஞர்கள் தங்களது தனித்திறன்களை தயக்கமின்றி வெளிப்படுத்தி வளர்ச்சிக்கான சூழலை உருவாக்கிடவும் அதனைத் தொடர்ந்து ஆக்கபூர்வமான வழிகளில் பாதுகாத்திடவும் ஒவ்வொரு இளைஞனும் செயல்பட வேண்டியது அவசியமாகும். சமூகத்தில் என்ன நடக்கின்றது, நாம் எப்படிப்பட்ட சூழல் நிலையின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று தெரியாமல் இன்றைய இளைஞர் சமுதாயம் உள்ளது. நாட்டுப்புற நடப்புக்களை ஊடகங்கள், நாளிதழ்களின் ஊடாக பார்த்து செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் நல்ல சிந்தனையுடன் செயற்பட்டு புதிய மாற்றங்களை ஏற்படுத்தி செயற்பட முடியும். தற்போதைய இளைஞர்களின் செயற்பாடுகளில் பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பு பாரிய அளவில் காணப்படுகின்றது. அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அவர்களினால் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களைக் குறிப்பிடலாம். சூழலில் மரங்களை நடுதல், பொலித்தீன் பாவனையைத் தடுத்தல், அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புணர்வுகள், சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பான கருத்துக்கள், முதியவர்களைப் பராமரித்தல், போதைப் பொருட்களுக்கான விழிப்புணர்வும் அது தொடர்பான வீதி நாடகங்கள் நடாத்துதல் போன்ற பல செயற்பாடுகள் சமூக மாற்றத்தை நோக்கிச் செல்வதற்கு சிறந்த சான்றுகளாகக் கூறலாம்.

இன்றைய இளையோர்களின் நல்ல சிந்தனையுடனான எதிர்காலத்திற்கான சமூக மாற்றத்தை நோக்கிச் செல்வதற்கு இளைஞர்களின் பங்களிப்பு அளப்பரியது. ஒரு நாட்டின் வளர்ச்சியில் முக்கியமான வகிபாகத்தை கொண்டிருப்பவர்கள் இளைஞர்களே. அவர்களுடைய வாழ்க்கைப் பயணமானது சரியான முறையில் காணப்பட்டால் நாடே புரட்சிகரமான ஒன்றாக மாறிவிடும் என்பதனை அறிந்து கொண்டோம். நாட்டின் முன்னேற்றத்திற்கு இளைஞர்களை ஊக்கப்படுத்துவதும் ஆதரவளிப்பதும் குடும்பம் என்ற ஒரு மையத்தில் ஆரம்பித்து பாடசாலை, சமூகம், சமயம், கழகங்கள் என பல்வேறான செயற்பாடுகள் துணை புரிகின்றன. இவ்வாறான சூழல் இளைஞர்களை நல்வழி நடத்திச் செல்வதற்கும் நற்செயல்களை புரிவதற்கும் இளைஞர்களுக்குத் தூண்டுதலாக உள்ளன.

இளையோர்கள் நாட்டில் புரிந்து வருகின்ற நன்மை பயக்கும் செயற்பாடுகள் மூலம் மனித விழுமியம், மனிதநேயம் என்பன இன்னும் இறந்து போகாமல் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. இவ்வுலகம் வாழ்வதற்கு இளையோர்களின் மார்க்கங்கள் துணைபுரிவதோடு அவர்களின் அளப்பரிய செயற்பாடுகளும் சமூகத்திற்கு பாரிய அளவில் சாதகமான முறையில் அமைகின்றன என்றால் "இளைஞர்களின் நல்ல சிந்தனையுடனான எதிர்காலத்திற்கான சமூக மாற்றம்" உருவாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நற்சிந்தனையுடைய இளைஞனும் நாளைய சமுதாயமும்


**செல்வி அபிநயா மணிவண்ணன்**

யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்

தரம் – 10


**இரண்டாமிடம்**

இளைய சமுதாயம் தான் நாட்டின் முதுகெலும்பு என்பதற்கு ஏற்ப இன்றைய இளைஞர்கள் தான் தனது சக்தியை நல்வழியில் பயன்படுத்தி நாட்டின் வளர்ச்சியில் பங்கு பெறவேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை கட்டுப்பாட்டுடன் வளர்த்தால் நல்ல ஓர் இளைஞர் சமுதாயம் உருவாகும். குழந்தை பருவத்திலே அவர்களை வழிப்படுத்தி வருதலில் பெற்றோர்களின் பங்கு அதிகம் உள்ளது. இளைஞர் சமுதாயத்தை நல்ல முறையில் செய்தால் எமது நாடு வல்லரசு நாடாக மாறும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இன்றைய இளைஞர்களிடம் சமூக அக்கறைகள் இல்லை. அவர்களது வாழ்க்கையே 'வாட்ஸ் ஆப்' 'பேஸ்புக்' என்றாகி விட்டது. வரதட்சணைக் கொடுமை போன்ற செயல்கள்தான் அடிக்கடி நடக்கின்றன. இவற்றின் பின்னால் இளைஞர் சமுதாயம் உள்ளது. ஒருவர் தவறு செய்யும் போது ஒட்டுமொத்த இளைஞர் சமுதாயத்தை இது பாதிக்கின்றது. இளமையில் குடிப்பழக்கத்திற்கு அடிமை ஆவதால் அவர்களால் சமுதாயம் சார்ந்த அக்கறையில் ஈடுபட முடியாமல் போகிறது. இதை ஒவ்வொரு இளைஞர்களும் ஒரு நிமிடமாவது சிந்தித்துப் பார்த்தால் போதும். அவர்களின் வாழ்க்கை தங்களது கையில் என்பது புரியும்.

தாழ்வுமனப்பான்மை இளைஞர்களை சமுதாய அக்கறையில் ஈடுபட முடியாமல் செய்கிறது. படிக்கின்ற காலத்தில் பெற்றோர், ஆசிரியர்கள் திட்டும் போது தாழ்வு மனப்பான்மை ஏற்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பப் பொருளாதார நிலையில் அவர்களது தோற்றம், நடை, உடை போன்ற பல விடயங்களில் ஒவ்வொரு இளைஞனும் தாழ்வுமனப்பான்மையால் சுருங்கிப் போகின்றான். இளைஞர் சமுதாயத்தை சமூக அக்கறை கொண்டவனாக மாற்ற வேண்டும். சமூகத்தில் என்ன நடக்கின்றது, நாம் எவ்வாறான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம் என்று தெரியாமல் இன்றைய இளைஞர் சமுதாயம் உள்ளது. நாட்டு நடப்புக்களை ஊடகங்கள், நாளிதழ்களைப் பார்த்து அறிந்து கொள்ள வேண்டும். சமூகத்தில் என்ன நடக்கின்றது என்று தெரியாமல் உள்ளனர். சமூகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அதை முன்னேற்றுவதற்கான வழிமுறையைத் தேட வேண்டும். நாடு மற்றும் எமது சமுதாயம் முன்னேற வேண்டுமானால் இளைஞர்கள் சமுதாயத்தினர் துடிப்புடன் செயற்பட வேண்டும்.

இன்றைய நற்சிந்தனையுடைய இளைஞர்களிடம் சாதிக்கும் உணர்வு அதிகமாக இருக்கின்றது. படித்தவுடன் வெளிநாடு சென்று வேலை செய்ய வேண்டும் என்று நினைக்கின்றார்கள்.

எமது நாட்டின் தரத்தை உயர்த்த வேண்டும். சமூக அக்கறை என்பது எமது இளைஞர்களிடம் காணப்பட வேண்டும். இது முக்கியமான ஒன்றாகும். இன்றைய இளைஞர்கள் மிகச் சிறந்த அனுபவத்தைப் பெறும் நிலையில் உள்ளனர்.

"இளைஞர் என்ற சொல்லுக்கான அர்த்தத்தினை குழந்தைப் பருவத்தின் சார்புத் தன்மையில் இருந்து பருவ வயதின் சுதந்திரத் தன்மைக்கு மாறுகின்ற காலகட்டம் என வரையறை செய்துள்ளது. மேலும் சமுதாயத்தின் உறுப்பினர்களாக உணர்ந்து நமது சுதந்திரம் மற்றும் சமூகம் குறித்து அறியும் பருவம் இதுவாகும். நிர்ணயிக்கப்பட்ட வயதுப் பிரிவினர் எனப் பார்ப்பதை விட இளைஞர் என்பதை மிகவும் நெகிழ்ச்சியான வகைப்பாட்டினராக பார்க்க வேண்டும்.

எமது சமுதாயத்திற்கு இளைஞர்களின் நிலை எப்படி உள்ளது. இன்றைய இளைஞர்கள் மிகத் திறமைசாலிகள் இலகுவாக புரிந்து கொள்ளும் திறமை படைத்தவர்கள். புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ளும் ஆர்வம் கொண்டவர்கள். புரியாததை புரியவில்லை என்று தயங்காமல் சொல்லக் கூடியவர்கள். கல்வியில் நிரம்ப முன்னேறியுள்ளார்கள். எமது இளைஞர்களிடம் அதாவது சில சமுதாய இளைஞர்களிடம் பல கெட்ட பழக்கங்கள் உள்ளன. அதாவது புகைப்பழக்கம், போதைப்பழக்கம் உள்ளவர்கள் அதிகரிக்கும் அபாயம் உண்டு. செல்போன் மோகம் அதிகரித்ததால் தடம் புரண்டு போகும் அவல நிலைகள், உடல் ஆரோக்கியம் பற்றி அக்கறை இல்லை, விளையாட்டுத்துறையில் ஆர்வம் இல்லை, பல இளைஞர்கள் குடிக்கின்றார்கள் என்ற செய்தி தினம் தினம் வந்து கொண்டே உள்ளது. சுற்றுச் சூழலும் அதற்கு முக்கிய காரணம். முன்பெல்லாம் "டீ குடிக்க வைச்சுக்கோ" என்று செலவுக்கு கொடுப்பார்கள். இப்போ அது குடிக்கு என்று மாறிக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு கால கட்டத்திலும் இளைஞர்களில் கணிசமான எண்ணிக்கையில் தொழுகையாளிகள் இருப்பார்கள். வரும் காலங்களில் அது குறைந்து விடுமோ என்ற ஐயம் உண்டாகின்றது. மக்களிடத்தில் இறைவனைப் பற்றிய அச்சம் இருக்கின்றதா? என்ற சந்தேகம் வலுக்கிறது. வாழ்க்கைக்கு மிக அவசியமான ஒழுங்கு முறைகள் ஒழுக்கத்துடன் கூடிய கலாசார விழுமியங்கள் காலாவதியாகி விடுமோ?

இருபது ஆண்டுகளுக்கு முன் எமது இளைஞர்களின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை பார்க்கும் போது அவர்களிடம் கல்வி கற்கும் ஆர்வம் உருவாகிக் கொண்டிருந்தது. அன்றைய இளைஞர்களிடத்தில் இருந்த ஆக்கபூர்வமான விடயங்களோடு இன்றைய இளைஞர்களிடம் உள்ள கற்றல் திறமைகளை இணைத்தால் அருமையான தன்மைகள் உடையவர்களை கற்பனையில் பார்க்க முடிகின்றது. எனவே, இப்போதைய தேவை திறமைகளுடன் கூடிய நல்ல இளைஞர்கள், இளைஞர்களின் சமுதாயத்தினை ஆய்வு செய்து பார்க்கும் போது தேவையில்லாமல் அவர்களைச் சாட்டுவதைத் தவிர்த்து அவர்களிடம் எதனை எதிர்பார்க்கின்றோம் என்பதனை தெளிவுபடுத்தல் வேண்டும். இவ்வாறு இருக்கும் போது தங்களது ஆரோக்கியத்தையும் மறந்து விடுகின்றார்கள்.

இதனை விரிவாகக் கூறப்போனால் இளைஞர்கள் தங்களிடையே விளையாட்டாக செய்ய ஆரம்பிக்கும் தவறுகள் பிற்காலத்தில் விட முடியாத கெட்ட பழக்கமாக மாறி வருகின்றது. புகைப்பிடிக்கும் பெரும்பாலானோர்கள் அப்படித்தான் சொல்கின்றார்கள். இன்று சிகரட்டால் நுரையீரல் கடுமையாகப் பாதிப்புக்கு ஆளானோர், சூதாட்டத்தில் பெரும் செல்வத்தை இழந்தவர்கள், எல்லோரும் முதலில் சந்தோசத்திற்காகவும், நேரத்தை வீணாக்குவதற்கும் ஆரம்பிப்பார்கள். எனவே, சந்தோசத்திற்காக என்று எதை செய்ய நினைத்தாலும் சற்று யோசியுங்கள்.

அன்றைய பல இளைஞர்கள் சுயநலத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு நாட்டின் எதிர்காலத்தை புறம் தள்ளி விடுகின்றார்கள். தொழில்நுட்ப சாதனங்களுடன் பின்னிப் பிணைந்து நவநாகரிகம் என்ற போர்வையில் தமது எதிர்காலத்தையும் இயற்கையையும் சீரழிக்கும் விடயங்களில் ஈடுபடுகின்றார்கள். போதை ஒரு மருந்துமல்ல, ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஒரு உணவும் அல்ல. அதை அருந்துவதால் இளைஞர்களுக்கும், அவன் வாழும் சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் ஏற்படும் தீங்குகள் எண்ணிலடங்காதவை. போதைவஸ்துக்கு அடிமையாகும் இளைஞர்கள் தமது வாழ்க்கையையே அழித்துக் கொள்கின்றார்கள்.

அடுத்த கட்டமாக விஞ்ஞான வளர்ச்சியில் உள்ளடக்கும் தொலைத்தொடர்பு சாதனங்களில் ஒன்று தான் கையடக்கத் தொலைபேசி ஆகும். இள வட்டத்தினரின் தவறான பாவனையினால் அனைவருக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்துவதோடு வதந்திகள் பரவுவதற்கும் இவை காரணங்களாக அமைகின்றன. பிரதானமாக இணையத்தைக் குறிப்பிடலாம். இவ்வாறு கையடக்கத் தொலைபேசியில் புதிய தொழில்நுட்பங்கள் உட்செலுத்தப்பட்டிருப்பதாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட அதனை இளைஞர்கள் சரியான பாதையில் பயன்படுத்துவதிலும் பார்க்க பிழையான பாதையில் பயன்படுத்துவது அதிகம்.

சமூக விழுமியத்தைப் பேண வேண்டிய சமூக இணையத்தளங்கள் பொறுப்பற்று வீண் வேடிக்கையிலும், விபரீதங்களிலுமே இட்டுச் செல்கின்றன. இணையத்தளத்தினூடாக ஆபாசப்படங்கள் போன்ற தீய விடயங்கள் இளைஞர்களின் மனதில் விதைக்கப்படுகின்றன. இவ்வாறு பல செயல்களினால் இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தை மண்ணோடு மண்ணாக்குகின்றனர். படிப்பை பாதியில் நிறுத்தி விட்டு சுற்றித் திரிகின்றனர். படிக்க வேண்டிய பருவத்தையும், காலத்தையும் பாழாக்கிவிட்டு பின் ஏங்குகின்றார்கள். பின்னர் பெற்றோரின் பணத்தை வீணான பாதையில் செலவிடுகின்றனர். இவ்வாறான பல முறையற்ற செயற்பாடுகளில் தற்கால இளைஞர்கள் பலர் மூழ்கியுள்ளனர்.

நல்ல குடி மன்னர்களாகவும், நாட்டை வழிநடாத்தும் நல்ல தலைவர்களாகவும், நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டிய இளைஞர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவது மனதை உறுத்தும் விடயமாகும். இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதால் இளைஞர்களை நல்ல வழியில் இட்டுச் செல்லும் பாரிய பொறுப்பு பெற்றோரையும், நாட்டு மக்களையும் பெரிதும் சார்ந்துள்ளது. இளைஞர்கள் அழிக்கின்ற செயல்களில் இருந்து அவர்களை மீட்டெடுக்கவே அரசும், சமூகத் தொண்டு நிறுவனங்களும், ஊடகங்களும் பாடுபட்டு வருகின்றன. உலகளாவிய ரீதியில் கூட பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

வெகுசனத்தொடர்பு சாதனங்கள் மூலமும், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் போன்றவற்றின் வாயிலாக போதையின் போலித்தன்மை உணரச் செய்யப்படுகின்றது. இளைஞர்களின் விளையாட்டுத்திறனைப் பார்க்கையில் இலங்கைத் திருநாடு அவ்வளவு சோபிக்கவில்லை. எமது சமுதாயம் இன்றைய இளைஞர்களின் கையில் தான் தங்கியுள்ளது என்பதனை யாருக்கும் சொல்லிப் புரிய வைக்கத் தேவையில்லை. நடைமுறையில் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். இன்றைய இளைஞர்கள் நற்சிந்தனையுடையவர்கள் தான். ஒரு நல்ல இளைஞன் தன்னையும், தனது வீட்டையும், தனது சுற்றத்தையும், தனது நண்பர்களையும், தன்னைச் சுற்றியிருக்கும் எல்லோரையும் தன்னைப் போலவே ஒரு நல்ல சிந்தனையுடையவனாக வரவும், அறிவுரைகள் கூறி நல்வழிப்படுத்தி செயற்படுவான். தனது பாதையில் பயணிப்பவர்கள் ஒருவர் ஒருவராகி, இருவர் இருவராகி சுற்றத்தில் உள்ள இளைஞர்களை எல்லாம் நல்வழிப்படுத்தி நற்சிந்தனையுடையவர்களாக்கி பார்ப்பதே முக்கியமாகின்றது. ஒரு நல்ல இளைஞன் மிகவும் இறைபக்தி உள்ளவனாகின்றான். இறைபக்தி உள்ள இளைஞனோ இறைபக்திக்கு உள்ளவனாகின்றான். அல்லது ஒரு மனிதனோ தன் சமுதாயத்தில் முழுமையான மனிதனாகின்றான்.

ஆகவே அவனிடம் இறைபக்தி கூடவே இருப்பதனால் அவன் தீய செயல்களில் ஈடுபடமாட்டான். தீய வழிகளிலோ, அல்லது தீய எண்ணங்களில் செல்பவர்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லவும் அனுமதிக்கமாட்டான். இறைவனின் பக்தி என்ற பயம் அவனுக்குள்ளே குடிகொண்டிருக்கின்றது. அதன் காரணத்தினால் தான் அந்த தீய காரியங்களில் இருந்து அவன் காப்பாற்றப்படுகின்றான். இப்படிப்பட்ட இளைஞனிடம் நல்ல சிந்தனைகள் தான் மனதினில் குடிகொண்டு இருக்கும். ஏழைகளுக்கு உதவுதல், பசியோடு உள்ளவர்களுக்கு உணவு பரிமாறுதல், சைவத் தொண்டுகள் செய்தல் என்பன ஒரு நல்ல இளைஞனுக்கு மேலான பண்புகளாகும்.

பொதுவாக ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், வளர்ச்சிக் கூறுகளின் நிலைத்த தன்மைக்கும் உந்துசக்திகளாகப் பல காரணிகள் அறியப்பட்டாலும் அவற்றுள் முதன்மையானது மட்டுமல்ல தவிர்க்க முடியாத சக்திகளாகவும் முன் நிற்பது அந்நாட்டின் இளைஞர்களே ஆவர். புதிய சிந்தனைகள், மேம்பட்ட திறன்கள், புதுமைகளை உள்வாங்கும் நிலை, தளராத முயற்சிகள், வளர்ச்சி நோக்கிய இலக்குகள், நவீன உத்திகளைக் கையாளுதல் போன்ற எண்ணற்ற பரிமாணங்கள் இளைஞர்களின் தகுதிகளையும், தரத்தையும் உயர்த்திப் பிடிப்பதனால் அவர்களை விலக்கி வைத்து விட்டு வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வது இயலாததாகும். எனவே தான் நூறு ஆண்டுகளுக்கு முன்பே இளைஞர்கள் தான் நாட்டின் எதிர்காலம் அவர்களின் கைகளில் தான் சமூகமும் உள்ளது என்று இளைஞர்களின் சக்தியை உலகிற்கு உணர்த்தினார் சுவாமி விவேகானந்தர்.

காலம் வெகு வேகமாகக் கழிந்து கொண்டிருக்கின்றது. அதன் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் இன்றைய இளைஞர்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த வளர்ச்சியானது ஆக்கப் பாதையிலன்றி அழிவுப் பாதையிலும் உலக மக்களை இட்டுச் செல்லும் நிலை தோன்றியுள்ளது. இந்நிலையில் உலக இளைஞர்கள் அனைவரும் விழிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். இதற்கு இன்றைய இளைஞர்களே பொருத்தமானவர்கள். இன்றைய அனைத்து இளைஞர்களும் வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள். இளைஞர்களின் பங்களிப்பும் மாறுபட்ட அணுகுமுறையும் நாட்டின் வளர்ச்சிப் போக்கினைத் தீர்மானிக்க பேருதவியாக இருந்ததால் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கேற்ப சமூக வளர்ச்சி விரிவுபடுத்தப்பட்டது.

அந்தவகையில் இளைஞர்கள் சமூக மற்றும் நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லும் வளர்ச்சித் தூதுவர்களாக கருதப்பட்டனர். நாட்டின் எதிர்காலம் மட்டுமன்றி நிகழ்காலத் தேவைகளையும் கருத்திற் கொண்டு வளர்ச்சிச் சமத்துவத்தைப் பரவலாக்கும். செயல்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் வளர்ச்சிப் பங்காளிகளாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

நல்ல சிந்தனைகளுடன் அறிவு, ஆற்றல், அனுபவம், துணிவு போன்றவற்றின் அடிப்படையில் வளரும் நாடுகளில் எமது இலங்கை நாடும் ஒன்றாகும். ஒவ்வொரு நாட்டிலும் அங்கு நிலவும் சூழ்நிலைக்கேற்ப அந்நாட்டின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாததாக உள்ளது. பன்முகத்திறன் கொண்ட இவர்கள் அனைத்துத் துறைகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதித்து வருகின்றனர். நாளைய சமுதாயத்தின் தூண்களாக வருங்காலத் தலைவர்களாக அறியப்படும் இன்றைய இளைஞர்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் மேம்பாடான சமுதாயத்தை உலகத் தரத்தில் மேம்படுத்த முடியும். நாட்டின் இளைஞர்களை மனதில் கொண்டு நம்பிக்கைக்கான புதிய சூழலை உருவாக்கிடவும் வளர்ச்சித் தளங்களில் நாடு புதிய புதிய உச்சத்தினை எட்டவும் அரசு பல சிறப்புத் திட்டங்களிலும், ஊக்குவிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

எதிர்காலத் தலைமுறையின தூண்களாகக் கருதப்படும் இளைஞர்கள் சமூகம், மக்கள், நாடு ஆகியவற்றின் மீது மிக அக்கறையுடனும், ஈடுபாட்டுடனும் செயற்பட்டால் சமூகச் சீர்கேடுகள் குறைந்து வளர்ச்சிக்கான நேர்மறைச் சூழலையும், எதிர்கால சமூகத்தினையும் உருவாக்கலாம். இளைஞர்கள் தங்களது தனித்திறன்களை தயக்கமின்றி வெளிப்படுத்தி வளர்ச்சிக்கான சூழலை உருவாக்கிடவும் அதனைத் தொடர்ந்து ஆக்கபூர்வமான வழிகளில் பாதுகாத்திடவும் இளைஞர்களை இலக்கு சார்ந்த செயற்பாடுகளிலும் ஈடுபட வைத்தல், வளர்ச்சியை முன்னெடுக்கும் நிகழ்வுகளிலும் பங்கேற்கச் செய்தல், மாற்றங்களை முன்னெடுக்கும் கல்வியை வழங்குதலும், சரியான முடிவுகளைப் பின்பற்றிட வலியுறுத்துதல், பாரபட்சம் இன்றி செயற்பட அறிவுறுத்துதல், சுயகட்டுப்பாடு, ஒருங்கிணைந்த செயற்பாடு, புரிந்து செயற்படுதல் போன்ற திறன்களை வளர்த்தல் சமூகம் மற்றும் வளர்ச்சியின் பரிமாணம் பற்றிய புரிதலை உருவாக்குதல், புத்தாக்க முயற்சிகளுக்கும் தேவையான களம் அமைத்துத் தருதல் போன்ற மேம்பாட்டு நடவடிக்கைகளும் மிக மிக அவசியமாகின்றன. நாட்டின் வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு இளைஞர்கள் தங்களின் தனித்திறன்களை இழந்து விடாமலும் அல்லது தவறான வழிகளில் பயன்படுத்தி விடாமலும் இருக்கும் வகையில் திறன் மேம்பாடுகளை உருவாக்க முடியும்.

ஒட்டுமொத்த சமுதாயத்தின் வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனி மனிதனும் அதாவது ஒவ்வொரு இளைஞனும் தனது பங்களிப்பினை வழங்குவது அவசியமாகின்றது. மக்களினம் அறிவு வளர்ச்சி பெற்று நாகரிகம் மிகுந்து வளர வளர சமுதாய உறவில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இன்றைய போர் போன்ற பல முயற்சிகளில் ஈடுபடாமல் உலக அமைதியினை எவ்வாறு நிலை நிறுத்துவது என்பதே இளைஞர்களுக்குக் கடமையாக முன்னிற்கின்றது. எமது நாட்டை இன்று எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய சவாலாக நமது கல்வி அறிவினை முற்றிலும் மாற்றி அமைத்து நமது இளைஞர்களுக்குள் மறைந்து கிடக்கும் அளவற்ற அறிவையும், ஆற்றலையும் முழுவதுமாக வெளிக்கொண்டு வந்து அதனை சமூகப் பணிக்குப் பயன்படுத்திக் கொள்வதேயாகும். இன்றைய கல்வி இளைஞனுக்கு ஓர் வேலையைத் தேடித் தருவதற்கு மட்டுமே உதவி புரிந்தது அல்லாமல் அவனைப் பொறுப்புள்ள ஒரு சமுதாய உணர்வோடு கூடிய குடிமகனாக உயர்த்த உதவவில்லை. ஒவ்வொரு இளைஞனும் தன் உண்மையான சொரூபத்தினை அறிந்திருக்க வேண்டும். அவன் தனக்கு எல்லையற்றது என்பதனை உணர்ந்திருக்க வேண்டும். இன்றைய இளைஞர்கள்


9218(P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்காக ஒரு கனவை வைத்திருக்கின்றார்கள். ஆனால் சமூகத்திற்கு என்று பரந்து விரிந்த கனவை வைத்திருக்கின்றார்களா என்பது சந்தேகமே. இன்றைய நற்சிந்தனையுடைய இளைஞர்களை நோக்கி நிறைய வாய்ப்புக்கள் வர இருக்கின்றன. நல்ல வழியில் தீர்த்ததுடன் நடைபோடுவதற்கும் எமது இளைஞர்கள் என்றென்றும் உத்வேகமாக இருந்திட வேண்டும்.

எமது இளைஞர்கள் சமயத்தைப் பரப்புவதாக மட்டுமன்றி பொதுஅறிவு, ஆற்றல் படைத்தவர்களாகவும் காணப்படுகின்றார்கள். தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தி சமூகத்தில் நற்பிரஜையாக வர விரும்பி நல்லதையே செய்ய நினைக்கின்றார்கள். மனித எண்ணங்கள் மற்றும் செயல்கள் அவர்களுடைய உள்ளுணர்வுகள் மற்றும் விருப்பங்களை சார்ந்தே அமையும். இந்த உள்ளுணர்வே ஒரு மனிதனை ஒரு குறிப்பிட்ட முறையில் செயற்பட தூண்டும் சக்தியாக விளங்குகின்றது.

“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும், தீயவனாவதும் அன்னையின் வளர்ப்பினிலே” என்கிறது ஒரு திரைப்படப் பாடல். பரந்த இந்நிலவுலகில் இறப்பும். பிறப்பும் சகஜம். வாழ்க்கை என்பது ஒரு சுழல் சக்கரம் போன்று உருண்டோடிக் கொண்டிருக்கின்றது. இந்நிலையில் ஒரு குழந்தை பிறக்கின்றது. அவன் பிறக்கும் போதே நல்லவனாகவே மாசுமறுவற்ற மனம் படைத்தவனாகவே பிறக்கின்றான். அவன் வளரும் போது பலவித வடிவங்களிலே வளர்ச்சி பெற்று நல்லவனாகின்றான். அறிஞனாகின்றான். உத்தமனாகின்றான். நல்ல சிந்தனை உடையவன் ஆகின்றான். எனவே அவனது குழந்தைப் பருவத்திலிருந்து அவனது வளர்ப்பே அவனது உயர்ச்சிக்கு அடித்தளமாக அமைகின்றது. அங்ஙனம் வளர்ச்சி பெறும் ஒருவன் சிறுவனாக, இளைஞனாக, தலைவனாக மலர்கின்றான்.

ஆனால் இளைஞர்கள் அனைவரும் நல்லவர்கள் என்று கூறிவிட முடியாது. வளரும் பயிர் அதன் வளர்ச்சிப் பருவத்தில் பூச்சி, புழுக்கள் போன்றவற்றால் தாக்கமுற்றுக் கருகிப் போவதுமுண்டு. அதே போன்று வளரும் பருவத்தில் இளைஞர்கள் அத்தகைய தாக்கத்தினை அடையாது நல்ல பண்புள்ளவர்களாக, ஒழுக்கம் உள்ளவர்களாக வளர்க்கப்பட வேண்டும். கல்வியும், ஒழுக்கமுமே இதற்கு இன்றியமையாதனவாகும். நல்ல கல்வியினைப் பெறும் இளைஞன் நல்லொழுக்கமுள்ளவனாகத் திகழ்கின்றான். இங்ஙனம் கல்வியும், ஒழுக்கமும் அமையப் பெறும் இளைஞர்கள் நிமிர்ந்து வாழ முடியும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய சூழ்நிலையில் இளைஞர்கள் பலர் பல்வேறு தாக்கங்களுக்கு உள்ளாகின் றார்கள். படித்தும் வேலைவாய்ப்பின்மை, தகுந்த தலைமைத்துவமில்லை, அரசியல் குழறுபடிகள் என்பவற்றால் விரக்தியின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுவதை நாம் நிதர்சனமாகக் காணமுடிகின்றது. எனினும் வேதனைகளைச் சாதனைகளாக மாற்றிச் சரித்திரம் படைத்த இளைஞர்கள் சிலரையும் நாம் காணமுடிகின்றது. இளமையிலே இலட்சிய நோக்குடன் - குறிக்கோளுடன் இளைஞர்கள் வளர்வார்களேயானால் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் நல்ல சமுதாயத்தை உருவாக்கிட முடியும். நல்ல இலட்சியங்கள் நல்ல வழியினைக் காட்டும். அவர்களது இலட்சிய வேட்கையும் விடாமுயற்சியும் அவர்களது குறிக்கோளை எய்துவதற்கு துணை செய்யும். இளைஞர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கல்லூரிகளில் கற்கும் காலத்திலேயே தலைமைத்துவப் பண்புகளைக் கற்றுக் கொள்கிறார்கள். மாணவர் மன்றக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும் போதும் விளையாட்டு மைதானங்களில் விளையாட்டு அணிகளுக்குத் தலைமை தாங்கும் போதும் தலைமைத்துவப் பண்புகளைக் கற்றுக்கொள்கின்றார்கள். சாரணர் இயக்கம், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சமூக இயக்கங்களில் பங்குகொள்வதன் மூலமும் இளைஞர்கள் நல்ல பண்புகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

உலக வரலாற்றிலே ஒளி படைத்த இளைஞர்களாக மின்னிக் கொண்டிருக்கும் இளைஞர்கள் பலரை நாமறிவோம். அவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து பார்ப்பின் அவர்கள் இளமை முதலே கொண்ட குறிக்கோளை எய்துவதற்காக அல்லும் பகலும் அயராது முயன்றுள்ளமையைக் காணலாம். அவர்கள் இளமைப் பருவத்திலே கொண்ட இலட்சிய வேட்கையே இறுதியில் உலகம் போற்றும் இளைஞர்களாக அவர்களை உருவாக்கியதென்பதை உணர்ந்திட முடியும். மகாத்மாகாந்தியடிகள், ஆபிரகாம் லிங்கன், வின்சன் சேர்ச்சில், நெப்போலியன் போன்றோர் இதற்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

மனிதர்களாகப் பிறந்த எவர்க்கும் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். குறிக்கோள் அற்றோர் மாண்டவர்களுக்கு சமனாவர். எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ்வேன் என்ற இலட்சியமுடைய இளைஞர்களை வாழ்வில் காணமுடிகின்றது. இத்தகைய குறிக்கோள் கொண்ட இளைஞர்கள் வாழ்வில் நன்னிலை பெறுவர். கெட்டவன் என்று பெயர் பெறுவது மிகவும் எளிது. ஆனால் நல்லவன் என்று பெயர் பெறுவது மிகவும் கடினம். ஒரு சில நிமிடங்களிலே அப்பட்டத்தைப் பெற்றிடலாம். எனவே நல்லவன் என்று மக்கள் போற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழும் இளைஞர்கள் நாளைய சமுதாயத்தை நல்ல வழியில் உருவாக்குவது திண்ணம்.

எனவே இன்றைய இளைஞர்கள் நாளைய சமுதாயத்தினை நல்ல முறையில் மிளிர வைக்க வேண்டுமாயின் அவர்கள் நல்ல கல்வியறிவும், நல்ல ஒழுக்கமும், பிறர் நலம் பேணும் பண்பும் உள்ளவர்களாக நல்ல குறிக்கோள் படைத்தவர்களாகத் திகழ வேண்டியது மிக மிக அவசியமாகும். நாளைய தலைவர்களாகும் தகுதி அவர்களது வாழ்க்கை நெறியிலேயே பெரிதும் தங்கியுள்ளதென்பதனை மறந்திடக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் கையில் எதிர்காலம்

**செல்வி தவராசா பவித்தனா**

ஆலங்குழாய் வீதி, சண்டிலிப்பாய்

**மூன்றாமிடம்**

"இன்றைய இளைஞர் சமுதாயம் நாட்டின் முதுகெலும்பு" ஆவர். "வீட்டிற்கு வீடு வாசற்படி" என்பார்கள். அதாவது இன்றைய சமூக மாற்றத்திற்கு இளையோர்கள் எனும் தலைவர்களே வாசற்படியாகத் திகழ்கிறார்கள். இன்றைய உலகம் வளர்ச்சியை நோக்கிச் சென்று கொண்டு இருக்கின்றது. அதில் இளைஞர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் எதையும் செய்து முடிக்க வேண்டும். எதையும் சாதிக்க வேண்டும் என்ற துடிப்பும் துணிவும் ஒரு இளைஞனிடம் இருப்பது மட்டுமேயாகும். சமுதாயம் ஒன்று உருவாக வேண்டும் என்றால் முதலில் நம்மை உருவாக்கும் போதே புதிய மாற்று சமுதாயத்தை நம்மால் உருவாக்க முடியும். ஒருவரின் கையில் அகப்பட்ட பட்டாம்பூச்சி உயிருடன் இருப்பதும், இறப்பதும் அவரின் விருப்பத்தைப் பொறுத்தது. அதேபோன்று இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர் ஆவதும் தறுதலையாவதும் அவர்களுடைய எண்ணத்தையும், பண்புகளையும் ஈடுபாடு காட்டும் விதத்தினையும் மன உறுதியையும் தீர்மானிப்பதாகும்.

இன்றைய உலகம் தொழில்நுட்ப வளர்ச்சியாலும் விஞ்ஞான கண்டுபிடிப்புக்களாலும் நாளுக்கு நாள் பல்வேறு வளர்ச்சியை கண்டு வருகின்ற நிலையில் இவை அனைத்திற்கும் அடிப்படையாகக் கல்வியே காணப்படுகின்றது. ஒரு நாட்டிற்குத் தேவையான எதிர்கால தலைவர்களை உருவாக்க வேண்டிய பொறுப்பும் கல்விக்கு உள்ளது. அதுமட்டுமன்றி சமூகத்திலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்தினை ஏற்படுத்துவதில் பிரதான பங்கு கல்விக்கு உண்டு. "ஒரு மனிதனின் கல்வி அவனின் சொந்த வாழ்க்கையை மட்டுமல்ல அவனின் குடும்பத்திற்கும் அவன் வாழும் சமூகத்திற்கும், தேசத்திற்கும் விழிப்புணர்வு கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும்". இளைஞர்கள் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்னோர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூக மக்கள் என்போர்கள் துணை செய்தல் வேண்டும்.

தேசம் முன்னேற வேண்டும். ஆனால் இளைஞர் சமுதாயத்தினர் துடிப்புடன் செயல்பட வேண்டும். இன்றைய இளைஞர் சமுதாயம் போர் முயற்சியில் ஈடுபடாமல் உலக அமைதியை எவ்வாறு நிலை நிறுத்துவது என்பதே அவர்களது கடமையாக முன் நிற்கின்றது. மோகனதாஸ்காந்தி என்ற இளைஞன் மனதில் சத்தியத்திற்கு ஒரு பெரிய முக்கியத்துவம் இருந்தமையால் பல போராட்டங்களின் பின்னர் தலைவர் ஆனார். அதாவது "வெற்றி என்பது நிரந்தரமல்ல. தோல்வி என்பது இறுதியானதுமல்ல" என்பதாகும். இளைஞர் சக்தி உலகில் பிரமாண்டமான சக்தியாகும். அந்த சக்தி ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படுகின்றதோ அழிவை நோக்கிப் பயன்படுத்தப்படுகின்றதோ, புதைந்து போகின்றதோ என்பதைத் தீர்மானிப்பது அவர்களுக்குக் கிடைக்கும் முன்மாதிரிகளிலும் அவர்களின் சிந்தனைகளிலும் பெரும் பங்கு வகிக்கின்றது.

இளையோர்களின் இளமைக்காலம் மகிழ்ச்சியாக இருப்பதற்கே அனைவரும் விரும்புகின்றனர். மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது அமுதவாக்காகும். இந்த உலகில் எல்லாவற்றையும் கடந்து முதல் நிலையில் நிற்பவள் தாயாவாள். "தாய் சொல்கின்ற வார்த்தைகள் நோய் தீர்க்கின்ற மருந்து" என்பார்கள். படித்துப் பட்டம் பெற்று அதிக காசு சம்பாதித்து வாழ்க்கையை நடாத்தினால் மட்டுமே எதிர்காலத்தில் நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற சிந்தனையைப் படிக்கும் பருவத்திலே நமக்குக் கூறுவார்கள். இதனை "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" எனலாம். இளைஞர்கள் நாளைய சமுதாயத்தின் தூண்களாக இருக்க வேண்டும் என்று பெற்றோர்கள் விரும்புகின்றார்கள். இதன் மூலம் இளைஞர் சமுதாயத்தினை உருவாக்குவதில் பெற்றோரின் பங்களிப்பும் காணப்படுகின்றது எனலாம்.

ஔவையார் கூறிய வாக்கின்படி தெய்வத்திற்கு சமமாகக் கருதப்படும் ஆசிரியர்கள் பெருமைக்கு உரியவர்கள் ஆவர். எதிர்கால இளைஞர்களை உருவாக்கும் சிற்பிகள் ஆசிரியர்கள் ஆவர். இளமைக் கல்வியை மாணவர்களுக்கு கற்பித்துக் கொடுத்து அவர்களை எதிர்கால சமூகத்தின் தலைவர்களாக மாற்றுவதற்கு ஆசிரியரின் பங்களிப்பும் காணப்படுகின்றது. ஆசிரியரை மதித்து ஒழுகுபவனால் மட்டுமே எதிர்கால நற்பிரஜையாக உருவாக முடியும். "மண்ணைக் குழைத்தால் மட்டுமே பாண்டம் வரும்" அதாவது இளைஞர்களை செம்மைப்படுத்தினால் மட்டுமே சமூகம் வளரும். "கல்லூரிப் படிப்பு வெறும் ஏட்டுப் படிப்பு போன்றது" நாளைய தலைவர்களாக வேண்டும் எனில் கல்லூரி படிப்பை மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்காது உலக அறிவையும் பெற்றிருக்க வேண்டும்.

இன்றைய இளையோர்களின் வாழ்க்கை சீரழியக் காரணம் முன்னோர் கூறிய அறிவுரைகளைக் கேட்காது விடல், தொலைபேசி மோகம் அதிகரித்தமை, தடம்புரண்டு போகும் அவல நிலை, உடல் ஆரோக்கியமின்மை, விளையாட்டில் ஆர்வமின்மை, சுயநலம் போன்றவையாகும். இவற்றில் ஈடுபட்டு தமது இலட்சியத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றார்கள். கல்வி கற்கும் ஆர்வம் உருவாகிக் கொண்டிருந்தது என்றாலும் பட்டதாரிகளை விரல் விட்டு எண்ணிவிடலாம். சமூகத்தினை உருவாக்கிய இளையோர்களே தற்போது சமூகத்தைச் சீரழித்து வருகின்றனர். "மனிதன் வாழ்கின்ற வாழ்க்கை பிறருக்கு பயன் உள்ளதாக அமைய வேண்டும்". இளைஞர்கள் வாழ்க்கைக்கு தீமை விளைவிக்கும் விடயத்தில் இருந்து விடுபட்டு கல்வியை வாழ்க்கைத் துணையாகக் கொள்ள வேண்டும்.

புதிய தொழில்நுட்ப வளர்ச்சியினால் உருவான தொலைபேசி மோகம் அதிகரித்ததால் ஏற்பட்ட பிரச்சனைகளாக தொலைபேசியை தமக்கு அடிமையாக்கிக் கொள்ளாது தொலைபேசிக்கு தாம் அடிமை ஆகின்றனர். தொலைபேசியை தம்முடைய உயிரைப் போன்று கவனிக்கின்றார்கள். ஆனால் கல்வி கற்பதை அலட்சியமாகக் கருதுகின்றனர். நாட்கள் அனைத்தும் தொலைபேசியுடன் இருப்பதனால் கல்வி கற்பதற்கு நேரம் இல்லாது போதல், சிலர் தொலைபேசியைப் பார்ப்பதோடு கல்வியிலும் கவனம் செலுத்துகின்றனர். பலர் தொலைபேசியில் மூழ்கி கல்வியை தாமே அழித்து வருகின்றனர். இவ்வாறு தொலைபேசிப் பாவனையால் எதிர்காலத்தில் சமூகத்திற்காக போராடும் இளையோர்கள் அரியதாகவே காணப்படுகின்றனர்.

இளையோர்களின் நல்ல சிந்தனையில் பெரிதும் தீமையை ஏற்படுத்துவது விளையாட்டில் ஆர்வம் இன்மை, உடல் ஆரோக்கியம் என்பன ஆகும். இதன் காரணமாக இன்றைய இளைஞர் சமுதாயம் பாதிக்கப்படுகின்றது. விளையாட்டு என்றவுடன் விலகி நிற்கின்றார்கள். உடலுக்கு ஆரோக்கியத்தை ஏற்படுத்தும் விளையாட்டை விளையாட மறுக்கின்றனர். "ஓடி விளையாடு பாப்பா" என்று பாரதியார் கூறியவற்றை மறந்து விட்டார்கள். விளையாட்டினை விளையாடுவதால் நோயின்றி வாழமுடியும். உடலுக்கு ஆரோக்கியம் தரும் விளையாட்டில் ஈடுபட்டு ஆயுளுடன் வாழ்வோம்.

இன்றைய சமுதாயத்தில் பெரும்பாலும் இளைஞர்களிடத்திலே போதைப் பாவனை அதிகரித்து வருகின்றது. நாளைய தலைவர்களாகத் திகழ வேண்டிய இளையோர்கள் போதையை பாவித்து பாதை மாறிச் செல்கிறார்கள். கல்வியின் அவசியத்தையும் அதன் மூலம் எதிர்கால சமூகத்தில் மாற்றத்தினை ஏற்படுத்துவதையும் அறியாத இளைஞர்கள் இக்குடிப்பாவனைக்கு ஆளாகின்றார்கள். இதன் மூலம் ஏற்படும் ஆபத்தை புரிந்து கொள்வதில்லை. "சிங்கம் போன்று சிலிப்பிக் கொண்டிருந்த இளைஞர்களை வேரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய்த்து விடக் கூடியது" போதையைப் பாவனையாகும். இவை குடிப்பாவனையால் ஏற்படும் ஆபத்துக்கள் ஆகும்.

இவ்வாறான பிரச்சனைகளை தடுத்து இலட்சியத்தை நிறைவேற்ற மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாவன சோர்விலிருந்து மீண்டெழுந்து சமூகத்திற்காக போராடல், பெரியோர்கள் கூறும் அறிவுரைகளை முன்மாதிரியாகக் கொள்ளல், போதைப்பொருள் பாவனையை தடை செய்தல், விளையாட்டுக்களில் ஆர்வம் கொள்ளல், நல்ல சிந்தனைகளை மனதில் விதைத்தல், சமூகத்திற்காக வாழ்க்கையை தியாகம் செய்யக் கூடியவராக அர்ப்பணிப்புடன் செயல்படல் வேண்டும். இவற்றைக் கடைப்பிடித்தால் வருங்கால துடிப்புடைய இளைஞர் சமுதாயம் உருவாகும்.

எனவே, ஒரு சமூகத்தை வளர்ச்சிப் பாதையில் இழுத்துச் செல்ல வேண்டும் என்றால் அது அந்த சமூகத்தில் இளைஞர் கையில் மட்டுமே இருக்கின்றது. அப்படிப்பட்ட இளைஞர்களை உருவாக்குவது சமூகத்தின் கடமையாகும். "இளைய சமுதாயத்திடம் நல்ல விதைகளை விதைக்க முடிந்தால் அதன் அறுவடையாக இன்றயை இளைஞர்களை உருவாக்கலாம்". இளமைக் காலத்தில் வளர்த்துக் கொள்ளும் திறமை வாழ்நாள் முழுவதும் பயன்தரக் கூடியவையாகும். நாளைய வரலாற்றை மேன்மையடையவும், முன்னேற்றம் அடையவும் வேண்டுமாயின் இன்றைய இளைஞர் சமுதாயம் துடிப்புடன் செயல்பட வேண்டும். இளைஞர்கள் தங்களுடைய வாழ்க்கையைப் பற்றி தொலைநோக்குடன் சிந்திக்க வேண்டும். "ஒளி தரும் நெருப்பாக இருக்க வேண்டுமே தவிர நெருப்பாக இளையோர் சமுதாயம் மாறக்கூடாது". வருங்கால சமுதாயத்தில் இளையோரின் பங்கு இன்னொரு கால சரித்திர சுவடாக அமைய வேண்டும். இளையோர்களால் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த நல்ல சிந்தனையே பெரிதும் உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழித்தெழுவோம் விழிப்பாயிருப்போம்

திருமதி நவமணி ராஜ்குமார்
547, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

முதலாமிடம்

விழுதுகள் மண்மீது சுதந்திரமாய் நடமாட
விழித்தெழு சமூகமே! விழிப்பாய் இரு!
அழுதிடும் தாய்மாரின் கண்ணீர் துடைத்திட
பழுதிலா வாலிபம் காப்போம் விரைந்திடு!

திட்டமிட்டே எம்மினிய இளையோரைச் சிதைத்திட
வட்டமிடும் ஈனர்களை ஒழித்திடப் புறப்படு!
கட்டிளமைப் பருவத்தின் துன்பங்களைத் துடைத்திட
பட்டறிவு படைத்தோரே துணிந்து செயற்படு!

நாட்டின் எதிர்கால முதுகெலும்பான இளைஞரை
வீட்டினுள் பூட்டி நிதம் வைத்திட எண்ணாதே!
காட்டும் நல்வழிகள் பலதையும் ஒன்றிணைத்து
பாட்டும் பயனுமாய் பண்பாக எடுத்துரைத்திடு!

போதையும் மதுவும் போக்கற்ற வெட்டிப்பேச்சும்
பேதையாய் அலைத்திடும் என்றே மொழிந்திடு!
மேதையாய் உயர்ந்திட்டோர் வாழ்வினை தொட்டு
வேதனையின்றி உளமாற்றம் செய்திட முயன்றிடு!

சமுதாய நிகழ்வுகள் சமயச் சடங்குகள்
விளைதிறன் மிக்கநற் சிந்தனைக் களங்கள்
கிராமங்கள் தோறும் அமைத்து வாலிபங் கூறும்
கருத்துக்கு மதிப்பளித்து ஆற்றல்கள் உயர்த்திடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநூல் தொலைக்காட்சி மோகமாயை என்பதை
முகவரி தொலைத்திடும் யுகத்திற்கு மொழிந்திடு!
வாழையடி வாழையாய் காத்திட்ட பண்பாட்டைக்
காளையர் இதயத்தில் உரமாக்கி வளர்த்திடு!

சமூகத்தில் வாழும் கற்றோர் பெரியோர்கள்
ஒன்றாய் இணைந்து தலைமுறை பேணிடு!
எல்லோரும் ஓரினம் என்றெண்ணி விழித்தெழு!
புலனியக்கத் தூண்டல் கொண்டோரைக் காத்திடு!

குறைகாணும் போக்கினை விட்டுத் தள்ளியே
நிறைவான நம்பிக்கையைத் தினமும் ஊட்டிடு!
அன்போடு பாதுகாப்பும் அன்றாடம் பேணிடு!
பண்புடைய பிள்ளைகளாய் வளர்த்திட உழைத்திடு!

ஒத்தவயதுச் சகபாடிகளோடு சேர்வதை உறுதிசெய்
கற்றற்குழுவை அயலில் உருவாக்கிக் கண்காணித்திடு!
ஒற்றுமையோடு தீர்மானம் எடுத்திடத் துணிவுகொடு!
தற்றுணிவோடு செயற்படும் உளத்தினை கண்டிடு!

தன்னுயிர் போலவே மன்னுயிர் காத்திடும்
தமிழனின் பண்பாட்டை மறவாது இடித்துரை!
வாழ்வின் மகத்துவத்தை பக்குவமாய் புரியவைத்து
பண்புடைச் சிந்தையாளர் உருவாகச் சங்கற்பஞ்செய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

## படைப்போம் புதிய சமூகம்

**திரு. இரத்தினம் சச்சிதானந்தம்**
**எல்லை ஒழுங்கை,**
**தும்பளை, பருத்தித்துறை.**

**இரண்டாமிடம்**

எழுந்து வாருங்கள்
இளைஞர்களே
நாளைய விடியல் இங்கு
விதையாகக் காத்துக் கிடக்கின்றது
உங்களுக்காக

புதுமைப் பெண்ணாக
புது யுகம் படைத்திடுங்கள்
படிதாண்டினாலும் பத்தினி பத்தினிதாள்
பாரறியச் செய்தான்
தஞ்சைத் தமிழிச்சி மறந்து விடாதே

நீ என்பதே நிசம்
இன்றென்பதே உண்மை
நம்பிக்கையுடன் படைத்திடுங்கள்
நல்லதோர் சமூகத்தை

உங்கள் இரைப்பையை
பசிக்கு விற்றாவது
அறிவுக்கு விருந்து வையுங்கள்

கல்லுங்கள் கல்வியால்
உலகை வெல்லுங்கள்
கல்லாமல் வெறும்
தெருக் கல்லாகாதீர்கள்

கூட்டுக்குள் குளிர்காயும்
மயிர்கொட்டிப் புழுவல்ல நீங்கள்
கூட்டை உடைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்து வாருங்கள்
வண்ணத்துப் பூச்சியாகப்
பிறந்து வாருங்கள்

இருக்கும் வரை
சுவாசிப்பதற்கல்ல வாழ்க்கை
இறந்த பின்னும்
பேசப்படுவதற்கு

சமுதாயத்தின் விதைதான் நான்
சாதிக்கச் சொல்கின்றேன்
நல்ல சிந்தனைகளை
உங்கள் மனதில் விதைத்ததினால்
செழித்து வளரட்டும்
ஒரு நல்ல சமூகம்

நாரை மட்டும் உங்கள்
கையில் எடுத்துக் கொள்ளுங்கள்
நீங்கள் தேடும் பூக்கள்
ஒவ்வொன்றாகச் சேர்ந்து
மாலையாகும்

இளைஞர்களே
இளமைப் பருவம் சிறகு போன்றது
பறக்காதுவிட்டால்
சிறகுகளும் பாரம் தான்

நாங்கள் வழி விடுகின்றோம்
சமுதாயத்தின் மூடக் கொள்கைகளை
நீங்கள் தெரி வெடுங்கள்
களை அகற்றுங்கள்
நாளை நல்லதொரு
சமூகத்தை மலரவையுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையுடன் உழைப்போம்
## (ஆனந்தக்களிப்புச் சந்தம்)

**செல்வி குணத்திலகம் சொரூபிகா**
சில்லாலை மேற்கு,
பண்டத்தரிப்பு.

**மூன்றாமிடம்**

1. நாக ரீகமென்னும் பேரில் - இன்று
நாடுசீ ரழிகின்ற நிலையினைக் கேளீர்
வேக முடனின்று எல்லாம் - வீதி
விபத்துக்களோ மிச்சம் மோசம்

2. தன்னந் தனியாகப் பெண்கள் - மீண்டும்
தெருவினில் எப்போதும் போய்வர வேண்டும்
என்ன இடர்களு மின்றி - அவர்கள்
எங்குமே உலாவும் சுதந்திரம் வேண்டும்

3. போதைப் பொருள்பல இன்று - இங்கு
புகுந்து இளையோரின் வாழ்வைக் குலைத்து
வாதைய ழித்துயர் குடிக்கும் - இந்த
வன்மச் செயல்களை அழித்திட வேண்டும்

4. கல்வியில் முன்னேற வேண்டும் - நாம்
கையேந்திப் பிழைத்திடும் நாள்மாற வேண்டும்
வல்லமை பெற்றிட வேண்டும் - எங்கள்
வாழ்வுமுன் னேறிடும் வழிவகை வேண்டும்

5. மூத்தோரை மதித்திட வேண்டும் - இங்கு
மூடிட வேண்டுமு தியோர் மனைகள்
காத்தே யவர்களை நாமும் - மிகக்
கண்ணிய மாகக்க வனிக்க வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. விடுதலை விடுதலை என்றே - பெரும்
வீரமு ழக்கம்செய் தல்சுய லாபம்
விடுவரோ தம்தலை தன்னை - தம்
வீட்டுக்காய் என்றுமு ழைக்கு மிவர்கள்

7. சிறுவரின் உடல்தனைச் சிதறும் - இச்
சீர்கேட்டைச் செய்திடும் காமுகக் குண்டர்
சிறத்தைக ளிவர்களை யொழித்தே - எங்கள்
செல்வங்க ளையென்றும் காத்திட வேண்டும்

8. பச்சைப்ப சேலென்ற பூமி - இன்று
பாலை வனமாகப் போவது காணீர்
பிச்சை எடுத்திடும் கைகள் - இதைப்
பேணிடின் வாழ்வுவ ளம்பெறும் வாரீர்

9. இயற்கைப் பசளையை விட்டு - இன்று
இர சாயனப் பசளைதா ராளமாய்வந்து
செயற்கை யுரமும்நா சினியும் - பயிர்
செய்திடு மெங்கள்மண் வளத்துக்கு நாசம்

10. வழியற்ற நிலையினை மாற்றி - நம்
வருங்காலச் சந்ததி வாழ்வைமுன் நோக்கி
முழங்கிடு வோம்புதுப் புரட்சி - என்றே
முன்னிற் கும்இளை யோருடன் நாமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடலாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் தலைவர் நீங்களே

**செல்வி தவராசா பவித்தனா**
ஆலங்குழாய் வீதி,
சண்டிலிப்பாய்.

**முதலாமிடம்**

இன்றைய இளைஞர் இதயங்கள்
இமயம் தொடும் சிகரங்கள்
உங்கள் திறமையைக் காட்டுங்கள்
உலகின் தலைவராய் திகழுங்கள்

குருதியே ஓடாது நின்றாலும் - உங்கள்
உறுதியால் மீண்டு எழுந்திடுங்கள்
நன்றே செய்ய நினைத்திடுங்கள்
இன்றே என்று துணிந்திடுங்கள்
(இன்றைய இளைஞர் இதயங்கள் )

நாட்டுக்கு நன்மை செய்யுங்கள்
நாடு உங்களைப் போற்றிடும்
சிந்தனையில் திட்டம் தீட்டுங்கள்
சமூகத்தில் மாற்றம் காணுங்கள்
(இன்றைய இளைஞர் இதயங்கள்)

இளைஞர் நாட்டின் முதுகெலும்பு
இன்றே அதனை புரிந்திடுங்கள்
விண்ணின் மழைத்துளி மண்ணிற்கே
இளைஞனின் வியர்வைத்துளி வெற்றிக்கே
(இன்றைய இளைஞர் இதயங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வீட்டிற்கு | வெளிச்சம் | சாளரம் |
| சமூகத்திற்கு | வெளிச்சம் | இளையோர்கள் |
| கல்வியை | தவமாய் | கருதினால் |
| வரமாய் | எதிர்காலம் | சிறக்குமே |

(இன்றைய இளைஞர் இதயங்கள்)

| | | |
|---|---|---|
| சோம்பலை | சாம்பலாய் | ஆக்குங்கள் |
| சோதனையை | சாதனையாய் | மாற்றுங்கள் |
| அநீதியைக் | கண்டு | பொங்குங்கள் |
| புதிய | உலகம் | படைத்திடுங்கள |

(இன்றைய இளைஞர் இதயங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்வான வழியொன்று நீர் காணுவீர்

திரு. கந்தன் பாலன்
வீமன்புலம், இமையாணன் கிழக்கு,
வல்வெட்டித்துறை.

**இரண்டாமிடம்**

உயர்வான வழியொன்று நீர் காணுவீர்
உள்ளமதில் நல்ல - உயர்ந்தோரை நினைத்திங்கே
உயர்வான வழியொன்று நீர் காணுவீர்

பெருமை தருமெங்கள் பெற்றோரையும் - கல்வி
கற்றோரையும் மதிப்பீர் கனிவுடனே
கண்ணான முதியோரைக் காலமெல்லாம் போற்றி
கடமையைச் செய்துமே உயர்ந்திடுவீர்

உயிரான கல்விதனை உவப்புடனே கற்று
உயர்வடைவீர் நல்ல உத்தமனாய் - பல
கலைகளையுமிங்கு பக்குவமாய்ப் பயின்று
பயனடைவீர் இந்தப் பாரினிலே

அன்பு அறம் அகிம்சை அரிய வழிகளதை
அறிந்துமே அகத்தினிற் கொண்டிடுவீர் - நல்ல
ஒழுக்கமே உயிரிலும் மேலான செல்வமென
உள்ளமதில் கொண்டு வாழ்ந்திடுவீர் - உயர்வான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமத மொழிபேதம் இங்கில்லை என்று நீ
இனிதான உன்மொழியிற் செப்பிடுவீர் - உன்
மனமதைத் தளராத உறுதியுடன் பேணி
நலமாக என்றுமே வாழ்ந்திடுவீர்

பொய்யா மொழிப் புலவன் தந்த திருக்குறளை
மெய்யாரக் கற்றுநீ உணர்ந்திடுவீர் - நல்ல
மேன்மைதரு நூல்கள் மேதினியில் உண்டு
தப்பாமற் கற்றுமே பயனடைவீர்

சிறுவராம் நீங்கள் சீரிய வாழ்வதனை
சிந்தனை செய்துமே சிறப்பாக்குவீர் - உமது
உரிமையும் கடமையும் எதுவென எண்ணியே
உத்தமனாய் நானிலத்தில் உயர்ந்திடுவீர்
- உயர்வான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் வாசம்

**திரு. பாவிலுப்பிள்ளை வேதநாயகம்**
**தும்பளை தெற்கு,**
**பருத்தித்துறை.**

**மூன்றாமிடம்**

**பல்லவி**

தலைமுறையே - இளந் - தலை முறையே
புது யுகத்தை உருவாக்கி பொதுப் பணியை புரிய வந்த
தலை முறையே - இளந் - தலைமுறையே

**சரணம்**

என்ன திறன் இல்லை உங்கள் செயற்பாட்டில்
ஏன் பயந்து நடுங்க வேண்டும் தினம் நீட்டில்
ஒழுங்காய் வாழ்ந்துவிடு பண்பாட்டில் - உமை
ஒழுக்கம் உயர்ந்திடுமே பதிவேட்டில்

நாட்டுப்புறம் இருக்கிறார்கள் இளந் தலைகள்
நற்பயனை கற்க ஊட்டும் பல் கலைகள்
நீட்டினிலே கலாசார உயர் நிலைகள் - கற்று
நித்தமுமே வாங்கட்டுமே பொற் சிலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியமும் வாசித்தலும் மிக இனிமை
ஆர்வமுடன் கற்கும் காலமோ இளமை
காவியத்தால் இளம் சமூகமே பெருமை - பெறக்
காட்டிடுவீர் ஏற்றவழி அது அருமை

வன்செயலால் நாறுகுதே நம் தேசம்
வளரும் இளம் தலைமுறைக்கு அது நாசம்
அன்பு அற்ற சமூக மாற்றம் வெளிவேசம் - இங்கு
அனைவர் கையும் சேர மாறும் மண்வாசம்

சட்டத்தினை மீறி இங்கு வருகுதே தூள்
சாணுக்குச் சாண் எடுத்துவர இருக்குதே ஆள்
திட்டப்படி கிடைப்பதுவோ பல்மயிற் றாள் - அதைத்
தின்பவரோ கையிற் கொள்வார் மா கொடு வாள்

இளந் தலையே நடவடிக்கை எடுப்பீரே
இங்கு இதை மாற்றத்தாலே தடுப்பீரே
வளர்ந்தோரின் உரைக்குச் செவி மடுப்பீரே- பின்
வணிகர்களைத் திருத்தும் இடம் விடுப்பீரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுகதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம் விதைத்த "தீ"

திரு. அரியதாஸ் சகாயராஜா
இல. 72, இராஜசிங்கம் வீதி, திருநகர்
யாழ்ப்பாணம்.

**முதலாமிடம்**

மனைவியையும், பிறந்த ஆண் குழந்தையையும் கண்டவுடன் கண் கலங்கி, உச்சி முகர்ந்து முத்தமிடுகிறான் ராசா. 'நான்கு பிள்ளைகள் போதும். இதுதான் கடைசிப் பிள்ளை" என ஏற்கனவே முடிவெடுத்துவிட்டான். பிரசவமென்பது ஒவ்வொரு பெண்ணிற்கும் மறு பிறப்பே. ஒவ்வோர் தாய்க்கும் தன் பிள்ளைகளே உயிர்நாடி. தனது உடல் இயலாமையிலும், வாயில் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தாள் அவனின் மனைவி.

கணவனை பரிதாபமாக பார்த்தவள் 'எப்பையப்பா வீட்ட போறது..? பிள்ளைகள பாக்கணும் போல இருக்கு....." அவளின் இரண்டு விழிகளில் கண்ணீர் கசிகிறது.

'போவோம்.. போவோம்.. சீக்கிரம் போயிடுவோம்" என தன் மனைவியை சமாதானப்படுத்துகிறான். தன்னுடன் கூட்டிச்சென்ற மூத்த மகன், கடைசி மகனின் பஞ்சு போன்ற பிஞ்சு விரலைப் பிடித்து விளையாடுகிறான்.

'அப்பா... தம்பி சிரிக்கிறானப்பா..."

மகனின் மழலையைக் கேட்டவன், புன்னகைத்து தலையசைக்கிறான்.

வைத்தியசாலையில் திடீர் சலசலப்பு, நோயாளர்கள் ஆங்காங்கே தலைதெறிக்க ஓடுகிறார்கள். ஒலிபெருக்கியில் ஏதோ அறிவித்தல். அவன் காதிலும் கேட்கிறது. செய்வதறியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைத்தவன் அருகிலுள்ள நோயாளர் காவு வண்டியில், மனைவி பிள்ளைகளிருவரையும் ஏற்றியவாறே.. பரபரப்பாக வண்டிலைத் தள்ளியவாறே வைத்தியசாலையை விட்டு வெளியேறுவதற்கு முயற்சிக்கின்றான்.

பொது மக்களும், நோயாளர்களும் குறுக்கும் நெடுக்குமாக ஓடியோடிச் செல்கிறார்கள். இயலாத நோயாளர்கள் பயத்துடனும், பதட்டத்துடனும் உயிரைக் கையில் பிடித்தவாறே கட்டிலில் கூனிக் குறுகியபடியே 'கடவுளே.. கடவுளே..." என கை கூப்பி அழுகிறார்கள்.

மனைவி பிள்ளைகளுடன் பாதுகாப்பாக எப்படியாவது வெளியேறிவிட்டால் போதுமென, சன நெரிசலில் நெளிந்து, நசியுண்டு ஒருவாறு வைத்தியசாலைக்கு வெளியே வந்தவன், வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு, இயலாத தன் மனைவியுடனும் கைக்குழந்தையோடும், நால்வரும் வெளியேறுகிறார்கள். வீதி சலசலப்புடனும், இரைச்சலாக இருப்பதையும் காண்கின்றான்.

வீதியருகே ஆட்டோ வருவதைக் கண்ட ராசா, தனது கையால் ஆட்டோவை மறித்து 'ஆட்டோ.. வருமா...? தம்பி..!"

'இல்லையண்ணே.." ஆட்டோக்காரனின் பதிலது. அவனும் அவசரமாக எங்கோ போவதற்கு புறப்படுகிறான்.

'தம்பி.. குழந்தை பெத்து.. மனிசிக்கு கற்பத்தடை செய்திருக்கு.. உடம்புக்கு ஏலாது.. அவசரமா வீட்ட கூட்டிக்கொண்டு போகனும்.. பிள்ளைகள் தனிய இருக்கு.." அவனின் குரல் தழுதழுத்தது. கெஞ்சிக் கேட்டும் ராசாவையும், பிள்ளைகளையும், இயலாத மனைவியையும் பார்த்த ஆட்டோக்காரனுக்கு மனது இளகியது.

'கெதியா ஏறுங்கண்ணே.."

ஆட்டோக்காரனும் சேர்ந்தே அவனது மனைவியை ஆட்டோவிலேற்ற உதவுகிறான். ஆட்டோ வீடு நோக்கி விரைகிறது. வீதியில் பொது மக்கள் மூட்டை, முடிச்சுக்களுடன் போகிறார்கள். ஆங்காங்கே பலர் வீதிகளிலே காத்திருக்கிறார்கள். வீதி முழுவதும் ஒரே சலசலப்பு.

'ஆ... தம்பி இதுதான் வீடு.. ரொம்ப நன்றி தம்பி..."

மெதுவாக அவர்களை கீழிறக்கிய ராசா. ஆட்டோக்காரனுக்குரிய பணத்தை எடுத்துக் கொடுக்கிறான். பணத்தை வாங்கியன், ஆட்டோவைத் திருப்பி சிட்டாக பறக்கிறான்.

'மாமி.. மாமி... வெளியால வாங்க.."

மருமகனின் பதற்றமான குரலைக் கேட்ட பவளம் வெளியே வந்து பார்த்ததும், மகளையும் பேரப் பிள்ளைகளையும் வீட்டினுள்ளே அழைத்துச் செல்லுகிறாள்.

'வெளிக்கிடுங்க.. வெளிக்கிடுங்க... நீங்களெல்லாம் வெளிக்கிடுங்க" ராசாவின் குரலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயமும் பதற்றமுமாயிருந்தது.

ஒன்றுமறியாத மாமியார் 'என்ன மருமகன்... என்னாச்சு.."

'யாழ்ப்பாணத்த விட்டு போகட்டாம்... ஆமிக்காரங்கள் வந்திட்டாங்களாம்... இங்க இருக்க வேணாமாம்.. நீங்க பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போங்க.. நாங்க பொறுத்து வாறோம்... றோட்டெல்லாம் நிறைய சனங்கள்... கெதியா வெளிக்கிடுங்க.."

'டமால்.. டும்... படார்..." எனப் பெரிய சத்தம். புகை மண்டலமாய்,

'அங்கால செல் விழுந்திட்டு.." கத்திக்கொண்டே ஓடிச்சென்று வீட்டு வளவிற்குள் வெட்டி வைத்திருக்கு பாதுகாப்பு குழிக்குள் தன் மனைவியையும், நான்கு பிள்ளையையும் உள்ளே ஒளித்துக் கொள்ள, ஏற்பாட்டைச் செய்கிறான்.

'ஐயோ கடவுளே.. பச்ச உடம்புக்காரிய எப்பிடி கூட்டிக் கொண்டு போறது.." மாமியாரின் கண்ணீரோடமைந்த கவலை.

'பிள்ளைகள் மூன்டையும் நீங்க கூட்டிக்கொண்டு போங்க.. நானும் மனிசியும், அவன் கடைசியும் உயிரோட இருந்தால் வாறோம்."

தனது மூத்த மகனைப் பார்த்து 'தம்பி.. நீயும், தங்கச்சியாக்களும் அம்மம்மாவோட போங்க.. நாங்க பிறகு வாறோம்."

'நீங்களும் வாங்கப்பா..." அழுது அடம்பிடிக்கிறான் மூத்தவன்.

மீண்டும் அதட்டலுடன் 'அப்பா சொன்னால் கேட்கனும்.. அம்மம்மாவோட போங்க..."

அடம்பிடித்து அழுதுகொண்டிருக்கும், பேரனை சமாதானப்படுத்த ராசாவாலும், பவளத்தாலும் முடியவில்லை.

'மருமகன்.. நீங்களும் பிள்ளைகளும் போங்க.. நாங்க ஆறுதலா வாறோம்."

'சொன்னால் கேக்க மாட்டிங்க.. பிள்ளைகளை வெளிக்கிடுத்துங்க... நான் இவங்கள கொண்டுபோய் பாதுகாப்பா எங்கையாவது, விட்டுட்டு வந்து உங்களையும் கூட்டிக்கொண்டு போறேன்."

ராசாவும், அவனின் மாமியாரும் வியர்க்க, விறுவிறுக்க கையில் கிடைத்தவற்றை.. மூட்டைமுடிச்சுக்களை சைக்கிளில் கட்டுகிறார்கள். பத்து வயது குறும்புத்தனமான மூத்த மகனையும், ஐந்தே வயதான இரண்டாவது மகளையும் சைக்கிளின் முன்னுக்கும், மூன்றாவது மகளான இரண்டே வயதேயுடையவளை தோளிலும் சுமந்தவாறே சைக்கிளை மெதுவாக உருட்டிக்கொண்டு..

மனைவியையும், பிஞ்சுக் குழந்தையையும் பிரிய மனமில்லாதவனாய்.. 'இஞ்சேயப்பா... நாங்க போயிற்று வாறோம். நீங்க பத்திரமா இருங்க... மாமி நாங்க போயிற்று வாறோம்...."

9218(P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுங்கு குழிக்குள்ளிருந்து அவனது மனைவி 'ஓமப்பா கவனாமா பாத்துப் போங்க... பிள்ளைகள கவனமா பாருங்க..." யார்யாரை, யார்யார் மீண்டும் காணமுடிவார்களோ? என்ற தவிப்போடு.

கணவன், பிள்ளைகளின் முகத்தைப் பார்க்க முடியாத அவளது துர்ப்பாக்கிய நிலையும், அவளின் தாய்ப்பாசத்தின் தவிப்பும் காலத்தின் கொடுமையே.

அவனது சைக்கிள் நத்தை ஊர்வது போல் ஊர்கிறது. சனங்க வீதிகளில் முண்டியடித்து தத்தமது உயிரைப்பாதுகாக்க பாதுகாப்பான இடம் தேடி வீதியிலே.. இடம்பெயர்ந்தோர் பலரும் நடு வீதிகளிலே..

செல் விழுந்து வெடிக்கும் சத்தங்கள் அருகருகே கேட்கிறது. வெடித்துச்சிதறும் எறிகணைகளும், அதன் சிறிய இரும்புத் துண்டுகளும் வீதியருகே வீழ்கிறது.

இரையை குறிவைத்து வானத்தில் வட்டமிட்டு பறந்து திரியும் கழுகுகள் போல பேரிரைச்சலுடன் போர் விமானங்களும், கெலிகொப்டர்களும்.

இவை புதிதாக இல்லாவிட்டாலும், பல விமானங்களும் நவீன கெலிகொப்டர்களும், புதுவரவு ஆயுதங்களும் போர் செய்வதற்காக புதிதாக இறக்குமதி செய்யப்பட்டவையே.

வான் முழுவதும் புகைமூட்டங்களும், வீதிகளில் கந்தகத் துகள்களும், இரசாயனக் கலவைகளும், படிந்த தூசுகளும் மக்களின் மூச்சுக் குழாய்வரை செல்கிறது.

ராசாவும் பிள்ளைகளும் நாவற்குழிப் பாலத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். மூன்றாவது மகள் அவனின் மார்பை தாயின் மார்பென்று தடவுகிறாள். காலத்தின் கொடுமைகளை கடவுளிடம் மட்டும்தானே முறையிட முடியும்!

கடந்து செல்லும் வீதியில் விழுந்து வெடிக்கும் எறிகணைகளும், அதற்குப் பயந்து பலர் கீழே படுத்துக் கொள்கிறார்கள்.

செல்லும் வீதிகளில் தலை சிதைந்து கை காலிழந்து, உயிரிழந்து பிணமாய் கிடக்கின்ற சிலரை ஏறி மிதித்துக் கொண்டே ராசாவும், இடம்பெயர்ந்தோரில் சிலரும் பாதுகாப்பாக ஓரிடத்தில் ஒதுங்குகிறார்கள்,

அது அம்மன் கோவில். ஆச்சாரமிக்கது. அம்மனின் அருளால் எறிகணைவீச்சும், வெடி ஓசையும் குறைவது போல உணர்கிறார்கள். தங்கள் தங்கள் மூட்டை முடிச்சிசுக்களை இறக்கி வைத்து நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள்.

ராசாவுக்கு மனைவி, பிள்ளை, உறவுகள் ஊர்... என்ற நினைப்புத்தான். சொர்க்கத்திலே வாழ்ந்தாலும் அது சொந்த ஊர் சுகம் போல வருமா? அந்த சுகம் அம்மாவின் மடியில் தூங்கியெழுவது போன்றதே.

பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த பூமியை விட்டு இப்படி 'அகதி" என்ற அடையாளத்துடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடி நம் தமிழ் குடியென வரலாறு வழியாகவும், வாய்மொழி வழியாகவும் அறிந்தவையெல்லாம்..... இன்றுடன் பொய்யாகிப் போய்விடப்போகிறதா..?

அவனின் மனைவி அடிக்கடி பெருமையோடு சொல்லுவாள் 'என்னங்கப்பா... இது எங்கட அப்பப்பா கட்டின வீடு இப்பவும் அசையாமல் இருக்கு.. இதில இருந்து ஒரு செங்கல்லக் கூட நகர்த்த முடியாது" அவளின் குடும்பப் பெருமையை பொறுக்க முடியாமல் இவனும் இடக்குமுடக்காய் விவாதிப்பதுமுண்டு.

இதையெல்லாம் யோசித்தவாறே தன் பிள்ளைகள் மூவரையும் கரிசனையோடு பார்க்கிறான். மனதில் பய பக்தியுடன் 'அம்மாளே நீதான் துணை"

மெதுவாக பொழுது சாய்கிறது. மூத்தமகன் திடீரென 'அம்மா.... அம்மா...." என வீரிட்டு கத்தியவாறே எழுந்துகொள்கிறான். தன் நெஞ்சில் அணைத்துக் கொண்ட ராசா 'போவோம்.. போவோம்... அம்மாட்ட போவோம்..."

அந்த சத்தத்தினால் இரண்டு மகள்களும் விழித்துக்கொண்டனர். அண்ணனுடன் சேர்ந்து 'அம்மா... அம்மா...." என ஒப்பாரி வைத்தாற்போல் ஓலமிட்டார்கள். மூவரையும் தன் மார்போடு அணைத்து முத்தமிட்டான் ராசா.

குழந்தைகளுக்கு தொண்டை வறண்டு போய், தாகமெடுத்தது.. கடைசி மகள் 'அப்பா.. தண்ணி... தண்ணி...." சைகையால் காண்பிக்கின்றாள்.

தான் கொண்டு வந்த மூட்டையை அவிழ்த்து தண்ணீரைத் தேடுகிறான். அவசரத்தில் மறந்துபோனதை உணர்ந்தவனாய். பக்கத்திலிருக்கும் முகமறியா... இடம்பெயர்ந்த உறவுகளிடம் 'குடிக்க தண்ணி இருக்கா..?"

இடம்பெயர்ந்து வந்தவர்களும் அவனைப் போலவே உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு 'உயிர் பிழைத்தால் போதும்" என வந்தவர்கள். அவர்களும் தண்ணீர் கொண்டுவரவில்லை.

'அண்ணே.. இல்லையண்ணே.. எங்களட்ட தண்ணி இல்லை"

அவனுடைய பிள்ளைகளின் தலையை மெதுவாக வருடுகிறான், பிள்ளைகள் நித்திரையாகிறார்கள். தன் பிள்ளையின் தண்ணீர்த்தாகத்தை எப்படியாவது தீக்க வேண்டுமென அயல் வீடுகளில் தண்ணீர் கேட்பதற்கான தேடலில் ஆயத்தமாகிறான்.

இடம்பெயர்ந்தோரில் மிக அருகிலிருக்கின்றவர்களைப் பார்த்து 'கொஞ்சம் பிள்ளைகளைப் பாருங்க.. நான் தண்ணி எடுக்கப்போறேன்.. பிள்ளை தண்ணி கேட்டிட்டு படுத்திட்டுது"

அருகிலிருந்த பெண் 'நீங்க போங்கண்ணே.. நான் பாக்கிறேன்"

அந்தப் பெண் தன் கணவனைப் பார்த்து 'நீங்களும் அவரோட போங்க.. எங்களுக்கும் குடிக்கத் தண்ணி வேணும்தானே.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையசைத்தவாறே ராசாவுடன் அவரும், இன்னும் பலரும் போகத் தயாராகிறார்கள். தண்ணீர் தேடும் படலம் ஆரம்பமாகிறது.

ஆளாளுக்கு இந்த வீடு, அந்த வீடென... தண்ணீர் கேட்பதற்கு 'வீட்டுக்காரர்... வீட்டுக்காரர்.... ஐயா.... அக்கா.... அண்ணே...." எனப் பல கூக்குரலிடுகிறார்கள்.

வீட்டின் எல்லைப்படலையில் வந்து 'என்ன? ஏது?" எனக் கேட்பாரில்லை. நேரமாகிக் கொண்டே போகிறது.

தாகம் தீர்க்க வயல்வெளிகளைக் கடந்து அலைந்து, திரிந்து இளைத்து களைத்து தேடுகிறார்கள் தண்ணீரை. வெகு தொலைவில் அடைக்காத வளவொன்றில் கிணறு போல தெரிகிறது. அமிர்தத்தைக் கண்டவர்கள் போல மூச்சிரைக்க கிணறினருகே ஓடுகிறார்கள்.

கிணறுதானது. அவர்களிடையே சிரிப்பு, கலகலப்பு. அறுபதடிக் கிணறது. மிக ஆழமானது. அருகில் தண்ணீர் அள்ளும் வாளி. உசாரடைந்துவிட்டார்கள் சிரமத்தைப் பார்க்காது ராசா வாளியை எடுத்து கிணற்றுக்குள் போடுகிறார்.

தண்ணீர் தேடிச் சென்றவர்களிலொருவன் 'அண்ணே..கெதியா அள்ளண்ணே.... தொண்ட வறண்டு.. காய்ஞ்சுபோயிருக்கு.."

கயிறை வேகமாக இழுக்க.. இழுக்க... வாளி தண்ணீரை சுமந்து, நாற்பதடி, முப்பதடி, இருபதடி, பத்தடி... கையில் தண்ணீர் கிடைக்க இன்னும் சில அடிகளே... ஆர்வமாக எல்லோரும் வாளியை பாத்தபடியே....

கிணற்றடிக்கு பக்கத்தில் இருக்கும் வீட்டிலிருந்து பெரிதாய் ஒரு சத்தம் 'டேய்....யாரடா.... எங்கட வளவுக்குள்ள.." வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு மூன்று பெரியவர்களோடு, இரண்டு இளையோரும். கிணற்றை நோக்கி மிக வேகமாக ஒடி வருகிறார்கள்.

ராசா முந்திக்கொண்டு உரத்த குரலில் 'தண்ணி எடுக்க வந்தனாங்க...." கதைத்தபடியே வாளியை வெளியே இழுக்கிறார். வாளியில் தண்ணீர் தழும்பி வருகிறது. அதை கையிலெடுக்கையில், மிக வேகமாக நெருங்கி வந்த ஐவரிலொருவன் தண்ணீர் வாளியை காலால் உதைத்து விடுகிறான். மீண்டும் அதே வேகத்தில் வாளி கிணற்றுக்குள் போய்க்கொண்டிருக்கிறது.

ஐவரில் வயதானவர் 'யாரடா... நீங்க... எங்க இருந்து வரீங்க..?"

சட்டென பயந்துபோன இடம்பெயர்ந்தவர்கள். ஒருவரையொருவர் முழித்துப் பார்க்கிறார்கள். உடனே ராசா 'ஐயா.. நாங்க இடம்பெயர்ந்து வந்தனாங்க... கிணத்தில தண்ணி குடிக்க வந்தனாங்க.."

ஐவரில் அடுத்த பெரியவர் 'நீங்க என்ன சாதியோ..? என்ன குலமோ... சீ....?" கௌரவத்துடன் தன் தோளில் கிடக்கும் போர்வையை உதறியபடியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேசியாக தன்னை உலகத்திற்கு காண்பிக்கும் ஐவரில் குழுத் தலைவர் தன் பங்கிற்கு 'இது எங்கட ஆக்கள் மட்டும் குடிக்கிற தண்ணி. இங்க தண்ணியள்ள வேணாம்"

கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்களையும், வீரம், இறைமை, ஈழம், தமிழ் என்னும் அடையாளங்களுக்குள் புதைக்கப்பட்டிருக்கும், புரியாததொன்றாக எல்லோருள்ளும் புற்றுநோயைவிட வேகமாக பரவிக்கிடக்கிற சாக்கடையேயது. அவர்கள் உள்ளத்திலும் பாதாளச் சாக்கடையாய்..!

இடம்பெயர்ந்தோரின் கெஞ்சல்கள், கருணை எதிர்பார்ப்பு, இரங்கல்கள், இயேசுபிரானின், புத்தரின் இரக்கத்தின் துளிகள், இவையெதுவுமே கூட அங்கு ஜெயிக்கவில்லை. அவர்களின் மனதை உருக்கவில்லை. அவர்களின் மனச்சான்றை நொறுக்கவில்லை.

ராசாவின் கண்கள் கலங்கி, மனம் வெம்பியவாறே 'ஐயா..." என்று சொல்வதற்குள்,

இளைஞனொருவன் 'உங்களுக்கு ஒருக்கா சொன்னால் கேக்க மாட்டீங்க..."

ஐவரும் பரபரப்புடன் அங்குமிங்கும் பார்க்கிறார்கள்..!

ஒருவன் அருகில் கிடந்த குப்பை கூழங்களை கிணற்றுக்குள் வீசுகிறான். அடுத்தவன் கிணற்றின் பக்கத்தில் செத்துக் கிடந்த பாம்பை தடியாலெடுத்து கிணற்றுக்குள் போடுகிறான். இன்னுமொருவன் எச்சிலை காறி கிணற்றுக்குள் துப்புகிறான். கைகொட்டி ஏளனச் சிரிப்புச் சிரிக்கிறார்கள் அந்த சுதேசியவாதிகள்.

ராசாவின் கை நரம்புகள் புடைத்து, கண்கள் சிவத்தது. கோபத்தினுச்சிக்கே சென்றவன் 'நாங்களும் உங்களுடைய உறவுகள்தானே.. ஈழத் தமிழர்கள்தானே.. குடிக்க தண்ணிதானே கேட்டோம்... இப்படியா கேவலமாக நடப்பது..." என்று கூறும்போது

ஆண்டவருக்கே பொறுக்கவில்லை. எங்கிருந்தோ வந்த எறிகணை கிணற்றினருகே இருந்த வீட்டின்மேல் விழுந்து, வெடித்துச் சிதறியது. 'குய்யோமுய்யோ" எனக் கூக்குரலிட்டவாறே அந்த ஐந்து பேரும் உயிர் பிழைத்தால் போதுமென தலைதெறிக்க ஓட்டம் பிடித்தனர்.

இடம்பெயர்ந்த எல்லோரும் தங்களின் உயிரைக் காப்பாற்ற கிணற்றின் அருகே பதுங்கிக் கொண்டார்கள். பயம் சற்று தெளிந்தது.

மீண்டும் தாகம். அதீத தாகம். ராசாவுக்கு பொறுக்க முடியவில்லை பிள்ளைகளின் நினைவும் வாட்டியது. 'எல்லோரும் சேர்ந்து கிணறை இறைப்போமா..?" என்ற ராசாவின் கேள்விக்கு, சற்றும் யோசிக்காது எல்லோரும் ஆமோதித்தனர். தாகத்தின் நா வறட்சியால் வாடியோர் அனைவருமே சேர்ந்து, கிணற்றுக்குள் வீசப்பட்ட குப்பைகளையும், கழிவுகளையும், அசுத்தமான தண்ணீரையும் வெளியகற்றினர். கஸ்டத்தை மறந்து அனைவரும் 'அகதியென" சேர்ந்ததன் பலனேயது.

கிணறு புது ஊற்றை சுரக்கிறது. புதுப்பாதை திறந்ததுபோல ராசா மீண்டும் கிணற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளியைப் போட்டு அள்ளுகிறான். நன்னீர் சுமந்து வாளி வருகிறது. கிணற்றைவிட்டு வெளியே வந்த நன்னீரை அனைவரும் பருகுகிறார்கள். தூய நீரது. சுவை, நிறம், மணம் இல்லை. தாகமெடுத்த "அகதிகளுக்கு" புதுத்தென்பு கொடுத்த அமிர்தமே அது.

இணைந்த இடம்பெயர் உறவுகள் தங்களின் பிள்ளைகளின் தாகத்தை தீர்க்க, அவர்களின் தவிப்பு, ஏக்கத்தைப் போக்க, அவர்களுக்காக நன்னீரைக் கொண்டு செல்கிறார்கள். இணைந்து ஓர் மனதாய் கோவிலை நோக்கி.

நித்திரையாக இருக்கும் தன் பிள்ளைகளை எழுப்பி 'தண்ணி குடியுங்க.... தண்ணி குடியுங்க.." நித்திரைக் கலக்கத்திலிருந்த பிள்ளைகள் மூவரும் தண்ணீரைப் பகிர்ந்து மடக்மடக்கென குடித்து தங்கள் தாகத்தை தீர்த்தார்கள்.

அறிவிப்பொன்று 'கோயில்களிலும் இருக்க வேணாம்.. இதுவும் பாதுகாப்பான இடமில்லை..."

தனது மனைவி, பிள்ளைகள், வீடு, உறவுகளின் நினைவுகளோடும், கனவுகளோடும், சுமையோடும், ஏக்கத்தோடும்..... மீண்டும் இடம்பெயர்வுப் பயணம் தொடர்கிறது. 'அகதிகளோடு அகதியாய்". கிணற்றில் அள்ளிய தூய்மையான தண்ணீரோடு ராசாவும் பயணிக்கிறார். இன்னொரு பாதுகாப்பான இடத்தைத் தேடி....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறும் காலங்கள்

திரு. சங்கரப்பிள்ளை நிமலன்
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

**இரண்டாமிடம்**

செல்லையா வாத்தியார் என்றால் அந்த கிராமத்தில் அறியாதவர்களே இல்லை என்ற அளவுக்கு பிரபல்யமான வாத்தியார் அவரை செல்லையா மாஸ்ரர் என்று சிறுபிள்ளை முதல் வயது வந்தவர்கள் வரை செல்லமாக அழைப்பார்கள் அக்கிராமத்தில் அவர் நீண்ட காலமாக வாத்தியாராக இருந்து ஓய்வு பெற்று 70 ஆண்டுகள் தாண்டி பவளவிழா காணப்போகும் ஒரு ஓய்வூதியராக வாழ்ந்து வந்தார்.

செல்லையா வாத்தியாருக்கு ஒரே ஒரு மகன் ராஜா இருந்தான். சிறுவன் 8 வயதை அடைந்த போது விதிவசத்தால் தாயை இழந்து விட்ட நிலையில் அவர் தனது கடைசி சகோதரியின் உதவியோடு அவனை வளர்த்து படிக்க வைத்து ஆளாக்கி உயர் பதவியில் வகிக்க உதவியவர். ராஜா கல்வியில் தேர்ச்சி பெற்று தொழில் தேடிக்கொண்டிருந்தார். எக்கவுண்டர் உத்தியோகத்திற்கு விண்ணப்பித்த நிலையில் நேர்முகத் தேர்வுக்கு கடிதம் வந்து எக்கவுண்டர் பதவியும் கிடைத்தது.

திருமண வயதை எட்டி நிற்கும் ராஜாவுக்கு பல திருமண குறிப்புக்கள் வந்து போயின. ஆனால், ராஜாவுடன் சிறுவயதில் படித்த தாதிய உத்தியோகத்தராக கடமை புரியும் துளசி என்ற பெண் மீது மையல் கொண்டு திருமணம் செய்ய முன்வந்த போது தந்தையும் மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் தனது விருப்பத்தினை தெரிவித்திருந்தார். நல்லதோர் சுபமுகூர்த்த நாளில் சுற்றம் சூழ வெகு சிறப்பாக திருமணம் நடந்தேறி நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. செல்லையா மாஸ்ரரும் மகன் ராஜாவும் மருமகள் துளசியும் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார்கள்.

நாளடைவில் ராஜாவுக்கும் துளசிக்கும் இரு குழந்தைகள் உதயமாகினார்கள் . மூத்தவள் செந்தூரி இளையவன் யதுஷனன். ஓய்வூதியரான செல்லையா இரு பேரப்பிள்ளைகள் மீதும் அளவற்ற அன்பு செலுத்தி வந்ததோடு அவர்கள் கல்வியிலும் முன்னேற்றத்திலும் அதீத நாட்டங் கொண்டவராக இருந்தமையால் பேரப்பிள்ளைகள் மீது சிறிய கண்டிப்பையும் செலுத்த வேண்டியிருந்தது.

எக்கவுண்டனாக உத்தியோகம் பார்த்த மகனும் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றிய மருமகளான துளசியும் இருவரின் வேலைப்பளுவும் வீட்டுப் பொறுப்புக்களும் பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டாமல் இருந்தமையால் தன் பேரப்பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்து கவலை கொண்டார். அளவுக்கு மீறிய சுதந்திரம் கொடுத்து எந்த நேரமும் ரீவியில் வரும் தொடர் நாடகங்களைக் கண்டு கழிக்கும் தம் பேரப்பிள்ளைகள் மீது சற்றுக் கண்டிப்பைச் செலுத்தி வந்தமையால், அவர்கள் தம்முடைய நன்மைக்கு சொல்லுகிறார் என்பதை மறந்து

மாஸ்ரர்- அட பேரப்பிள்ளைகளே கொஞ்ச நேரமாவது படியுங்கோவன் அட யது நீ சாதாரண பரீட்சையில் பாஸ் பண்ணி உயர்தரம் படிச்சால் உன்ர படிப்பு முடிஞ்சு போட்டுதோடா

யது- தாத்தா எங்களுக்கு ரிலாக்சுக்கு மட்டும் தான் படத்தை பார்க்கிறம்

மாஸ்ரர்- நான் என்னமோ உங்கட நன்மைக்குத் தான் சொன்னான் படிச்சால் நீங்கள் தான் அப்பாவை போல பெரிய உத்தியோகம் பார்க்க முடியும்.

யது- ஏதாவது ஒன்றை சொல்லிக் கொண்டே இருப்பீங்கள் (இவ்வாறாக தாத்தா மிகு சினத்தை வெளிப்படுத்தி நின்றமை பற்றி மிகுந்த வேதனைப்பட்டார்) கூறியதைக் கேட்டு மாஸ்ரர் அதிர்ச்சியடைந்தார். பெட்டிப்பாம்பாக அடங்கிக் கொண்டார். ஏன்? தன் மகன் ராஜாவின் குணத்தை நன்கு அறிந்த காரணத்தால் அவர் மேற்கொண்டு பேசியிருந்தால் வாலிப வயதை எட்டி நிற்கும் யது பொறுமை காக்கமாட்டான் என்பதை நன்கு அறிந்திருந்தும் ஊரெல்லாம் புத்தி புகட்டி பல கல்விமான்களை உருவாக்கிய வாத்தியாரல்லவா?பொறுமை இழந்தவராய் நீ என்னடா கதைக்கிறாய் உன்னிலை ஒரு பிழையும் சொல்ல மாட்டன். உன் அப்பா தந்த இடம் தான் உன்னை கதைக்க வைக்குது நல்லாய் கதையடா நானும் கேட்க வேண்டும் என்ற விதி போல் இருக்குது.

யது- கிழடு நீ இங்கை இருக்கிறது எண்டால் பேசாமல் இருந்து அம்மா நேர நேரத்துக்கு தாறதை திண்டிட்டு கிட எங்களோட வீண் கதை வேண்டாம்.

ராஜா- என்ன பிரச்சனை இருவருக்கும் வாக்குவாதம் கேட்டுக் கொண்டே ராஜா உள்ளே வந்தான்

வாத்தியார்- தம்பி உன்ரை மேன் என்னை கிழடு எண்டு பேசி உன்ரை வேலையைப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மதிப்பு மரியாதை இல்லாமல் கதைக்கத் தொடங்கிவிட்டான். நீங்கதான் தம்பி இதுக்கு பதில் சொல்லவேணும்

ராஜா- நான் என்ன பதில் சொல்லக்கிடக்கு நீங்கள் இஞ்சை சரியாய் நடந்தால் அவனும் சரியாய் நடப்பான் இதை விளங்கிக் கொண்டால் சரி வயது வந்த பிள்ளைகளோடு அளந்து கதைச்சியள் எண்டால் எல்லாம் சரியாய் இருக்கும்.

செல்லையா வாத்தியார் எழுபது தாண்டிய நிலையிலும் கூட உடல் உறுதியுடனும் மன உறுதியுடனும் தன் கடமைகளை செய்து வந்தார். அதிகாலை எழுந்து தன் கடமைகளை முடித்த பின் பூசை அறையில் பக்தி மயமாக கீர்த்தனைகளைப் பாடுவதில் ஈடுபடுவார். பின்னர் தன் ஓய்வு நேரத்தில் அக்கறையோடு செய்து வரும் வீட்டுத் தோட்டத்தில் நாட்டப்பட்டு பயன் தரத்தயாராகியுள்ள செடி வகைகளுக்கு நீர் ஊற்றி அவ்வேலைகளை செய்வதில் பெரு விருப்பம் கொண்டவராய் இருந்தார். வீட்டுத்தோட்டத்தில் இருந்து கிடைக்கும் காய்கறி வகைகளில் தம் வீட்டு தேவைக்கும் மிஞ்சியவற்றில் சந்தைக்கும் கொண்டு சென்று விற்பனை செய்து அதன் வருமானத்தை ஆலயங்களுக்கு கொடுப்பதிலும் ஏழைகளுக்கு வழங்கி மகிழ்வார். ஆலயங்கள் இவர் மீது அன்பும் அபிமானமும் உள்ளவர்களாக இருந்தார்கள்.

பரீட்சைக் காலம் அண்மித்து விட்டது. பரீட்சை நேரசூசியும் வந்துவிட்டதாக பேரப்பிள்ளைகள் பேச்சில் இருந்து அறிந்து கொண்டார் அன்றைய தினம் வார இறுதி நாளாகும்.

பரீட்சைக்கான தம்மை தயார் செய்ய வேண்டிய யதுவும் செந்தூரியும் எந்தவித சலனமும் இல்லாமல் அடுத்தடுத்து வந்து கொண்டிருக்கும் தொடர் நாடகங்களைப் பார்த்து விமர்சனம் செய்து கொண்டிருந்தனர்.

இதனை பார்த்துக் கொண்டிருந்து வாத்தியாரின் பொறுமை எல்லை மீறியது. தன் மனதுக்குள் சிந்திக்கலாயினர். இந்தப்பிள்ளையள் எப்படி முன்னேற்றமாய் வாழப்போகுதுகள். எந்தக்கட்டுப்பாடும் இல்லாமல் வளர்ந்து ஊர் சிரிக்க வைக்கவும், என்ர பேரப்பிள்ளையள் எண்ட அவமானமும் எனக்கு வரும் தானே. வருவது வரட்டும். இதுக்கு ஒரு முடிவு காணத்தான் வேண்டும்.

இருவரும் படிக்கிற பிள்ளையள் மாதிரிக் காணேல்ல நாளைக்கு பரீட்சையில் வினாக்கள் 'ரீவி' நாடகத்தை பற்றித்தான் வரப்போகுதோ? ரீவியை நிப்பாட்டுங்கோ. எழும்பிப் போய்ப் படியுங்கோ.

என்று அதட்டும் குரலில் கூறினார். செந்தூரி உடன் எழுந்து அறைக்குள் படிக்கப் போயிட்டாள் யதுவோ கோபத்தோடு முறைத்துப் பார்த்த வண்ணம் போய் ரீவியின் சத்தத்தைக் கூட்டி விட்டான். பொறுமையிழந்த செல்லையா மாஸ்ரர் கோபத்தோடு கையை ஓங்கியபடி அவன் அருகே சென்றார். கணப்பொழுதில் நிலைமை மாறியது.

யது- சனியனே எங்கட விடயத்தில் தலை போடாதை என்று சொன்னால் கேட்கமாட்டாயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாரெண்டு தள்ளிவிட்டான் நிலைதடுமாறி நிலத்தில் விழவும் இதை அவதானித்த

செந்தூரி- என்னடா வேலை செய்தாய் என பளார்..பளார் என இரு கன்னத்தில் அறைந்தாள்

வீடு போர்க்களமாய் மாறியது. இந்த நேரம் வந்த ராஜா தன் மகன் கன்னத்தில் பதித்த கைவிரல் அடையாளத்தைப் பார்த்தும் ஒரு விசாரணையும் இல்லாமல் செந்தூரியைத் தாக்கவும் நிலைமை மோசமடைய செந்தூரி ஒப்பாரி வைத்து ஓலமிட்டாள். தன் தகப்பனாரால் தான் இந்த நிலை ஏற்பட்டதென முடிவு கட்டி தந்தையை வாய்க்கு வந்தபடி ஏசினான். நான் இதுக்கு ஒரு முடிவு கண்டேயாக வேண்டும். திடீரென்று தன் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாக சென்றான் ராஜா. எங்க போனான் என்று யாருக்கும் புரியவில்லை மறுநாள் காலையில் சர்வமத தலைவர்களின் ஒழுங்கமைப்பில் இயங்கிக் கொண்டிருக்கும் “வெற்றியின் கரங்கள்” வயோதிபர் காப்பகத்துக்காக ஓடிக்கொண்டிருக்கும் ‘ஹயஸ்’ வாகனம் ராஜா வீட்டு வாசலில் வந்து நின்றது. நிலைமையை எல்லோரும் புரிந்து கொண்டனர். செந்தூரி விக்கி விக்கி அப்பப்பா...அப்பப்பா... என அழத்தொடங்கினாள். யது ஏதும் பேசாமல் தன்பாட்டில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தான். ராஜா துளசியை அழைத்தான்.

“எங்கட அப்பாவுக்கு இஞ்சை இருக்கச் சரிவராது. அவரை “வெற்றியின் கரங்கள்” வயோதிபர் நிலையத்திற்கு அனுப்ப எல்லா ஒழுங்குகளும் செய்து விட்டேன். நீ....ஏதும் பேசாது அவரது உடைமைகள் எல்லாவற்றையும் கொடுத்து அனுப்பி வை.

ஐயா! உங்களைப்பிரிந்து என்னால் நிம்மதியாக வாழ முடியுமா? எனக்கு அம்மாவாய்.. அப்பவாய்.. ஆசானாக இருந்த என் அன்புத்தெய்வமே.. மாமாவைக் கட்டிப்பிடித்து அழுதாள் கணவனின் கட்டுப்பாட்டை மீற முடியா நிலையில் அனலிடைப்பட்ட புழுவாய்த் துடித்தாள்.

அழுகுரல் மத்தியில் கனத்த உள்ளத்தோடு ஓய்வில்லா ஓய்வூதியர் செல்லையா வாத்தியார் சொர்க்கம் நோக்கி “வெற்றியின் கரங்கள்” காப்பகத்திற்கு போய்க் கொண்டிருந்தார்.

அன்று மாலை நேரம் செல்லையா மாஸ்ரரின் அருமை பெருமைகளை தெரியாதவனாய். உணராதவனாய் பெரிய காரியம் செய்து விட்ட புன்முறுவலோடு வீடு வந்து சேர்ந்தான்.

வீட்டில் மயான அமைதி நிலவியது. நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. ராஜா வீட்டுப்பூசை அறையில் தினம் தினம் கேட்டுக்கொண்டிருந்த புனித கீர்த்தனைகள் ஒலி அடங்கிப் போய்விட்டது. தூப நறுமணம் ஓய்ந்த நிலையில் வீட்டின் நறுமணம் ஓய்ந்த நிலையில் வீட்டின் பிரகாசமே மங்கிக் கொண்டிருந்தது. வாத்தியார் அரும்பாடுபட்டு பெற்று வளர்த்த காய்கறிச் செடிகள் நீரின் கவனிப்பாரின்றி வாடி வதங்கிக்கொண்டிருந்தது. ஒரு சில நாட்களில் தந்தையின் பிரிவால் வாடி வெதும்பி வெதும்பி நூலாய் இழைத்துவிட்டாள். ஒட்டுமொத்தத்தில் தான் எடுத்த முடிவில் தாக்கத்தை உணரத் தொடங்கினான். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பதை உணர்ந்து கொண்ட ராஜா.

வீடு சோபையிழந்த நிலையில் பிள்ளைகளும் கவனிப்பாரற்று. கட்டுப்பாடற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்வதை முதன் முறையாக உணர்ந்தான். தன் மனைவி துளசியை அன்போடு அழைத்து தான் விட்ட பிழைகளை உணர்ந்து கொண்டதாகவும் தன்னை மன்னிக்கும் படியாகவும் மண்டியிட்டான். மகிழ்ச்சி பொங்க இருவரும் ஒரே முடிவை எடுத்துக்கொண்டு பிள்ளைகளுடன் தந்தையாரிடம் மன்னிப்புக்கோரி அழைத்து வரப்புறப்பட்டனர்.

ராஜா துளசி ஆகியோர் காப்பகத்திற்கு சென்று உரிய அனுமதியைப் பெற்று அங்கே உள்ளே சென்றனர். அவர்கள் கண்ட காட்சி கனவா நனவா என்று எண்ண வைத்தது.

காப்பகத்தில் செல்லையா மாஸ்ரர்
அன்பான ஆண்டவா அருளை அள்ளித் தா
அமைதியான வாழ்வு வாழ வழியைக் காட்டித் தா
அமைதி வேண்டுமே மன அமைதி வேண்டுமே
கருணை நிறைந்த கடவுள் எம்மை காக்க

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பல வயோதிபர்களுக்கு தலைமை தாங்கி ஆனந்தம் பொங்க சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

அங்கே சர்வ மதத் தலைவர்கள் ஒன்று கூடி நிற்கின்றனர்.

வணக்கம் மதத் தலைவர்களே என்று கூறி எமது தந்தை எமது வீட்டிற்கு அழைத்துச் செல்ல வந்திருக்கின்றோம் என ராஜா கூற

இந்துக்குருக்கள் : அங்கே சர்வ மதப்பாடல் கேட்கிறதா உங்கள் அப்பா தான் ஏனைய முதியவர்களுக்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்.

ராஜா : அப்பா இவ்வளவு ஆனந்தமாகவும் அந்நியோன்னியமாகவும் இருக்கிறார். அன்று காப்பகம் கூட்டி வந்து விடும் போது அப்பாவுடன் நீங்கள் எல்லோரும் தெரிந்தவர் போல் கதைத்தீர்கள் இவரை முதலில் உங்களுக்கு தெரியுமா? எனக்கு உண்மையைச் சொல்லுங்கள் என்று மதகுருமார்களின் காலடியில் விழுந்து கதறினான்.

கிறிஸ்தவ பாதிரியார் : அது ஒரு பெரிய பயண நெடுந்தொடர் அன்று ஒருநாள் காலைப் பொழுது செல்லையா மாஸ்ரரும் மனைவி காமாட்சியும் எமது காப்பகம் வந்தார்கள்

செல்லையா- இல்லை மத குருமார்களே வணக்கம் எனது பெயர் செல்லையா நான் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றுகின்றேன். இவர் எனது மனைவி பெயர் காமாட்சி. நாங்கள் இருவரும் திருமணம் செய்து பல வருடங்களாக பிள்ளைச் செல்வங்கள் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கின்றோம் எங்களுக்கு பின்னால் ஒரு வாரிசு இல்லையே என்பது தான் எமக்கு பெரிய கவலை அதை போக்க தான் உங்களிடம் வந்தோம்

குருக்கள்- நாங்கள் என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள் தாராளமாக செய்கின்றோம் உங்கள் குறைகளைப் போக்கத் தானே நாம் சர்வ மதத் தலைவர்களாக இணைந்து வெற்றியின் கரங்கள் என்னும் பெயரில் காப்பகத்தை அமைத்து பல பணிகள் ஆற்றி வருகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையா - பிள்ளைச் செல்வங்கள் இல்லை என்ற குறையைப் போக்க தங்கள் காப்பகத்திலிருந்து ஒரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்க விரும்புகின்றோம்.

மௌலவி - நல்ல விடயம் தானே எமக்கு விருப்பம். எமது காப்பகத்தில் பல அநாதைச் சிறுவர்கள் இருக்கிறார்கள் அவர்களில் ஒருவரை நீங்கள் தத்தெடுத்து வளர்க்கலாம்

பிக்கு : சிஸ்ரர் நேற்றுக் காலை எமது காப்பகத்திற்கு வந்த ராஜா என்ற குழந்தையை எடுத்து வாருங்கள் அந்தக் குழந்தையை செல்லையா மாஸ்ரர் அவர்களிடம் கொடுங்கள்

செல்லையா மாஸ்ரர் காமாட்சி இருவரும் மதகுருமாரின் காலடியில் விழுந்து நன்றிகளை தெரிவிக்கின்றனர். நன்றி குருமார்களே நன்றி தலைவர்களே

நன்றி சொல்லி ராஜா என்ற குழந்தையை அன்போடு அரவணைத்துக் கொண்டு சென்றனர்.

இப்படி வளர்ந்து படிச்சு எக்கவுண்டனாகி துளசியை திருமணம் செய்து செந்தூரி யதுசனன் ஆகிய இரு பிள்ளைகளையும் பெற்று இன்று எம் முன்னே காட்சி தருகின்ற ராஜா என்று பிக்கு கூற

ராஜா- அட கடவுளே. அநாதையாக இருந்த என்னையா அப்பா தத்தெடுத்து வளர்த்து வந்தார். அப்பா என்னிடம் எவ்வளவு தூரம் அன்பு செலுத்தினார். ஆனால் அதை அறியாமல் அவரை நான் அநாதை ஆக்கிவிட்டேனே. கடவுளே என்னை மன்னித்துக்கொள்ளும்

இல்லை இல்லை அப்பாவை நான் திரும்பவும் என் வீட்டுக்கு அழைத்துப் போகவேண்டும். என் வேலை என் மனைவியின் வேலை மகளின் படிப்பு என்பவற்றின் சுமைகளினால் தந்தையை முதியோர் இல்லம் அனுப்பினேன். ஆனால் எனது வேலைப்பளுவுக்கு மத்தியிலும் தந்தையை என்னுடன் இருத்தி, அவரை இறுதிக்காலம் வரைக்கும் அன்பாக பராமரிக்க வேண்டும்.

செல்லையா மாஸ்ரர்- சட்டத்தின் பிடியில் நின்று ஊரெல்லாம் நல்லதையே செய்து நல்லபடி வாழ வழிகாட்டிய கட்டை இது. இந்த வைரமேறிய கட்டையை உங்கள் கோடரியால் பிளக்க முடியாது. நீங்கள் சென்று வரலாம். எனக்கு இங்கு நீண்ட பணி காத்திருக்கு போய் வாருங்கள். மகனே என்னை கஸ்டப்படுத்தாதே. நான் இங்கு சந்தோஷமாக இருக்கிறேன். மனிதத்தின் தேடல் அது ஆன்மீகமாகத்தான் இருக்கவேண்டும். அது இங்கே இருந்துதான் செய்ய முடியும்

முன்னொரு காலத்திலே காப்பகத்தில் இருந்த பிள்ளைகளை மூத்தோர்கள் தத்தெடுத்து வளர்த்தனர். ஆனால், இப்போதைய தலைமுறையினர் தமது தாய் தந்தையர்களை காப்பகத்தில் கொண்டு வந்து சேர்க்கின்றனர். இதுவே **“மாறும் காலங்கள்”** என எண்ண வைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரசூசி

திருமதி மாலாதேவி மதிவதனன்
மங்குனியன்வளவு,
அளவெட்டி மத்தி.

**மூன்றாமிடம்**

இறுதிப்பாடவேளை நிறைவடைந்ததை அடித்து ஓய்ந்த மின்சார அலாரம் நினைவூட்டியது. வழமையாக வெள்ளைச் சீருடையில் வீட்டை நோக்கிப் பறக்கும் மாணவர் போல் வெளியேறத் துடித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் மாறாக ஒன்றுகூடல் மண்டபத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர். "என்ன மாலினி மிஸ் முகம் வாடிப்போய்க்கிடக்கு" என்று நலம் விசாரித்த சக ஆசிரியை நிமிர்ந்து நோக்கினார் மாலினி ரீச்சர் "ஓமடா இண்டைக்கு கந்தசட்டி பாறணை வேளைக்கு எழும்பி சமைச்சுப் போட்டன் எண்டாலும் சாப்பிட நேரம் காணாது. அடிச்சுப் பிடிச்சு எழு மணிக்கு பஸ் ஏறிட்டன் வீட்ட போய் ஆறுதலாம் சாப்பிடுவம் என்று இருந்தால் இந்த அதிபர் பள்ளிக்கூடம் விட்ட பிறகும் கூட்டம் எண்டு அறிவிச்சுப் போட்டார். அதுதான் பசிக்களை கன்ரீனும் இப்ப பூட்டிப் போடுவினம்" என சலித்துக் கொண்டார். ஓம் மிஸ் நானும் மகனை ரியூசனுக்கு கொண்டு போய் விட வேணும். போக ஏலாதுதானே ஓட்டோக்கு போன் பண்ணி சொன்னனான் ஒருக்கால் கூட்டிக் கொண்டு போய் விடச் சொல்லி தன் மனக் கவலையையும் சேர்த்துச் சொன்னார். ரதி ரீச்சர் வீட்ட போனால் வில்லங்கம் என்பவர்கள் முகங்களில் மட்டும் சந்தோஷ பூக்கள் நிறைந்து கிடந்தது. குறித்த நேரத்தில் எல்லோரும் ஒன்று கூடவே அதிபர் எழுந்து கூட்டத்தை ஆரம்பித்தார்.

எல்லோருக்கும் இனிய வணக்கம் எதிர்வரும் புதிய ஆண்டிற்கான பாட நேரசூசி தயாரிக்க வேண்டிய காலப்பகுதியில் நாம் இருக்கின்றோம். எதிர்வரும் வியாழக்கிழமை போயா விடுமுறை தினம் என்பதால் அன்றைய தினம் அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாக இந்தப்பணியில் இணைந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கின்றேன். இது தொடர்பாக தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை பகிர்ந்து கொள்ளலாம்" என வினயமாகக் கேட்டுக் கொண்டார். "ஏன் சேர் வழமை போல நீங்களும் நாலைஞ்சு பேரும் சேர்ந்து போடுங்கோவன்" குரல் வந்தது. கூறியது யாரென இனங்காண முடியவில்லை. "சேர் கன எலி சேர்ந்தால் புத்துக்கு மண் எடுக்கேலாது".... "லீவு வாறதே கொஞ்சம் சேர் அண்டைக்கும் பள்ளிக்கூடம் வாறதெண்டால்..." யாரோ இழுத்தார்கள். சபை சிறிது நேரம் சலசலப்பாகி அடங்கியது. எல்லோரது அபிப்பிராயங்களையும் ஆழமாக செவிமடுத்த உப அதிபர் தனது இருக்கையில் இருந்து எழுந்தார். பாடசாலைக்கு அதிபர் தந்தை போல என்றால் உப அதிபர் தாயார் போல தந்தை சற்று கண்டிப்பாக நடந்து கொண்டாலும் தாயார் பலதும் பத்தும் யோசித்து கொஞ்சம் அன்பாக நடந்து கொள்வது வழமை தானே. உப அதிபர் எழுந்ததும் அனைவரும் அமைதியானார்கள்..." அன்பான ஆசிரியர்களே மாற்றம் ஒன்றே மாறாதது. எனவே, நான் வழமை போல இல்லாமல் இம்முறை அதிபர் அவர்கள் எல்லோருமாக சேர்ந்து இந்தப் பணியை முன்னெடுப்பது என முடிவு செய்துள்ளார். பாட வேளைகளை தீர்மானிக்கும் போதும், வகுப்பாசிரியர்களை நியமிக்கும் போதும் அனைவரது ஆலோசனைகளைப் பெற்று சிறந்த முறையில் தூரநோக்குடன் நேரசூசியை அமைத்துக் கொள்வது எதிர்வரும் ஆண்டை எமது மாணவர்களுக்காக சிறந்த முறையில் எதிர்கொள்ள முடியும். அதே வேளை எல்லா துறைகளிலும் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள உறுதுணையாக அமையும். சிறந்த அடைவு மட்டத்தை அடையும் போது அதன் பெருமை அனைவரையும் சேரும். இப்பாடசாலையில் ஒருவராக இருப்பதனையிட்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். இதற்கு நல்ல உதாரணம் சென்ற வருடம் வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் பல பரிசில்களைப் பெற்று எமது கோட்டத்திற்கு பெருமை சேர்த்துக் கொண்டோம். அதற்காக ஆசிரியர் தினத்தன்று கோட்டக் கல்வி அதிகாரியால் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் பாராட்டப்பட்டோம். அந்த விளையாட்டுப்போட்டிக்கு அனைவரினதும் பூரண பங்களிப்பு இருந்தமை யாவரும் அறிந்ததே. வெறுமனே விளையாட்டுத்துறை ஆசிரியர் மட்டும் தனித்து செயற்பட்டு அந்த வெற்றியைப் பெற்றிருக்க முடியாது. மேலும் இவ்வருடம் தீபாவளிக்கு முதல் நாளும், நவராத்திரி வீட்டுப்பூசையன்றும் கௌரி நோன்பு இறுதி நாளன்றும் அதிபர் தனது தற்றுதுணிவின் பேரில் ஒன்றரை மணி நேரத்துக்கு முன்னதாக பாடசாலையை மூடி அனைவருக்கும் சலுகை வழங்கினார் என்று நான் கூறி நீங்கள் தெரிய வேண்டிய அவசியமில்லை. எனவே, இந்த விடுமுறை தினத்தில் சில மணித்தியாலங்கள் நாம் பாடசாலையில் செலவிடுவதன் மூலம் எமது மாணவர்களை எதிர்காலத்தில் ஒரு சிறந்த பிரஜைகளாக்க முன் திட்டமிடல் மேற்கொள்வோம் என்பது எனது தாழ்மையான கருத்து" என அவர் நிறைவு செய்ய ஒருமித்த பலத்த கரகோசம் அனைவரினதும் சம்மதத்தை வெளிப்படுத்தியது. உப அதிபர் தனது நன்றி கலந்த பார்வையால் விடை பெற்றுக் கொண்டார்.

போயா விடுமுறை தினத்தன்று பாடசாலை நாள் போல அனைத்து ஆசிரியர்களினதும் வருகை அதிபருக்கு மிகவும் மகிழ்வைத் தந்தது. "இளைய தலைமுறையினரின் நல்ல சிந்தனையுடனான சமூக மாற்றத்தினை ஏற்படுத்துவதில் இந்த சமூகத்தின் பங்கேற்பே இந்த முழுமையான வருகை என்பதையிட்டு அனைவரும் தம்முள் பெருமை கொண்டனர். பிரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் கலந்துரையாடலை ஆரம்பிக்கவும் உப அதிபர் ஏலவே தற்காலிகமாக தயாரிக்கப்பட்ட நேரசூசியின் போட்டோப்பிரதியை அனைவருக்கும் வழங்கினார். "பூரணமான நிரந்தர நேரசூசியை எல்லோருடனும் கலந்தாலோசித்து தயாரிப்பது கால தாமதத்தை ஏற்படுத்தும் என்பதால் தற்காலிக நேரசூசியை தயாரித்துள்ளோம். அதனை வைத்துக் கொண்டு உங்கள் பாடங்கள், பாடவேளைகள் போன்றவற்றை பரிசீலனை செய்து தங்களது கருத்துக்களை முன் வையுங்கள்" என அதிபர் கேட்டுக் கொள்ளவும் தமிழ் கந்தையா வாத்தியார் குரலை செருமிக் கொண்டு எழுந்தார். "தம்பியவை என்ர பாடம் தமிழ் உங்களுக்கு நல்லாத் தெரியும். அதைக் கொண்டு போய் இந்தப் பெரிய பெடியங்களுக்கு பின்னடிக்கு போட்டுக்கிடக்கு. பசிக்களையில அவங்கள் பாடத்தை கவனிக்க மாட்டாங்கள் தமிழ் எங்கட தாய்மொழி பாருங்கோ, பசு மரத்தாணி போல பதிய வைக்க வேணும். அவங்கள் மேல் வகுப்பு படிக்க தமிழும் கட்டாய பாடமல்லோ. அப்ப அவங்கட பாடத்தை முன்னுக்காய் போட்டு விடுங்கோ அவ்வளவும் காணும் சிறப்பு"....அமர்ந்து கொண்டார். "மதி சேர் தரம் ஒன்பது, பத்து தமிழ் பாடத்தை முன்னுக்கு போடுங்கோ" அதிபரின் அறிவுறுத்தலை கேட்டு உடனடியாக போட்டு மாற்றம் செய்தார் மதி சேர். கந்தையா வாத்தியாருக்கு வலு புழுகம்.

கந்தையா வாத்தியார் இன்னும் ஆறு மாதத்தில் பென்ஷன் எடுக்கப் போறார். அப்படி இருந்த போதும் அவரது மாணவர் மீதான அக்கறை அனைவரினதும் மனதைத் தொட வைத்தது. மூத்தவர்களும் இந்த சமூகத்தின் அங்கத்தவர்களே. அவர்களது அனுபவங்கள் போல சிறந்த வழிகாட்டி ஏதுமில்லை. இளைய தலைமுறையினரை வளர்த்தெடுப்பதில் அவர்கள் வகிபாகம் நிச்சயமாக காத்திரமானதாக இருக்கும். பாடசாலையில் எந் நிகழ்வாயினும் கந்தையா வாத்தியார் தான் எனும் அளவிற்கு தமிழில் சிறந்த சொற்பதங்களை கோர்வையாக்கி ஒவ்வொருவராக வரவேற்று மகிழ்வார். தமிழ் அவரது நாவில் கொஞ்சி விளையாடும். விருந்தினர்கள் அவர் தம்மை எவ்வாறு விழித்துக் கூறி வரவேற்பார் என ஆவலோடு எதிர்பார்த்துக் காத்து இருப்பார்கள். தமிழ்த்தின விழா கந்தையா வாத்தியார் தலைமையிலேயே நடைபெறும். அக்காலப்பகுதியில் பாடசாலை தமிழால் அழகு பெறும். கலை, கலாசார பண்பாடு என தமிழின் பெருமையினை விதவிதமாக வெளிப்படுத்தி நிகழ்வை நெறிப்படுத்துவார்.

கந்தையா வாத்தியாரது நினைவுகளில் மூழ்கிப் போயிருந்த சபையை ரமணி ரீச்சரின் இனிமையான வெள்ளைக்காரன் இங்கிலீஷ் வார்த்தைகள் இழுத்து எழுப்பின. சேர் நான் இங்கிலிஷ் பட்டதாரி. என்னை ஏன் "சீ" கிளாசிற்கு போட்டிருக்கு எனக்கு "ஏ" கிளாஸ் போட்டுத் தாங்கோ பிளீஸ்"

"ஓம் மிஸ் நீங்க சொல்றது சரி. "ஏ" வகுப்பு பிள்ளையள் கொஞ்சம் கெட்டிக்காரர். அவங்களுக்கு யார் சொல்லிக் கொடுத்தாலும் சரி பிடிச்சிடுவாங்கள். ஆனால் "சி" வகுப்பு பிள்ளையளுக்கு உங்களைப் போல ஆர்ட் ஒவ் ரீச்சிங் தெரிஞ்சவை தான் நல்லம். அப்பதான் மிஸ் "எஸ்" ஆவது எடுத்து பாஸாவாங்கள். அதோட நீங்கள் மாலை நேர மேலதிக வகுப்புகளும் போட்டு எடுக்கிறனீங்கள்" என்று சொல்லவும் தனது மேலதிக வகுப்புகள் தொடர்பாக அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனித்து இருப்பதனை அறிந்த மகிழ்வில் ரமணி மிஸ் புன்முறுவலுடன் அமர்ந்து கொண்டார். அதிபர் சபையை கண்களால் ஆராய்ந்தார். "என்ன கலா ரீச்சர் முகம் நல்லா இல்லை என அதிபர் துளாவவும் கலாரீச்சர் எழுந்து கொண்டார். "ஒன்றுமில்லை" என்றவரை "இல்ல மிஸ் ஏதோ இருக்கு சொல்லுங்கோ.." "இல்ல இல்ல சேர் ஏன் சேர் என்னுடைய பாடவேளை மிகவும் குறைவாக போட்டிருக்கீங்க, சமயபாடம் என்றா? இப்படி குறைஞ்ச பாடவேளை போட்டால் பரீட்சைக்கு மட்டும்தான் படிப்பிக்க முடியும். சமய பாடத்தை வாழ்வியலோடு இணைக்க வேணும். அப்பதான் எங்கட பிள்ளையள் ஆன்மீக சிந்தனையுடன் நெறிதவறாமல் ஒழுக்க சீலர்களாக வாழ முற்படுவார்கள். 'ஒழுக்கம் இல்லாத கல்வி பாழ்' ஏனைய பாடங்களை விட குறைந்த பருமனான கொப்பிகளை மாணவர்கள் சமய பாடத்திற்கு வாங்குவார்கள். நீங்களும் பாடவேளைகளை குறைச்சுப் போடுவீங்கள்" என அழாக்குறையாக கேட்டுக் கொண்டார். "எனக்கு வாரத்திற்கு பத்து பாடவேளை ஓய்வு போட்டிருக்கு முழுப்பாட வேளையையும் நிரப்பி விடுங்கோ சேர் கலாரீச்சரின் ஆதங்கத்தை புரிந்து கொண்ட அதிபர் "சரி மிஸ் உங்களுக்கு வாரத்திற்கு ஒருபாடவேளையாவது ஓய்வு தேவைதானே, மிகுதி ஐந்து பாடத்தையும் போட்டு நிரப்புவம்...." "இல்லை சேர் எனக்கு ஓய்வு தேவை இல்லை. சமய பாடத்திற்கு உடலுழைப்பு அதிகம் இல்லை. என்னால் இயலும் முழுப்பாடவேளையையும் நிறைவுபடுத்துங்கோ. கலா ரீச்சர் பிடிவாதமாக இருந்தார். "கல்விசார் நிர்வாக கொள்கை இருக்கு மிஸ் ஆசிரியர்களுக்கும் ஓய்வு தேவைதானே" என இழுத்த அதிபரின் தொனியை அதிரடியான கலாரீச்சரின் கருத்துகள் கலங்கடித்தன. "ஓம் சேர் நிர்வாகம் கொள்கை சுற்று நிருபம் என்று எல்லாரும் சொல்லிக் கொண்டிருந்தால் யதார்த்தை உணர்ந்து செயற்படுத்துவது யார்? நான் தயாராக இருக்கிறேன் எனது செயற்திறனை பயன்படுத்த முடியாத கொள்கைகள் எதுக்கு சேர். நாளைக்கே சமய பாடம் பாடசாலைக் கல்வியில் அவசியமில்லை என்னும் கொள்கை வகுக்கக் கூடும். விட்டுவிட முடியுமா? மைக் எடுக்கிறவன் எல்லாம் யாழ்ப்பாணத்துப் பிள்ளைகள் சமூகம் அழியுது அழியுது என்று கத்த முடியுது. ஆனால் அதற்கான காரணங்களை அறியவோ மாற்று வழியை தேடவோ யாரும் முன் வாறதில்லை மேடைப் பேச்சோட எல்லாம் சரி. சமயத்தை பாடமாக இல்லாமல் நாளாந்த நடைமுறையோட சொல்லிக் கொடுக்க வேணும். சிலபஸ் முடிச்சால் போதும். என்று சமயம் படிப்பிக்க முடியாது. அதுக்கும் மேல புராண இதிகாச கதைகளை பிள்ளைகளுக்கு எடுத்துக் சொல்லிக் கொடுக்க வேணும் என்றால் பாடவேளைகள் கூட்டத்தான் வேணும் சேர்" கலா ரீச்சரின் வாதம் எல்லோருக்கும் நியாயமாகத் தென்படவே அவரது அனைத்து பாட வேளைகளும் நிரப்பப்பட்டது.

கலா ரீச்சர் அமரவும் காந்தன் சேர் மெதுவாக எழுந்து கொண்டார். நான் நெடுந்தீவில் இருந்து படகில் யாழ்ப்பாணம் வந்து வாறனான். பின்னேரம் கடைசி வள்ளத்தை பிடிப்பதற்காக சோட் லீவிலும் காவ்டேயிலும் அனேகம் போறதால கடைசிப் பாட வேளைகள் எடுக்க முடிவதில்லை. அதால பிள்ளைகளுக்கு நஷ்டம்தான். அதனால எனது ஓய்வுப்பாட வேளைகளை கடைசிப்பாடமாக போட்டால் பிள்ளைகள் பாதிக்கப்படுவது தவிர்க்கப்படலாம். என்பது எனது தாழ்மையான கருத்து என்றார். "ஓமோம் உங்களுக்கு போக்குவரத்து சிக்கல் புரியுது சரி செய்றம். நீங்கள் கொஞ்சம் முன்னதாகவே செல்வது பிள்ளைகளின் கல்விக்கு இடையூறாக இருப்பது அவதானிக்கப்பட்டது. தான் அடுத்த வருடத்தில் அந்த சிக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்காது. நல்லது என்றார் உப அதிபரால் சிற்றுண்டியும் தேனீரும் பரிமாறப்பட்டது. மீண்டும் அனைவரும் புத்துணர்ச்சியுடன் நேரசூசி தயாரிப்பதில் இணைந்து கொண்டனர்.

நாடக ஆசிரியை மிக நளினமாக எழுந்து சுற்றும் முற்றும் இருந்த ஆசிரியர்களை ஒருகணம் நோக்கி விட்டு "வந்து சேர் வந்து".. "சொல்லுங்கோ"... "பெரிய வகுப்புகளுக்கு என்னை போட்டிருக்கு. ரவி சேர் சின்ன வகுப்புகளுக்கு நாடகம் எடுக்கிறார். ஓ எல்லுக்கு நாடக செயன்முறைப் பரீட்சை இருப்பதால் பெரிய வகுப்பு பிள்ளையளுக்கு முன்னால் நான் நடித்துக் காட்ட அவங்கள் சிரிக்கிறாங்கள் சேர். அதால நான் நடித்துக் காட்டுவது குறைவு. நோட்ஸ்தான் கூட குடுக்கிறன். பிறகு சோதனைக்கு அவங்களான நல்ல முறையில செயன்முறை செய்ய முடியாமல் போய்விடும். ரவி சேரிட்ட பெரிய வகுப்பு நாடகப்பாடத்தை மாத்திக் குதித்தால் நல்லம் என்று நினைக்கிறன். எனக்கு நோட்ஸ் கொடுப்பது பெரிய விடயமல்ல அவர்களது எதிர்காலம் பாதிக்கப்படக்கூடாது அதுதான்...." "நான் மாறி எடுக்கிறன் சேர்" என ரவி எழுந்து சொல்லவும் விடயம் இலகுவாயிற்று.

"என்னுடைய விடயம் இல்லாவிட்டாலும் சொல்ல வேண்டியது எனது கடமை. மஞ்சுளா மிஸ் 'கண்சீவாக' இருப்பதால் அடுத்த வருடம் ஒஎல் வகுப்பிற்கு அவங்களை போட்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல. நாலுமாதம் லீவு எடுத்தால் பதில் ஆசிரியரைப் போட்டு பிள்ளைகளை குழப்பாமல் இப்பவே நிரந்தரமாக ஆசிரியரைப் போடுவது நல்லம். அவ வெட்கத்தில் பேசாமல் இருக்கிறா. என்ன மஞ்சு மிஸ் உண்மைதானே" என மூத்த ஆசிரியை போட்டு உடைக்கவும் மஞ்சுளாவின் மஞ்சள் முகம் சிவந்து செம்மஞ்சளானது. "இதிலென்ன வெட்கம் சந்தோஷ மான விடயம்தானே. திருமணமாகி நீண்ட நாட்களுக்குப் பின் மஞ்சு ரீச்சருக்கு குழந்தைப் பாக்கியம் கிடைத்திருப்பது எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சி தருகிறது. எல்லோர் சார்பிலும் வாழ்த்துக்கள். அத்தோட அவங்களோட பாடவேளைகளையும் குறைச்சு மாத்தி போடுங்க மதி சேர்" மஞ்சுளா மிஸ் தனது நன்றி கலந்த பார்வையால் அதிபருக்கு மரியாதை செய்தாள்.

ஒருவாறு அனைவரினதும் பாடங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு நேரசூசி முழுமை பெறும் தருணத்தில் நூலகத்திற்கு பொறுப்பான சாந்தி ரீச்சர் எழுந்தார். சேர் ஒரு தாழ்மையான விண்ணப்பம்" என்று ஆரம்பித்தார். "சொல்லுங்கோ" என்ற அதிபரின் பதிலைத் தொடர்ந்தார். சாந்தி, "எங்கட பிள்ளைகள் இப்ப நூலகத்தை உபயோகிக்கின்ற அளவு மிகவும் குறைவடைந்துவிட்டது. ஆனால் நிறைய நல்ல விலைமதிப்பான புத்தகங்களை திணைக்களம் வருடாவருடம் அனுப்பிக் கொண்டிருக்கிறது. பல புத்தகங்கள் ஒரு தடவை கூட திறக்காமல் இருக்கின்றன. அதனால் கட்டாயமாக வாரம் ஒரு பாட வேளையாவது நூலகக்கல்விக்கு ஒதுக்க வேண்டும். பாடவேளை இல்லாதுவிடில் பாடசாலை நேரத்தின் பின் ஒரு மணித்தியாலம் நான் தங்கி நிற்கத்தயார். அவ்வேளைகளில் நூலகத்தை கட்டாயமாக பயன்படுத்த மாணவர்களை வழிப்படுத்த வேண்டும். "நூல்கள் சிறந்த நண்பர்கள்" வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்றெல்லாம் சுவரில் எழுதி வைத்துள்ளமை வீண். வாசிப்புதான் அறிவுத் தேடலுக்கு நல்ல தீனி போடக்கூடியது. இதெல்லாம் நான் உங்களுக்கு சொல்லத் தேவையில்லை. "ஓம் சாந்தி எனக்கு புரியுது மதி சேர் குறிச்சுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுங்கோ என்று அதிபர் கூறவும் அவரது செல்பேசி சிணுங்கியது. இது இன்றைக்கு இவ்வளவு நேரம் அமைதியாக இருந்ததே பெரிய விடயம் என்றபடி கையில் எடுத்தார். ஓ... டிப்பர்ட்மென்ற் நம்பர் - லீவு நாளிலா .. அவர்களும் வேலை செய்கிறார்கள் போல... ஹலோ! ஓம் நான் அதிபர்தான் கதைக்கிறன்... ஓமோம் நவநீதன் தமிழினி எங்கட பிள்ளைதான் ஓ... அப்படியா மிக்க மகிழ்ச்சி தகவலுக்கு நன்றி. ஓ.கே ஓ.கே முயற்சி திருவினையாக்கி இருக்கு எங்கட கந்தையா மாஸ்ரர்தான் கோச் பண்ணினவர் நன்றி நன்றி..

எல்லோரும் ஆவலோடு அதிபர் என்ன சொல்லப் போகிறார்... என எதிர்பார்க்கையில் அதிபர் எழுந்து வந்து கந்தையா வாத்தியாரைக் கட்டித் தழுவினார். சேர் தமிழினிக்கு கட்டுரைப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் கிடைச்சிருக்காம். எல்லாப் புகழும் உங்களுக்கே என் கையில் ஆனந்தக் கண்ணீர் அவர் விழிகளில் இருந்து வீழ்ந்து கந்தையா வாத்தியாரின் கைகளை நனைத்துக் கொண்டன. "ஒரு கிராமத்தின் மூலையில் இருக்கிற வசதிகள் குறைந்த பிள்ளைகள் அனேகம்பேரைக் கொண்ட பாடசாலைக்கு தேசியத்தில் முதலிடம். ஆசிரியர்கள் சிலர் சேர்ந்து கந்தையா வாத்தியாரை தோளில் தூக்கி சிறுவர்கள் போல குதூகலித்து மகிழ்ந்தனர். எதிர்வரும் ஆண்டிற்காக நேரசூசியை சிறப்பாக தயாரித்த மகிழ்வில் இதுவும் இணைந்து கொள்ள மகிழ்ச்சி இரட்டிப்பாகியது.

அதிபர் ஆனந்தப் பெருமிதத்துடன் "எனது அன்பான சகோதர ஆசிரியர்களே நாம் யாவரும் ஒன்றிணைந்து திட்டமிட்டால் எமது இளையவர்கள் நிச்சயம் நாளை சிறந்த பிரஜைகளாவர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இன்று போல் என்றும் ஒன்றாக இணைந்து பயணிப்போம் அனைவருக்கும் நன்றிகள்" எனக் கூறி எல்லோரையும் வழியனுப்பினார். கந்தையா வாத்தியார் அதிபர் அருகில் வந்து தம்பி நான் எத்தனையோ பாடசாலைகளில் கடமையாற்றினான். ஆனால், இன்றைக்கு என்ர சேவைக்கு தேசிய அங்கீகாரம் கிடைச்சிருக்கு. நாங்கள் கஷ்ரப்பட்டு வழிகாட்டினால் முன்னுக்கு வர எங்கள் குழந்தைகள் தயாராக இருக்கினம். நாங்கள் தான் கடமைகளைத் தட்டிக் கழிக்கிறம். இந்த வெற்றி தொடரவேணும். "அவர் நாதளத்தது "ஓம் சேர் இது உங்கட அர்ப்பணிப்பான சேவைக்கு கிடைத்த பரிசு. நாங்கள் வழிகாட்டினால் எங்கட பிள்ளைகள் தடம் மாறாதுகள் சேர். இன்றைக்கு நாங்கள் போட்ட நேரசூசி போல திட்டமிட்டு வழிப்படுத்தினால் நாளைய தலைவர்களை நாமே உருவாக்கலாம். சரி சேர் நேரமாகுது போய்வருவோம்" என விடை பெற்றுக் கொண்டார்.

மறுநாள் காலை பத்திரிகையில் வெளியான தமிழினியின் சாதனையும் அதனால் அப்பாடசாலை அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்டதையும் அறிந்த மாணவர்களும் ஆசிரியர்களும் புதிய உற்சாகத்துடன் பாடசாலை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# U.S HOTEL & RESTAURANT



No.853, Hospital Road, Jaffna, Sri Lanka.
Tel : 021 222 1017 / 021 221 2627 Mob : 077 00 83 000

Royal

றோயல்
சுத்தமான குளுக்கோஸ்

றோயல்
சுத்தமான தேன்

றோயல்
சுத்தமான பசு வாய்




Packed by : Royal Industries® Colombo - Jaffna
Marketed by : சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.இல : 021 222 2567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org